# கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு

டாக்டர் (திருமதி) எம். எஸ். சாந்தா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை - 600 113.

# கன்னடத்தில்
# காரைக்காலம்மையார் வரலாறு

டாக்டர் (திருமதி) எம். எஸ். சாந்தா
*தமிழ் விரிவுரையாளர்,*
ராணிமேரிக் கல்லூரி, சென்னை.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை - 600 113.

தாமரைத் திரு. வ. சுப்பையா பிள்ளை
அறக்கட்டளை சொற்பொழிவு - 4
(23, 24-8-93)

Thamarai Thiru. V. Subbiah Pillai Endowment Lecture - 4

## BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title | : | **Kannadathil Karaikkal Ammaiyar** |
| Editor | : | **DR. M.S. SHANTHA**<br>Department of Tamil<br>Queen Mary's College, Chennai. |
| Publisher and copy right | : | International Institute of Tamil Studies, Tharamani, ChennaI - 113. |
| Publication No. | : | 268 |
| Date of Publication | : | 1997 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Paper used | : | 16 kg. white Printing paper |
| Size of the book | : | Demy 1/8 |
| Price | : | Rs. 20/- |
| No. of pages | : | 92 |
| No. of copies | : | 1000 |
| Typesetting | : | Computer Unit, IITS, Chennai - 113. |
| Printers | : | Sri Vignesh Printers, Chennai - 33. |
| Subject | : | Biography of Karaikkal Ammaiyar. |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113.

# அணிந்துரை

தமிழகத்தில் சமணம், பௌத்தம் தழைத்தோங்கிய காலத்தில் வடநாட்டில் இருந்து தமிழகத்துக்கு வைதீகம் நுழைந்தது. வேதக் கருத்துக்களையும் வைதீக எண்ணங்களையும் அம்மதம் தமிழ் மக்களிடம் பரப்பியது.

தமிழ் மக்களின் காலடிச் சுவடுகள் கூடத் தெரியாமல் மறைக்கப்பட்ட அந்த இருண்ட காலத்தில் ஒளிக்கதிர்களைப் பாய்ச்சியவர்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆவர். இறைவனைத் தமிழ் இசையால் நாயன்மார்களும், ஆழ்வார்களும் போற்றிப் பரவினர். தமிழ் மக்களிடையே பிணைந்திருந்த சாதிக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து நாயன்மார்களும் ஆழ்வார்களும் மக்களை நோக்கிச் சென்றனர். பக்தி இயக்கத்தை மக்கள் இயக்கமாக்கிய பெருமை நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் சாரும்..

தமிழகத்தினின்றும் புறப்பட்ட பக்திப் பெருவெள்ளம் இந்தியத் துணைக்கண்டம் வரை பரவிய பாங்கினை மேற்சுட்டிய புராணங்கள் வழி அறியலாம்.

தேவாரம் பாடிய மூவருள் மூத்தவர் காரைக்கால் அம்மையார். சைவச் சமயக் குரவர் 63 நாயன்மார்களுள் நின்றசீர் நெடுமாறனின் மனைவி மங்கையர்க்கரசி, சுந்தரரின் தாயார் இசைஞானியார், 'புனிதவதி' என்ற இயற்பெயர் கொண்ட காரைக்கால் அம்மையார் ஆகிய மூவர் மகளிர் ஆவர்.

அம்மூவருள்ளும் இயலிலும், இசையிலும், கல்வியிலும், கேள்வியிலும் திறம் உடையவர் காரைக்கால் அம்மையார். இறைவனால் 'அம்மையே' என்று அழைக்கப்பட்ட சிறப்புப் பெற்றவர்.

பாடல் புனையும் ஆற்றல் பெற்ற அம்மையார் 'அற்புதத் திருவந்தாதி', 'திருவிரட்டை மணிமாலை', 'திருவாலங்காட்டு மூத்த பதிகங்கள்' முதலிய நூல்களைப் படைத்துள்ளார். மேலும் அந்தாதி, பதிகம், இரட்டைமணிமாலை என, புதிய இலக்கிய வடிவங்களைத் தமிழில் உருவாக்கித் தந்துள்ளார். அவ்வகையில் காரைக்கால் அம்மையாரின் இலக்கியப் பணி முதன்மை கொண்டதாகவும் சிறப்பு வாய்ந்ததாகவும் விளங்குகிறது.

பிறவாமை வேண்டும்; பிறப்பு உண்டேல் உன்னை மறவாமை வேண்டும்; நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க வேண்டும் என்று மூன்று வரங்களை இறைவனிடம் கேட்டுப் பெற்றவர். இறை அன்பில் திளைத்தவர்.

தமிழிசைக்குக் காரைக்கால் அம்மையார் தாயாக விளங்கினார் என்ற கருத்தும் ஆய்வுலகில் உள்ளது.

துத்தங் கைக்கிளை விளரிதாரம் உழைஇளி யோசைபண் கெழுமப்பாடிச் சச்சரி கொக்கரை தக்கையோடு தகுணிதம் துந்துபி தாளம் வீணை மத்தளங் கரடிகை வன்கைமென்றோல் டமருகங் குடமுழா மொந்தை வாசித் தத்தனை விரவினோ டாடுமெங்கள் அப்பனிடந் திருவாலங் காடே எனும் பாடலை இதற்கு எடுத்துக் காட்டாகக் காட்டலாம்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையினும், நம்பியாண்டார் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியிலும் காரைக்கால் அம்மையாரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆயின் அவர் வாழ்க்கை வரலாற்றை முழுமையாகத் தந்தவர் சேக்கிழார் ஆவார். இவர் பெரியபுராணத்தில் காரைக்கால் அம்மையாரின் வாழ்க்கை வரலாற்றை விரிவாகப் பாடியுள்ளார்.

தாமரைத் திரு. வ. சுப்பையா பிள்ளை அறக்கட்டளைச் சொற்பொழிவு - 4, 'கன்னடத்தில் காரைக்கால் அம்மையார்'. நிறுவனத்தில் 23, 24.8.93 - இல் நடத்தப்பட்ட இச்சொற்பொழிவை நிகழ்த்தியவர் திருமதி முனைவர் எம். எஸ். சாந்தா அவர்கள். இச்சொற்பொழிவு இப்பொழுது நூலாக வெளிவருகிறது. இந்நூலில் இவர் காரைக்கால் அம்மையாரின் வாழ்வும் பணியும் பெருமையும் தமிழகத்தைத் தாண்டி கருநாடகத்தில் கவிஞரால் பாராட்டப் பெற்ற பாங்கினை நன்கு விளக்கியுள்ளார்.

63 நாயன்மார்களைப் பாடிய வீரசைவ சமயத்தைச் சார்ந்த கருநாடகக் கவிஞர்கள் காரைக்கால் அம்மையாரைப் பற்றிக் குறிப்பிடும் கதை நிகழ்ச்சி இந்நூலில் அழகுற விளக்கப்படுகிறது. இப்பாங்கு போற்றுதற்குரியது.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத் துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர் அவர்களுக்கும், எங்கள் இதயங்கனிந்த நன்றி. இவ்வறக்கட்டளையை ஏற்பாடு செய்து சிறப்புற நடத்திய முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கும், நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீவிக்னேஷ் அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

இயக்குநர்

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழகம் தந்த தவச்செல்வி | 1 |
| 2. | காரைக்காலம்மையார் வரலாறும் காலமும் | 6 |
| 3. | சூழலும் படைப்புகளும் | 24 |
| 4. | கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு | 44 |
| 5. | அற்புதத் திரு | 65 |

# 1. தமிழகம் தந்த தவச்செல்வி

ஆன்ம ஞானத்தையும், இறைபக்தியையும் இரு கண்களாகக் கொண்டது இந்திய நாடு. தான்யார், தன்னைப் படைத்தவர் யார்? தானாகிய ஆன்மா, தன்னைப் படைத்தவனாகிய பரம்பொருளோடு எவ்வாறு இணைகின்றது? உண்மையான ஞானம் எது? என்னும் மெய்யுணர்வின் விளைவாக இந்நாட்டில் தொன்றுதொட்டு வேதங்களும் புராணங்களும் ஆகமங்களும் உபநிடதங்களும் சமயங்களும் இலக்கியங்களும் தோன்றி வந்துள்ளன.

இந்திய நாட்டு ஆன்ம சிந்தனை வரலாற்றில் - பக்திநெறி வரலாற்றில் தமிழகத்திற்கும் தனித்ததொரு இடமுண்டு. சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் தந்த பக்தி இலக்கியத்தால், பக்தியின் மொழி தமிழ் என்ற சிறப்பினைத் தமிழ்மொழி அடைந்துள்ளது. இப்பெரியோர்கள் அடியார்களுக்குச் செய்த தொண்டால் சமுதாயத்திற்கும், தம் பக்திப் பாடல்கள் படைப்பால் இலக்கியத்திற்கும் தொண்டாற்றியுள்ளனர்.

தமிழகத்தின் சைவ பக்தி இலக்கியத்தின் எழுஞாயிறாக இலங்குபவர் காரைக்காலம்மையார். தமிழகம் தந்த தவச்செல்வி, சிவஞான செந்திரு ஆகிய இவ்வம்மையார் சைவத் திருமுறைகளின் படைப்பிற்கு முன்னோடியாய்த் திகழ்கின்றார். ஆன்ம ஞானம், ஆன்ம சுதந்திரம், ஆன்ம முக்தி ஆகியவற்றைப் பெற்றுப் பெண் குலத்திற்குப் பெருமை தேடித் தந்தவர் இவ்வம்மையார்.

நாயன்மார் அறுபத்து மூவருள் மகளிர் மூவரே. அவருள்ளும் தத்துவச் செறிவும், மெய்ஞ்ஞான உணர்வும் இணைந்த இலக்கிய நயம் வாய்ந்த எளிய, இனிய பக்திப் பாடல்களைப் பாடிய பெருமைக்குரியவர் காரைக்காலம்மையார் மட்டுமே. சமய சாதனை, ஆன்ம உரிமைச் சாதனை, இலக்கிய சாதனை மூன்றும் புரிந்த மெய்ஞ்ஞானியாகிய இவ்வம்மையார், தமிழ்த்தாய் இவ்வுலகிற்கு ஈந்த அருள் ஞானப்புதல்வி எனலாம்.

## புத்திலக்கிய முன்னோடி

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியம் மனிதர்களின் அடிப்படை உணர்வுகளாகிய போரையும் காதலையும் திணை துறை வகுத்துப்பாடி மகிழ்ந்தது. காப்பியங்கள் சாதனை புரிந்த தலைவர்

போற்றுதலாக விரிந்தன. பக்தி இலக்கியங்கள் மானுடக் காதலை விடுத்து இறை காதலாகவும் மனிதனைப் புகழ்வதை விடுத்துப் பரமான்மாவைப் பாடுவனவாகவும் ஆன்ம இறை தொடர்பினைத் தேடுவனவாகவும் விளங்குகின்றன. இத்தகைய பக்தி இலக்கியத்தின் - சிறப்பாகச் சைவ பக்தி இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்பவர் காரைக்காலம்மையார். நாயன்மாருள் காலத்தால் முற்பட்ட இம்மாதரசி பல இலட்சியப் புதுமைகளைச் செய்துள்ளார்.

இசையால் இறைவனைப் பாடும் பதிகப் பெருவழியைத் தொடங்கி வைத்தமை; பதிகத்தின் திருக்கடைகாப்புப் பாடலில் பாடுபவர் பெயர், பாடுவோர் பெறும் நலன்கள் ஆகியவற்றைக் கூறும் முறையை அமைத்தமை;

அந்தாதி யாப்பைப் பயன்படுத்தியமை;

முதன்முதலாகத் தமிழ் தோத்திரப் பாடல்களில் சிவபெருமான் திருக்கூத்தைக் கூறியமை;

ஆன்ம அனுபவ இலக்கியமாக - புத்திலக்கிய வகையாகப் பேய் வடிவம் பெற்று இறைவன் ஊழிக் கூத்தைக் கண்டு, இடுகாட்டரங்கில் பேய்கள் புடைசூழ அவன் ஆடும் காட்சியைப் பாடியமை ஆகியவை காரைக்காலம்மையார் செய்த புதுமைகளாகும். இவரது படைப்புகள் பதினோராம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன.

**சமய உலகில் காரைக்காலம்மையாரின் தனிச்சிறப்பு**

ஆன்ம ஞானத்திலும், உண்மைப் பொருளை நாடும் வைராக்கியத்திலும், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் இறையன்பிலும் தமிழகம் பெருமை மிக்கது. இப்பெருமையில் மகளிர் பெறும் இடம் யாது என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

தான்பெற்ற மகவைத் தாலாட்டி மகிழும்போதே ஆர்ஆரோ ஆராரோ - நீ யாரோ நானாரோ என்று தத்துவ அறிவைப் புகட்டுகின்றாள் தமிழ் மங்கை. வீட்டிலும் வெளியிலும் தெய்வ வழிபாடு செய்யும் உரிமையும் பெற்றிருக்கின்றாள். ஆனால் பெரும்பாலும், தனித்துச் சென்று தன் ஆன்ம உயர்வையோ, வீட்டுப் பேறையோ நாடாமல், கணவனையும், குடும்பத்தையும் சார்ந்தே அவளது சமயப்பணி அமைகின்றது.

காரைக்காலம்மையார் காலத்திற்கு முன்னர் சங்க காலத்தில் பல பெண்பாற்புலவர்கள் கவிபாடும் புலமை வாய்ந்தவர்களாக விளங்கியிருக்கின்றனர். இப்புலவர்களுள் அஞ்சாமையும், அரசியலறிவும், படைப்பாற்றலும் வாய்ந்த ஔவையார் குறிப்பிடத்தக்கவர். ஆனால் இவரைப் பக்தி இலக்கியப் படைப்பாளர் என்று கூற இயலாது.

சமண, பௌத்த சமயங்களில் பெண் துறவிகள் இருந்துள்ளனர். ஆனால் சைவ, வைணவ சமயங்களில் இத்தகைய பெண் துறவியர் இருந்ததாகத் தெரியவில்லை. மணிமேகலை காப்பியத்தின் தலைவி மணிமேகலை வஞ்சிமாநகரில் சமயக் கணக்கர் பலரது சமய உரைகளைக் கேட்டாள் என்று மணிமேகலை கூறுகின்றது. குண்டலகேசி, நீலகேசி, ஆகிய நூல்களால், மகளிர் சமய வாதம் புரிந்தமை புலனாகின்றது.

அறுபத்து மூன்று நாயன்மாருள் மகளிர் மூவரே என்பது ஏற்கெனவே கூறப்பெற்றது. அம்மூவர் காரைக்காலம்மையார், நின்றசீர் நெடுமாறன் மனைவியாகிய மங்கையர்க்கரசியார், சுந்தரர் தாயார் இசை ஞானியார் ஆகியோராவர். திருநாவுக்கரசர் சகோதரியாராகிய திலகவதியாராலும், மங்கையர்க்கரசியாராலும் தமிழகத்தில் சைவ சமயம் தழைத்தது. நாயன்மார் மனைவியரின் ஒத்துழைப்பால் வளர்ச்சி பெற்றது. செம்பியன்மாதேவி போன்ற அரசமாதேவியர் ஆலயத் திருப்பணியால் மலர்ச்சியுற்றது. தேவரடியாராக மகளிர் ஆலயத்தில் ஆடிப்பாடி இறைபணி புரிந்துள்ளனர்.[1] கோவிலுக்கே தங்களை அடிமையாக்கிக் கொண்டு திருப்பணி செய்துள்ளனர்.[2] இவ்வாறெல்லாம் மகளிர் சமய உலகில் ஈடுபட்டிருந்திருப்பினும், சமய தத்துவம் உணர்ந்த ஞானிகளாய், சாதனை புரிந்த யோகிகளாய் மெய்யுணர்ந்த அறிஞர்களாய், சமயவாதம் புரிந்தவர்களாய் இலக்கியப் படைப்பாளர்களாய் விளங்கிப் புகழ்பெற்ற மகளிர் மிகமிகச் சிலரே. விரல்விட்டு எண்ணத்தக்க அளவினரே.

வேதத்தில் உலோபா முத்திரையும், உரோமசாவும், வாக்தேவியும் கல்வியும், ஞானமும் பெற்றவர்களாய் விளங்குகின்றனர். உபநிடத்தில் மைத்கேயியும், கார்கியும் உலகியலை விடுத்து முக்திநெறி அடைய விரும்பிய தத்துவ ஞானிகளாகத் திகழ்கின்றனர். காஷ்மீரத்து லல்லேசுவரி, மகாராட்டிரத்து பக்த ஜனாபாயி, இராஜஸ்தானத்து மீரா, கருநாடகத்தின் அக்கமாதேவி, தமிழகத்துக் காரைக்காலம்மையார், ஆண்டாள்,

1. மா.இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி, பக்.197-198
2. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்; பக்.317-319

இடைக்கால ஔவையார் ஆகியவர்கள் மட்டுமே ஆன்ம அனுபவத்தை வெளிப்படுத்தும் தத்துவ ஞானம் மிக்க இறையுணர்வு கொண்ட, படைப்பாற்றல் வாய்ந்த பெண்மணிகளாகக் குறிப்பிட முடிகின்றது. தமிழகத்தைச் சேர்ந்த காரைக்காலம்மையார், (இடைக்கால) ஔவையார், ஆண்டாள் ஆகிய மூவருள், ஆண்டாளும் (இடைக்கால) ஔவையாரும் திருமணமே செய்து கொள்ளாது இறையுணர்வில் திளைத்தவர்கள். இல்லறத்தில் வாழ்ந்தபோதே அரன் நினைவும், அடியார் தொண்டுமாக வாழ்ந்து, இல்லறத்தை நீத்த பின்னர் இறைஞானமும், தத்துவ அறிவும் மேலும் மிகுதியாக, இறை தரிசனமும் பெற்றுப் பக்திப் பனுவல்களும் பாடி அரனடியின் கீழ் என்றும் இருக்கும் பேறும், தெய்வமாக மக்களால் வழிபடப்பெறும் பேறும் பெற்றவர் காரைக்காலம்மையார் ஒருவரே.

## அம்மையார் வழிபாடு

தமிழ்நாட்டில் முதன்முதலில் வணங்கப்பெற்ற சைவ நாயன்மார் காரைக்காலம்மையாரே ஆவார் என்பர் க.த. திருநாவுக்கரசு.[3]

> பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை யென்றும்
> மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
> அறவா நீயாடும்போதுன் அடியின் கீழிருக்க.......... (பெரிய:காரை:60)

என்பது அம்மையார் இறைவனை வேண்டிப் பெற்றவரமாகும். இவ்வேண்டுகோளின் சிறப்பையும், இறைவன் ஆடலுக்குத் தாளமிசைத்துக் கீதம்பாடி அவன் திருவடிக்கீழ் அம்மையார் என்றும் இருக்கும் மாண்பையும் உணர்ந்த தமிழர்கள் அம்மையாருக்குச் சிலையமைத்து வழிபாடு செய்துள்ளனர். கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி. எட்டாம் நூற்றாண்டு வரை செய்யப்பட்ட ஊர்த்துவ தாண்டவ நடராசர் திருமுன்னர், ஒட்டிய வயிறும், புடைத்துக் கொண்டு காணப்படும் விலா எலும்புகளும், குழிவிழுந்த கண்களும் உடைய ஒரு பெண் இரு கைகளால் தாளம் போடும் நிலையில் செப்புச்சிலைகள் செய்யப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் கூத்தபிரான் வழிபாட்டுடன் இச்சிலைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.[4] இதற்குப் பின்னர் கூத்தனின் ஆனந்தத்தாண்டவச் சிந்தனை வளர்ச்சியுற்ற காலத்தில் மாணிக்கவாசகரின் சிலையை அம்பலவாணரின் திருமுன்பு வைத்து வழிபடும் வழக்கம் ஏற்பட்டது என்பர் க.த. திருநாவுக்கரசு.[5]

---

3. க.த. திருநாவுக்கரசு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப்பண்பாடு; ப.199
4. மேற்படி ப.200    5. மேற்படி ப.201

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் தமிழ்நாட்டில் கடல் வணிகர்கள் "காரைக்கால் பேயை"த் தம் குலதெய்வமாகக் கருதிப் போற்றி வழிபட்டனர். தாங்கள் அலைகடல்களைக் கடந்து வாணிபம் செய்யச் சென்றபொழுது தங்கள் குல தெய்வமாகிய அம்மையாரின் சிலையையும் தங்களுடன் எடுத்துச் சென்றனர். இவ்வாறு வணிகத்தின் பொருட்டுத் தென்கிழக்காசிய நாடுகளாகிய தாய்லாந்து, காம்பூச்சியா, இந்தோனேசியா, பாலி முதலிய இடங்களில் குடியேறிய தமிழர்களால் அம்மையாரின் வழிபாடு அவ்விடங்களிலும் பரவியது. அம்மையாரின் சிலைகள் செம்பிலும், கல்லிலும் செய்யப்பெற்று, கூத்தர்பிரான் திருமுன்னர் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டன.[6]

கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வரை காரைக்காலம்மையார் வழிபாடு தென்கிழக்காசிய நாடுகளில் பரவியிருந்தமைக்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. நடராசர் வழிபாட்டுநெறி (ஊழிக்கூத்து) காரைக்காலம்மையார் வழிபாட்டுநெறியுடன் பின்னிப்பிணைந்து இருந்தமை இச்சான்றுகளால் புலனாகும்.[7] மேலும் அங்குக் கட்டப்பட்ட சிவன் கோவில்களில் அம்மையார் பாடல்கள் பாடப்படுவதற்கான நிவந்தங்களும் அக்கோயிலைக் கட்டிய அரசர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.[8] அம்மையார் வழிபாடு தமிழகத்தில் மட்டுமன்றி அயல்நாடுகளிலும் பரவியிருந்தமை இச்சான்றுகளால் தெளிவுபடுகின்றது.

### பிறமொழிகளில் அம்மையார் வரலாறு

காரைக்காலம்மையார் வழிபாடு மட்டுமன்றி, அவரது வரலாறும் வடமொழி, தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளிலும் பரவியுள்ளமை அறிந்து போற்றற்குரியது. சிறப்பாக, தமிழகத்து நாயன்மார்கள் வரலாறும், திருத்தொண்டுகளும், கி.பி.12ஆம் நூற்றாண்டில் கருநாடகத்தில் வீரசைவ மறுமலர்ச்சிக்கு, அக்காலத்தில் கருநாடகம் தந்த சமயஞானி, சீர்திருத்தச் சிந்தனையாளர், புரட்சிவீரர் பசவண்ணருக்கு உறுதுணையாயமைந்தன என்பது அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ள உண்மையாகும். அறுபத்து மூவர் வரலாறுகள் கன்னடமொழியில் பல புலவர்களால் பாடப் பெற்றுள்ளன. அவ்வரலாறுகளுள் காரைக்காலம்மையார் வரலாறு கன்னடத்தில் எவ்வாறு பாடப்பெற்றுள்ளது என்றறிந்து கொள்வதன்மூலம் அம்மையாரின் சிறப்புகளை மேலும் உணர்ந்து போற்றற்கியலும்..

✡ ✡ ✡

---

6. மேற்படி ப.200 7. மேற்படி ப.156 8. மேற்படி

## 2. காரைக்காலம்மையார் வரலாறும் காலமும்

**வரலாற்றாதாரங்கள்**

அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவரான காரைக்காலம்மையாரின் வாழ்க்கை சேக்கிழாரின் பெரியபுராணத்தில் விரிவாகக் கூறப் பெற்றுள்ளது. பெரியபுராணத்தில் திருநின்ற சருக்கத்தில் காரைக்காலம்மையாரின் வரலாற்றினை 66 பாடல்களில் சேக்கிழார் பாடியுள்ளார்.

பெரியபுராணத்திற்குத் தொகை வகை நூல்களாக அமைவன சுந்தரரின் திருத்தொண்டத்தொகையும், நம்பியாண்டார்நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும் ஆகும். "பேயார்க்குமடியேன்" என்று தம் திருத்தொண்டத் தொகையில் அம்மையாரைக் குறிப்பிட்டுள்ளார் சுந்தரர். நம்பியாண்டார்நம்பி தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில்,

நம்பன் றிருமலை நான்மிதியே னென்று தாளிரண்டு
மும்பர் மிசைத் தலையானடந் தேறவுமை நகலும்
செம்பொன் னுருவ 'னென்னம்மை' யெனப் பெற்றவள் செழுந்தேன்
கொம்பி னுகுகாரைக் காலினின் மேயை குலதனமே (29)

என்று எடுத்துரைக்கின்றார்.

காரைக்காலம்மையாரின் வாழ்வில், உலகியலைத் துறந்து, இறைவனை வேண்டிப் பேய்வடிவம் பெற்றது ஒரு வியத்தகு நிகழ்ச்சியாகும். அம்மையாரே, தம்மைக் 'காரைக்காற்பேய்' என்று தாம் பாடிய அற்புதத் திருவந்தாதியிலும்; திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களிலும் கூறிக் கொண்டுள்ளார். சுந்தரர் இதனைக் கருத்திற்கொண்டு 'பேயார்க்கும்' என்று மட்டும் குறிப்பிட்டார் எனலாம்.

காரைக்காலம்மையார் கயிலைமலையில் தலையால் நடந்த நிகழ்ச்சியையும், இறைவி அதைக்கண்டு சிரிக்க, இறைவன், மலையேறி வரும் பேய் வடிவம் என்னம்மை என்று கூறிய சிறப்பினையும் நம்பியாண்டார் நம்பி எடுத்துக் காட்டியுள்ளார்.

பதிகப் பெருவழி சிறக்கத் தோன்றியவர் என்று சேக்கிழாரால் போற்றப்பெறும் திருஞான சம்பந்தருக்கு முன்பே பதிகம் பாடி அவருக்கு வழிகாட்டியாயமைந்தவர் அம்மையார். ஞானசம்பந்தரின் தேவாரப்பாடலில்,

வணங்கும் சிறுத்தொண்டர் வைகலேத்தும் வாழ்த்தும் கேட்டு
அணங்கும் பழையனூர் ஆலங்காட் டெம்மடிகளே

என்று இறைவனின் தூக்கிய திருவடியின் கீழ் அம்மையார் நாடோறும் போற்றிப் பரவுவதையும், அதை இறைவன் கேட்டு அப்பாடல்களின் இசைக்கு ஏற்ப அண்டமுற நிமிர்ந்தாடுகின்றான் என்ற சிறப்பினையும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறப் பெற்றவற்றுள் பெரியபுராணம் கூறும் அம்மையார் வரலாறே முழுமையாக அமைந்திருப்பதால் அவ்வரலாறே இவண் தரப்படுகின்றது.

## பிறப்பு

கடலலைகள் சங்கு கொண்டு கரைவந்து உலவி மீளும் நவினார் அழகுடைய காரைக்கால் நகரில் பெருமையும், வாய்மையும் நிறைந்த வணிகர் பெருங்குடியின் தலைவனாக விளங்கியவன் தனதத்தன் என்பவன். அவன் செய்த தவப்பேற்றால் அவனது குலம் விளங்க முத்தித் திருவின் தெய்வமாகிய பராசக்தியே வந்து பிறந்தது போன்று அவனுக்கு மகளாகக் காரைக்காலம்மையார் பிறந்தார். அம்மையாரின் தந்தையின் பெயர்தான் தனதத்தன் என்று அறியப்படுகின்றதே தவிரத் தாயின் பெயர் அறியப்படவில்லை. காரைக்காலம்மையாருக்குப் பெற்றோர் இட்ட பெயர் புனிதவதி என்பதாகும். தமிழகத்து வணிகர் குலம் இருபெண்மணிகளால் இறவாப்புகழ் பெற்றுள்ளது. சிலப்பதிகாரத்தலைவி கண்ணகி ஒரு பெண்மணி. நாயன்மாராகிய காரைக்காலம்மையார் ஒரு பெண்மணி. இருவருமே தெய்வமாகப் போற்றப்படுகின்றனர், வழிபடப்படுகின்றனர் என்பது இவண் சுட்டிக்காட்டத்தக்கது.

## இளமைப்பருவம்

புனிதவதியாரின் இளமைப்பருவம் இறையுணர்வு பொலிந்து விளங்கியது. மொழி பேசத் தொடங்கிய மழலைப் பருவத்திலேயே, நடை பயிலத் தொடங்கிய குழந்தைப் பருவத்திலேயே சிவபெருமான் திருவடிக்கு ஆட்படும் எல்லையற்ற பேரன்பு ததும்பும் சொற்களைப் பேசத் தொடங்கினார் புனிதவதியார். இதனை,

வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் லடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காதற் றதும்பவரு மொழிபயின்றார்
(பெரிய. காரை : 3)

என அழகுற உரைக்கின்றார் சேக்கிழார்.

இவ்வாறு அம்மையார் குழவிப் பருவத்திலேயே சிவபக்தியுடன் விளங்கியமைக்கு அவரது பாடலே அகச் சான்றாயமைகின்றது.

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் (1)

என்றே தாம் பாடிய அற்புதத் திருவந்தாதியைத் தொடங்கியுள்ளார் காரைக்காலம்மையார்.

அழகின் கொழுந்து வளர்வதுபோல் வளர்ந்துவந்த புனிதவதியாரின் இறையன்பும் உடன்வளர்ந்து வந்தது. சிறுமியருடன் வண்டலயர்ந்து விளையாடும் போதுகூடப் பிறைசூடிய பெம்மானின் சொற்களையே பேசினார் புனிதவதியார். இதனை,

வண்டல் பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
யண்டர்பிரான் றிருவார்த்தை யணையவரு வனபயின்று
தொண்டர்வரிற் றொழுதுதா தியர்போற்றத் துணைமுலைகள்
கொண்ட நுசும் பொதுங்குபதக் கொள்கையினிற் குறுகினார்.
(பெரிய. காரை : 5)

என்று சேக்கிழார் விளக்கியுள்ளார்.

இளமைப் பருவத்திலேயே அரனைப் பற்றிப் பேசுவதோடன்றிச் சிவனடியார் தொண்டிலும் புனிதவதியார் நாட்டங்கொண்டிருந்ததைத் தொண்டர்வரின் தொழுது என்று இப்பாட்டில் சேக்கிழார் புலப்படுத்தியுள்ளார். செல்வவளம் நிறைந்த வணிகர் குடியில் ஒரே மகளாய்ப் பிறந்த புனிதவதியாருக்குத் திருத்தொண்டர்களுக்குத் தொண்டு புரிவதற்குரிய மனமும், செல்வவளமும் வாய்த்திருந்தது. தொண்டர் வழிபாட்டில் புனிதவதியாருக்கு இருந்த ஈடுபாடே பின்னர், அவர் வாழ்க்கையில் ஒரு பெரிய திசைமாற்றமாக அமைந்ததும் இவண் சிந்திக்கத்தக்கது.

பின்னர் அவருடைய கணவன் பரமதத்தன் அவரைத் தெய்வமென்று போற்றவும், க்யிலையில் 'தாயுமிலி தந்தை யுமிலிதான் தனியன்' ஆகிய சிவபெருமானே அவரை அம்மை என்றழைக்கவும் காரணமாயமைந்தது அவர் செய்த அடியார் தொண்டே ஆகும்.

மறித்து மடநெஞ்சே வாயாலும் சொல்லிக்
குறித்து தொழுதொண்டர் பாதம் (40)

என்று தாம் பாடிய அற்புதத் திருவந்தாதியிலும் பாடியுள்ளார் புனிதவதியார்.

### திருமணம்

பேரழகுடன் வளர்ந்துவந்த புனிதவதியார் இல்லகவாப் பருவம் எய்தினார். இந்நிலையில் கடல் சூழ்ந்த நாகைப்பட்டினத்திலிருந்த நிதிபதி என்னும் பெருங்குடி வணிகன் மகன் பரமதத்தனுக்குப் புனிதவதியாரை மணம் முடிக்க விரும்பி மூதறிஞர்கள் காரைக்கால் வந்தனர். தனதத்தனும் அவர்கள் கருத்தையறிந்து பெருமகிழ்ச்சியுடன் திருமணத்திற்கு இசைந்தான். நன்னாளில் நூன்முறைப்படி திருமணம் நிகழ்ந்தது. புனிதவதியாருக்கும், பரமதத்தனுக்குமிருந்த நுட்பமான பொருத்தமின்மையைக் காட்டுவது போல்,

> தளிரடிமென் னகைமயிலைத் தாதவிழ்தார்க் காளைக்குக்
> களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணம் செய்தார்கள்
>
> (பெரிய. காரை : 11)

என்று நயமுறப் பாடியுள்ளார் சேக்கிழார்.

### இல்லற வாழ்வு

திருமணமானபின் மகளிர் கணவர் ஊர் சென்று இல்லறம் நடத்தலே மரபு. ஆனால் புனிதவதியார் தன் ஒரே மகளாகவிருந்ததால், காரைக்காலிலேயே மகளையும் மருமகனையும் இல்லறம் அமைத்துப் பெருஞ்செல்வத்தைத் தந்தான் தனதத்தன். பரமதத்தனும் தன் குடிமரபிற்கேற்ப வணிகத்தில் ஈடுபட்டுச் செல்வம் பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

இல்லறமாம் நல்லறம் நடத்தி வந்த புனிதவதியாரும் சிவபெருமாளின் திருவடியிடத்து நீங்காத அன்புடையவராய், அவ்வன்பு மேலும் பெருகிவர, இல்லறத்தின் பண்பு பிறழாமல் நடந்து வந்தார்.

### சிவனடியார் வருகை

சிவனடியார் தம் வீடுநோக்கி வந்தால் அவர்களுக்குத் திருவமுதளித்தும், அவர்களின் வயது, திருமேனி ஆகியவற்றின் தகுதியறிந்து பொன், நவமணி, செழுந்துகில் ஆகியவற்றின் தகுதியறிந்து குறிப்பறிந்து அன்போடு உதவியும், சிவபெருமானின் திருவடியிடத்து உள்ளன்பு மேலும் வளர்ந்துவர இல்லறம் நடத்தி வந்தார் புனிதவதியார்.

இந்நிலையில் ஒருநாள் பரமதத்தனிடம் வந்த சிலர், அவனிடம் இரு மாங்கனிகளை அளித்தனர். அக்கனிகளை ஏற்று அவர்கள் கருதி வந்த செயலை முடித்துத் தந்த பரமதத்தன் அக்கனிகளை ஏவலரிடம் தந்து தன் இல்லத்திற்கு அனுப்பினான். அக்கனிகளை வாங்கி வைத்தார் புனிதவதியார்.

அதுபோழ்து சிவனடியார் ஒருவர் மிக்க பசியால் உணவில்மிக்க வேட்கையுடன் புனிதவதியாரின் திருமனை புகுந்தார். அத்தொண்டரின் நிலையறிந்த புனிதவதியார் அடியார் பசியை விரைவில் தீர்க்கக் கருதி அடியார் பாதங் கழுவ நீர்தந்து, உண்கலம் இட்டு இனிய உணவிட்டார். கறியமுது செய்யப்படவில்லை. திருவமுது மட்டுமே அப்போது ஆக்கப்பட்டிருந்தது. சிவனடியார் விருந்தினராகவரின் அத்தனைவிடப் பெரும்பேறில்லை என்னும் அறிவோடு அன்போடு உணவிட்டார் அம்மையார். கணவன் பரமதத்தன் அனுப்பி வைத்திருந்த இருமாங்கனிகளில் ஒன்றை விரைந்து இட்டு, மகிழ்ச்சியோடு அடியாரை அமுது செய்வித்தார். முதுமையும், அதனால் வரும் தளர்ச்சியும், மிக்க பசியும் அயர்ச்சிதர, புனிதவதியாரின் இல்லம் வந்த அச்சிவனடியார் இன்னடிசிலையும், இனிய மாங்கனியையும் உண்டு, புனிதவதியாரின் செயலைப் பாராட்டிக் கொண்டு சென்றார்.

**அற்புத நிகழ்ச்சி**

காலைப் பொழுதில் சிவனடியார் உணவருந்திச் சென்றார். அவர் சென்றபின் பகற்போதில் பரமதத்தன் தன் இல்லம் எய்தி, நீராடி உணவருந்த அமர்ந்தான். புனிதவதியாரும் தம் கடமை நெறிக்கேற்பக் கணவனுக்கு உண்கலத்தில் அடிசிலும் கறிகளும் இட்டு, சிவனடியார் உண்டது போக எஞ்சியிருந்த ஒரு மாங்கனியையும் இட்டார்.

மன்னவியிட்ட மதுரம் நிறைந்த மாங்கனியினை உண்ட பரமதத்தன், ஆசை குறையாது ‘இன்னொரு கனியையும் இடுக’ என்றான். புனிதவதியாரும் அதனைக் கொண்டுவரச் செல்பவர்போல், அவ்விடம் விட்டகன்றார். ‘என்ன செய்வது’ என மனந்தளர்ந்தார். அந்நிலையில் இறைவன் அருளால் அதிமதுர மாங்கனியொன்று அவர் கரத்தில் வந்து சேர்ந்தது. அதனை மகிழ்ச்சியோடு கொண்டு வந்து கணவனின் உண்கலத்தில் இட்டார். அதனை உண்ட பரமதத்தன், அதன் சுவை, முன்னர்த்தான் உண்ட மாங்கனியின் சுவையைவிடப் பன்மடங்கு அதிகமாக இருப்பதை உணர்ந்தான். இது முன்னால் தந்த மாங்கனியன்று. மூவுலகிலும் பெறுதற்கரியது. இதனைப் பெற்றது வேறெங்கு? என்று புனிதவதியாரை வினவினான்.

இறைவனின் அருட்செயலை எங்ஙனம் எடுத்துரைப்பது என்று தயங்கினார் புனிதவதியார். கணவனுரை காவாது விடுத்தல் கற்புநெறியன்று என்று கருதிச் சொல்லாமல் இருக்கவும் இயலவில்லை. இந்நிலையில் உடல் நடுக்கமுற்று நடந்ததை உரைத்தார். இறையருள் என்று கூறக் கேட்டாலும், பரமதத்தன் தெளிவு பெறாதவனாகி, திருமகள் அனைய புனிதவதியாரை நோக்கி, 'இக்கனி செஞ்சடைப் பெருமான் அருளால் கிடைத்ததாயின் மற்றொரு குற்றமற்ற கனியினை அழைத்துத் தருக' என்றுரைத்தான்.

புனிதவதியார் அவ்விடம் விட்டகன்று 'இக்கனியை நீர் அளிக்கவில்லையெனில் என்சொல் பொய்யாகும்' என்று இறைவனை வேண்ட, இறைவன் திருவருளால் ஒரு மாங்கனி அவர் கரத்தில் வந்து பொருந்தியது. அதனைக் கணவன் கையில் தர, அவன் அதிசயித்து அதனைத் தன் கரத்தில் வாங்கினான். அக்கனி உடனே மறைந்தது. இதனால் அச்சம் மிகக் கொண்ட பரமதத்தன், மனந்தடுமாறி, புனிதவதியாரை 'மானிடப்பெண் அல்ல, தெய்வப் பெண்' என்றே கருதி, அவரை விட்டு நீங்கும் எண்ணங்கொண்டு, அதனை எவர்க்கும் சொல்லாமல் கணவன் மனைவி என்ற தொடர்பின்றி வாழ்ந்து வந்தான்.

### பரமதத்தன் நீங்குதல்

புனிதவதியாரை விட்டு நீங்கும் எண்ணங் கொண்டிருந்த பரமதத்தன், அதனை மனதிற் கொண்டு கடல் வாணிகம் செய்யக் கருதியிருப்பதாக அறிவித்தான். ஒரு பெரிய மரக்கலத்தில் நிறைய பொருள்களுடன் ஒரு நன்னாளில் கடல் கடந்து வாணிகம் செய்யச் சென்றான். கடல் வாணிகத்திற் பெருஞ்செல்வமீட்டிப் பாண்டிய நாட்டில் ஒரு துறைமுகப்-பட்டினத்திற் சென்று தங்கினான். இப்பட்டினத்தின் பெயர் யாதென சேக்கிழார் குறிப்பிடவில்லை. இஃது தூத்துக்குடி, சேதுக்கரை, குலசேகரன் பட்டினம் என்று கருதப்படும்[1] என்பர் சி.கே.சுப்பிரமணிய முதலியார்.

### பரமதத்தன் மறுமணம் புரிதல்

பரமதத்தன் அத்துறைமுகப் பட்டினத்திற்றங்கிச் செல்வம் பெருக்கி அங்கோர் வணிககுலக் கன்னியை மணந்தான். புனிதவதியாரை மணந்திருந்த செய்தி புறத்தே தெரியாமல் மறைத்து அம்மங்கையுடன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வரும் நாளில், பெருகும் ஒளிவிளக்குப் போல் ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையானான். தான் நீத்து வந்த புனிதவதியாரைத் தொழுதற்குரிய தெய்வமென்று கருதித் தன் குழந்தைக்குப் புனிதவதி என்றே பெயர் சூட்டினான். அம்மையாரின்

---

1. சி.கே. சுப்பிரமணிய முதலியார் (உரை) பெரியபுராணம்; ப.851.

இளமைப் பருவத்திருப் பெயராகிய புனிதவதி என்ற பெயரைப் பெண் குழந்தைகட்கு இடும் மரபில், முதற்குழந்தையாக அப்பெயரைச் சூட்டப்படும் பேறு பெற்றது அம்மகவு என்பது இவண் நினைத்து மகிழ்தற்குரியது.

### பரமதத்தனைப் புனிதவதியாரின் உறவினர் தேடி வருதல்

காரைக்காலில் புனிதவதியார் கற்புநெறியில் நின்று மனையறம் புரிந்து வாழ்ந்து கொண்டிருந்தார். புனிதவதியாரின் உறவினர், பரமதத்தன் பற்றிக் கேள்வியுற்று, அவன் இருந்த நிலையினையும் நெருங்கிய உறவினர் மூலம் கேட்டறிந்து, அவனிருந்த இடத்தில் புனிதவதியாரைக் கொண்டுபோய் விடுதல் கடமை என்று கூறினர். ஒரு பல்லக்கில் புனிதவதியாரை ஏற்றி, உறவினரும், தோழியரும் புடைசூழ அழைத்துச் சென்றனர். பரமதத்தன் இருந்தவூர் சென்று சேர்ந்து புனிதவதியாரை அழைத்து வந்த செய்தியை அவனுக்குச் சொல்லியனுப்பினர்.

இவ்வாறு புனிதவதியாரும் உறவினர்களும் வந்து சேர்ந்த செய்தியை அறிந்த பரமதத்தன் உள்ளத்தில் அச்சங்கொண்டு மறுமணம் செய்த மனைவியையும் தங்கள் குழந்தையையும் அழைத்துக் கொண்டு, “அவர்கள் இங்கு வருவதன்முன், நானே அங்குச் செல்வேன்” என்று கூறிச் சென்றான்.

### புனிதவதியார் பேய்வடிவம் பெறுதல்

சென்ற பரமதத்தன், மனைவியோடும், தளர்நடை நடந்த குழந்தையோடும் புனிதவதியாரின் திருவடியில் விழுந்து வணங்கி, “நான் உம்மருளால் வாழ்கிறேன். இச்சிறு குழந்தைக்கும் உங்கள் பெயரையே சூட்டியிருக்கின்றேன்” என்று கூறினான். புனிதவதியார் தம்கணவன் தம்மை வணங்கியதால் அச்சத்துடன் ஒதுங்கி நிற்க, அருகிலிருந்த உறவினர்கள் அவன் செயலைக் கண்டு, “உன் மனைவியை நீ ஏன் வணங்குகின்றாய்?” என்று வினவினர். பரமதத்தன், “இவர் மானிடரல்லர்; நற்பெருந் தெய்வமாவார். இதனை நானறிந்தே இவரை விட்டகன்றேன். என் மகவிற்கும் இவர் பெயரை இட்டேன். இதனால் இவரது பொற்பாதம் வணங்கினேன். அதனால் அவரை நீங்களும் வணங்குங்கள்” என்றுரைத்தான்.

வணிகன் உரைகேட்ட உறவினர்கள் திகைத்து ஒன்றும் கூறாது நின்றனர். புனிதவதியார் பரமதத்தன் சொற்கேட்டு சிவபெருமானைச் சிந்தித்து மனம் ஒன்றி ‘இவன் கொள்கையிது. இனிமேல் இவனுக்காகத் தாங்கிநின்ற அழகுதங்கிய தசைச்சுமையினை இங்கு நீங்கி, உன் திருவடிகளைப் போற்றும் பேய்வடிவம் அடியேனுக்கு வேண்டும்’ என்று

வேண்டினார். இறைவன் திருவருளால் தாம் வேண்டிய வரம் பெற்று உடம்பின் தசையையும் அதன் அழகையும் உதறி என்பு வடிவம் பெற்று விண்ணும் மண்ணும் வணங்கத் தக்க சிவகணவடிவம் பெற்றார்.

**பக்திப்பனுவல் பாடுதல்**

புனிதவதியார் பெற்ற பேய்வடிவங் கண்டு உறவினர் அஞ்சியகன்றனர். புனிதவதியார் உள்ளத்தில் எழுந்த ஒருமை ஞானத்தினால் அற்புதத் திருவந்தாதி என்னும் பக்திப்பனுவலைப் பாடினார். 'இறைவன் திருவடியைப் போற்றும் நற்கணத்தில் ஒன்றானேன் நான்' என்று விரும்பிப்பாடி இரட்டைமணிமாலையும் பாடினார்.

**கயிலை செல்லல்**

பின்னர் தம்முள் ஞானவுணர்வு பொங்கக் கயிலாயம் சென்று இறைவனை வழிபடச் சென்றார் புனிதவதியார். அவரது பேய்வடிவம் கண்டவர் அஞ்சி ஓடினர். 'இறைவன் என்னை அறிந்தாற் போதும். வாய்மையறியா இவ்வுலக மக்களுக்கு யான் எவ்வாறாயினென்?' என்று கூறிய புனிதவதியார் வடநாடு சென்று கயிலைமலையடைந்து, அங்குக் காலால் நடக்காமல் தலையால் நடந்து சென்றார்.

**அம்மை எனப்பெறல்**

இங்ஙனம் தலையால் நடந்துவந்த புனிதவதியாரின்மீது இறைவியின் திருவருள் நோக்குப்பட்டது. புனிதவதியாரைக் கண்டு வியந்து சிவபெருமானை நோக்கித் 'தலையால் நடந்து இங்கு ஏறிவரும் ஓர் எலும்பு உடம்பு பெற்ற இதன் அன்பு தான் என்ன?' என்று இறைவி கேட்க, இறைவன்,

> வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே! மற்றிப்
> பெருமைசேர் வடிவும் வேண்டிப் பெற்றனள்

என்றுரைத்தார். அருகில் வந்த புனிதவதியாரை நோக்கி, 'அம்மையே!' என்றழைத்து அருளிச் செய்தார். உடனே அம்மையார், 'அப்பா' என்றழைத்து இறைவனின் திருவடியில் விழுந்து வணங்கினார். இவ்வாறு இறைவனாலேயே 'அம்மையே' என்றழைக்கும் பேறு பெற்றவராகிய புனிதவதியார் தம்மை வணங்கியதும், 'நம்மிடத்து ஈண்டு வேண்டுவதென்ன? என்று இறைவன் கேட்க,

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே லுன்னை
யெஞ்ஞான்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
யறவா நீயாடும் போதுன் னடியின் கீழிருக்க வென்றார்.

காரைக்காலிற் பிறந்து கயிலை வந்து தம்மை வேண்டிய அம்மையார் வேண்டியவாறே அருளிச் செய்த சிவபெருமான், 'தென்னாட்டில், திருவாலங்காட்டில் நாம் ஆடும் ஆடலை எப்போதும் கண்டு மகிழ்ச்சி கொண்டு, எப்போதும் நம்மைப் பாடுவாய்' என்று அருளிச் செய்தார்.

திருவாலங்காடு சேர்தல்

மேற்கூறப் பெற்றவாறு இறையருள் பெற்ற அம்மையார், இறைவனை வணங்கி விடைபெற்றுத் திருவாலங்காட்டிற்குத் தலையால் நடந்து சென்று சேர்ந்தார். அங்கு ஈசன் அண்டமுற நிமிர்ந்தாடும் ஆடல்கண்டு, 'கொங்கை திரங்கி' என்று தொடங்கும் மூத்த திருப்பதிகம் ஒன்றைப் பாடினார். 'எட்டி இலவம் ஈகை' என்றெடுத்து மூத்த திருப்பதிகம் மற்றொன்றைப் பாடினார். ஆலங்காட்டில் இறைவனின் எடுத்த திருவடியின்கீழ் என்றும் இருக்கும்பேறும், இறைவன் அருட்கூத்து ஆடும்போது தாம்பாடும் அருளும் பெற்றார்.

வரலாற்றாய்வு

சுந்தரர், நம்பியாண்டார் நம்பி ஆகிய இருவரும் தந்துள்ள குறிப்புகள், சேக்கிழார் பாடியுள்ள காரைக்காலம்மையார் புராணம், காரைக்காலம்மையார் பாடியுள்ள பாடல்கள் ஆகியவை அம்மையாரின் வரலாற்றை விளக்கும் ஆதாரங்களாக அமைகின்றன என்பது முதலில் குறிப்பிடப் பெற்றது.

காரைக்காலம்மையாரின் சொந்த ஊர் காரைக்கால். இதனை, அவரே தம்மைக் 'காரைக்காற் பேய்' என்று கூறிக் கொள்வதும், நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதிப் பாடலும், சேக்கிழாரின் காரைக்காலம்மையார் புராணமும் வலியுறுத்துகின்றன.

இக்காரைக்கால் முற்காலத்தில் சோழர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. பின்னர் கி.பி. 1674இல் பிரெஞ்சுக்காரரின் வணிக நிறுவனம் புதுச்சேரியில் அமைக்கப்பட்டது. 1693இல் புதுச்சேரி டச்சுக்காரரிடம் சிக்கியதாயினும் மீண்டும் பிரெஞ்சுக்காரர்கள் அதனைக் கைப்பற்றிக்

கொண்டனர். பிரெஞ்சுக்காரராகிய மார்ட்டின் என்பவரது அயராத உழைப்பினால் கி.பி.1678இலிருந்து புதுச்சேரி வளர்ச்சி பெற்றது. வணிகத் துறைமுகப் பட்டினமாக விளங்கத் தொடங்கியது.[2] எனவே புதுச்சேரிக்குட்பட்ட காரைக்காலும் கி.பி.17 ஆம் நூற்றாண்டிலிருந்து பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்டிருந்தது. கி.பி. 1954இல் புதுச்சேரி சுதந்திரம் பெற்றது. புதுச்சேரி தற்போது தனி மாநிலமாக விளங்குகின்றது.

அம்மையாருக்குப் பெற்றோர் இட்ட பெயர் புனிதவதி என்பதைப் பெரியபுராணத்தால் அறிய இயலுகின்றது. இப்பெயருக்குள்ள சிறப்பு இவண் சிந்திக்கத்தக்கது. அம்மையாரின் சமயத் தொண்டின் சிறப்பை உணர்ந்து இப்பெயரில் ஈடுபட்ட சேக்கிழார் அடியார் கூட்டத்தைப் 'புனிதப் பேரவை', 'புனிதர்கள்' என்ற சொற்களால் பின்வரும் பாடல்களில் குறிப்பிடுகின்றார் என்பர் வை. இரத்தினசபாபதி.[3]

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநலம் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே (பெரிய : 4)

மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசுநீறு போல் உள்ளும் புனிதர்கள்
தேசினால் எத்திசையும் விளக்கினார்
பேச வொண்ணாப் பெருமை பிறங்கினார் (பெரிய : 3)

மேலும் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதத்தில் கூறப்படும் சுத்தாத்வைதத்தைப் 'புனிதமாம் அத்துவிதம்' என்று கூறியுள்ளார் தாயுமானவர் என்பர் வை. இரத்தினசபாபதி.[4]

புனிதவதியார் இறைவனை வேண்டிப் பேய்வடிவம் பெற்றதால், அவரைச் சுந்தரர் 'பேயார்' என்ற பெயரால் சிறப்பித்தார். தம்மைக் 'காரைக்காற் பேய்' என்றே தன் பாடல்களிற் கூறியுள்ளார் காரைக்காலம்மையார்.

காரைக்காலம்மையாரை இறைவன் அன்போடு அழைத்த பெயர் 'அம்மை' என்பதாகும். பெரியபுராணம் பாடிய சேக்கிழார் அம்மையாரைப் போற்றிப் பரவும் பெயர் 'காரைக்காலம்மை' என்பதாகும். இதனைக் 'காரைக்காலம்மை பெருமை கூறுவாம்' (பெரிய : 1716) என்ற அவரது

---

2. கே.கே. பிள்ளை; முன்சுட்டியது; ப.428
3. 20-9-86 நேர்காணலில் வழங்கிய கருத்து
4. மேற்படி

கூற்றால் அறிய இயலுகின்றது. இதற்கு, அம்மையாரின் இயற்பெயர் அடிப்படையில் புனிதவதியார் புராணமென்றோ, சுந்தரர் கூற்றை அடிப்படையாகக் கொண்டு பேயார் புராணமென்றோ பெயரிடாமல், காரைக்காலம்மையார் புராணம் என்றே பெயரிட்டார் என்பர் தம் உரையில் சி.கே. சுப்பிரமணிய முதலியார். சைவப்பெருவுலகில் அம்மையார் என்று போற்றப் பெறுபவர் காரைக்காலம்மையாரே.

கருநாடகத்தில் பசவரை நந்திதேவரின் அவதாரமாகவும், அக்கமாதேவியை உமையம்மையின் சத்துவகலை மடந்தையாகவும் கூறும் போக்குக் கன்னடமொழிப் புராணங்களில் காணப்படுகின்றது. தமிழகத்திலும் சுந்தரரைச் சிவபெருமானின் அழகுவடிவமாக, சம்பந்தரை முருகப்பெருமான் அவதாரமாகக் கூறும் இலக்கியப் போக்கு உள்ளது. ஆனால் சேக்கிழார் காரைக்காலம்மையார் பற்றி இவ்வாறு எதுவும் குறிப்பிடவில்லை. 'திருமடந்தை' அவதரித்தது போல் புனிதவதியார் பிறந்தார் என்று உவமையாகவே குறிப்பிடுகின்றார். இதற்கு உரையெழுதும் சி.கே.சுப்பிரமணிய முதலியார், திருமடந்தை என்பதற்கு இலக்குமி என்று பொருள் கொள்ளுவதை விட, முத்தித்திருவன் தெய்வமாகிய பராசக்தி வந்து பிறந்ததுபோற் பிறந்தார் என்று பொருள் கொள்ளுவது பொருந்தும் என்றும் கூறியுள்ளார். பங்குனி ஐந்தாம் நாள் சுவாதி நட்சத்திரத்தைக் காரைக்காலம்மையார் திருநட்சத்திர நாள் என்று அறிய முடிகின்றது.[5]

காரைக்காலம்மையார் இளமைப்பருவம் முதற்கொண்டே சிவ சிந்தனையில் ஈடுபட்டிருந்தார் என்பதற்குச் சேக்கிழாரின் பாடல்களும் (பெரிய.காரை:3,5) அம்மையாரின் பாடலும் (அற்புதத் திருவந்தாதி 1) சான்றாயமைகின்றன. சிவபக்தியோடு சிவனடியார் தொண்டிலும் அவருக்கிருந்த ஈடுபாட்டினைத் 'தொண்டர்வரிற்றொழுது' என்னும் தொடராற் புலப்படுத்தியுள்ளார் சேக்கிழார். அம்மையாரே தாம்பாடிய அற்புதத் திருவந்தாதியில்,

> மறித்து மடநெஞ்சே வாயாலுஞ் சொல்லிக்
> குறித்துத் தொழுதொண்டர் பாதம் (40)

என்று பாடுகின்றார். அடியார் தொண்டே அம்மையாரின் இல்லறவாழ்வில் ஒரு திருப்பமாயமைந்து அவரது பெருமையை உலகறியச் செய்தது; அவரை இல்லறத்தை விடுத்துப் பேய்வடிவம் பெற்றுக் கயிலை செல்லக் காரணமாயமைந்தது; அதனால் இறைவனாலேயே 'அம்மை' என்றழைக்கப்பெறும் பேற்றையும் பெறச் செய்தது என்பது இவண் சிந்திக்கத்தக்கது.

5. எஸ். வாசன்; திருக்கணித பஞ்சாங்கம்: நாயன்மார் பிறந்த நட்சத்திரம் பற்றிய குறிப்பு.

செல்வவளம் நிறைந்த வணிகர் குலத்திருமகளாகிய காரைக்காலம்மையார் சிறந்த கல்வியறிவும், இயலிசைப் புலமையும் வாய்க்கப் பெற்றிருந்தார் என்பதற்கு அவரது நூல்களே தலைசிறந்த சான்றுகளாகத் திகழ்கின்றன. அவரது தத்துவ ஞானமும், இறைஞானமும் அற்புதத் திருவந்தாதியில் அழகுறப் பொலிகின்றன. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில்,

துத்தங் கைக்கிளை விளரிதாரம்
உழைஇளி யோசைபண் கெழுமப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளங் கரடிகை வன்கைமென்றோல்
டமருகங் குடமுழா மொந்தை வாசித்
தத்தனை விரவினோ டாடுமெங்கள்
அப்பனிடந் திருவாலங் காடே (1-2)

எனவரும் பாடல் அம்மையாரின் இசைப்புலமைக்குச் சிறந்த சான்றாகும். சேக்கிழாரும் 'கீதமுன்பாடும் அம்மை' (பெரிய. காரை : 66) என்று பாராட்டியுள்ளார். அறுபத்துமூன்று நாயன்மாருள் மும்மணிகளாக விளங்குபவர்கள் அவர்கள் நின்றசீர் நெடுமாறன் (கூன்பாண்டியன்) மனைவியாராகிய மங்கையர்க்கரசியும், சுந்தரரின் தாயார் இசைஞானியாரும், காரைக்காலம்மையாரும் ஆவர். இம்மூவருள்ளும் இயற்றமிழ் இசைத்தமிழ் இரண்டிலும் வல்லவர் காரைக்காலம்மையாரே என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் திருவருள் ஞானம் பெற்றவர் காரைக்காலம்மையார் எனலாம். இதனைத் 'திருவருள் ஞானமாவது முதலிகள் மூவர் காரைக்காலம்மை முதலாயினோர்க்குண்டாகிய ஞானமென அறிக' எனச் சிவப்பிரகாசம் 10-ஆம் செய்யுளுரையில் மதுரைச் சிவப்பிரகாசர் கூறும் விளக்கத்தால் அறியலாம்.[6]

காரைக்காலம்மையாரின் இல்லறவாழ்வு பற்றிய அகச்சான்றுகளை அவரது பாடல்களில் காணமுடியவில்லை. சேக்கிழாரே நயத்துடனும், நுட்பத்துடனும் அவ்வாழ்வினைப் புலப்படுத்தியுள்ளார். அவ்வாழ்வினை நீத்து அவர் சென்ற நிலையினையும் எடுத்துக் காட்டியுள்ளார். செல்வவளம் மிக்க குடியிற் பிறந்து ஒரு குடிக்கு ஒரு மகளாதலின் தாம் பிறந்த ஊரிலேயே இல்லறம் நடத்திவந்த அம்மையார் அடியார் திருத்தொண்டில் தம் விருப்பப்படி ஈடுபட்டு வந்தார் என்று தெரிகின்றது.

---

6. க. வெள்ளைவாரணன்; பன்னிரு திருமுறை வரலாறு - 2; ப. 535.

இறைவன் திருவிளையாடலால் இல்லற வாழ்வை நீத்துச் செல்லும் நிலை வரும்வரை, அம்மையார் அடியார் தொண்டும், அரன் நினைவுமாக இல்லறத்தை நடத்தி வந்தார் என்பதும் அவரது வாழ்க்கையினின்றும் புலனாகின்றது. இல்லறத்திலேயே மாதர்கள் சிவநெறி நிற்க இயலும் என்பதையும் இந்நிலை காட்டுகின்றது. உடல்நாயகனாகிய கணவன் 'இதற்குப் பயன்படுத்துக' என்று கூறாது தம்மிடம் சேர்ப்பித்த பொருள்களை ஏற்றவாறு உயிர் நாயகனாகிய இறைவனுக்கு ஏற்பித்துப் பயன்படுத்தலும் கற்புநெறி நிற்கும் மனைவியர்க்குரிய இல்லற வழக்காகும் என்பதையும் அம்மையார் வாழ்க்கையினின்றும் அறியலாம். அவரது சிவபக்தி, இறையன்பு, திருத்தொண்டு, எப்பொருளையும் சிவனுக்கர்ப்பணமாக்கிய செம்மைசேர் சிந்தைநலம் ஆகியவையும் அவர் அடியார்க்கு மாங்கனியிட்டு உணவிட்ட செயலால் தெளிவுபடுகின்றன. காரைக்காலில் ஒவ்வோராண்டும் வைகாசித் திங்களில் மாம்பழத் திருநாள் என அம்மையார் கனியளித்த திருநாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது என்பது இவண் சுட்டிக்காட்டத்தக்கது.

காரைக்காலம்மையாரின் கணவன் பரமதத்தன் அவரது திருத்தொண்டில் தலையிட்டதாகக் குறிப்பில்லை. இறையருளால் அம்மையார் மாங்கனிகளை வரவழைத்துத் தந்தபோது அவரது தெய்வீகத் தன்மையை உணர்ந்து வியந்து அவரை மனைவியெனக் கருதாது அவரை நீத்துச் செல்லவே கருதியிருக்கின்றான். பின்னர் அம்மையாரின் சிவபக்தியையும், கனிபெற்ற அற்புதச் செயலையும் உலகறியச் செய்து தன் குழந்தைக்கு அவரது புனிதவதி என்ற திருப்பெயரையிட்டதோடன்றித் தான் வணங்கும் தெய்வமாகவே அவரைக் கருதிய பரமதத்தனே அம்மையாரை வழிபட்ட முதல் தொண்டன், பிறரையும் வணங்குமாறு கூறியவன் என்பது இவண் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் பரமதத்தனும் பெருமையுடையவனாகின்றான்.

அம்மையார் இறைவனை வேண்டிப் பேய்வடிவம் பெற்றமைக்கு அகச்சான்றுகள் உள்ளன. 'செடிதலைக் காரைக் காற்பேய்', (மூத்த: 1-11) 'காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக்காற்பேய்' (மூத்த :2-11), 'பேயாய நற்கணத்திலொன்றாய நாம்' (அற்புத : 86) என்று தம்மைக் கூறிக் கொள்கிறார் காரைக்காலம்மையார்.

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய் (மூத்த:2-1)

என்றே தம்மை வருணித்துள்ளார்.

இப்பேய்வடிவம் எத்தகையது என்பது சிந்தித்தற்குரியது. 'இஃது மானுடர் அஞ்சுமாறு அவர்களை வருத்தும் பேய் வடிவமன்று. அப்பேய் வடிவம், 'ஐம்பூதச் சேர்க்கையாலாகிய உடற்கூட்டில் ஏனைப் பகுதிகள் மறைய, வாயு ஒன்றுமே மிகுத்துக் கண்ணுக்குத் தோன்றாவகை திரியும் பாசவுடம்பு. இங்கு என்றுமே காணப்பெற்றதும், காற்றுப் போற் கடிது செல்லும் தன்மை வாய்ந்ததும், மண் என்ற ஒரு பூதச் செயல் மிகுந்த எலும்பு வடிவாயினும், களிம்பு நீங்கிப் பொன்னான செம்பு போலப் பாச நீக்கித் தூய்மையாக்கப்பட்ட சுத்த மாயாவுருவம் வாய்ந்ததும், ஆனால் மக்கள் கண்ணுக்குப் புலப்படுவதுமாகிய ஓர் ஒளிபெற்ற திருவுடம்பு என்க' என்று தம் உரையில் விளக்குவர் சி.கே. சுப்பிரமணிய முதலியார்.

அம்மையார் பெற்ற பேய் வடிவங்கண்டு, சுற்றத்தார் தொழுது அஞ்சி அகன்றனர் (பெரிய:காரை:51), கண்ட பிறரும் வியப்புற்று அஞ்சி ஓடினர் (பெரிய:காரை:48) என்பர் சேக்கிழார்.

....... வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் றார்கள் போற்றும் பேய்வடிவு .......... (பெரிய:காரை:48)

வேண்டுமென அம்மையார் வேண்டினாரென்றும், அவ்வாறே,

........................................ மெய்யி
லூனடை வனப்பையெல்லா முதறியெற் புடம்பேயாக
வானமு நிலனுமெல்லாம் வணங்குபேய் வடிவமானார்.
(பெரிய:காரை:50)

என்றும், அவ்வடிவு எற்பின் யாக்கை (பெரிய.காரை : 57) என்றும் கூறுகின்றார் சேக்கிழார். அம்மையாரே, 'பேயாய நற்கணம்' என்று குறிப்பிடுவது சிவபூதகணத்தைக் குறிக்கும் என்பர் உரையாசிரியர் சி.கே. சுப்பிரமணிய முதலியார். இப்பேய்வடிவத்துடனே அம்மையார் வடநாடு சென்றார். கயிலைமலை மீதும் திருவாலங்காட்டிலும் தலையால் நடந்தார். இறைவனே இவ்வடிவினைப் 'பெருமைசேர் வடிவம்' (பெரிய: காரை : 58) என்று உமைக்கு எடுத்துரைக்கின்றார்.

இப்பேய் வடிவிலேயே அம்மையார் பக்திப் பனுவல்களைப் புனைந்துள்ளார். திருவாலங்காட்டில், இறைவனின் எடுத்த திருவடியின்கீழ் என்றும் மகிழ்ந்து கீதம் பாடிக் கொண்டு அமர்ந்துள்ளார். எனவே 'இயலும் இசையும் பாடுதற்குரிய வாக்கு முதலிய புறக்கரணங்களையும், மனம் முதலிய உட்கரணங்களையும் உடைய திருவடிவம் அவ்வடிவம் என்பது பெறப்படும் ......... ஆளுடைய நம்பிகளும் கழறிற்றறிவார் நாயனாரும் திருக்கயிலைக்குச் சென்றபோது அவர்களுடைய திருமேனிகள் அடைந்த ஒளியுருவமாகிய மானவ யாக்கையின் தன்மை இங்கு வைத்துக் காணத்தக்கது. அவர்களும் பாடிக்கொண்டு சென்றதும், கணநாதர்களாகித்

தம் தொழிற்றலை நின்றதும் அவர்களது திருமேனியின் ஒளி, ஆயிரஞாயிறு பொங்கு பேரொளியாகி முனிவர்களாற் காணப்பெற்றதும் கருதுக' என்பர் உரைதரும் சி.கே சுப்பிரமணிய முதலியார்.

திருவருட்பா பாடிய வள்ளலார் பெருமான் ஒளியுடம்பு பெற்றதாகக் கூறப்படுவதும், அவர் கூறும் 'சாகாக்கலை'யும் இவ்வுடம்பைக் குறிப்பதே என்றும் கூறுவர் வை. இரத்தினசபாபதி. சாகாக்கலை கைவரப் பெற்றவர் அம்மையார் என்பது இவரது கருத்தாகும். "மெய்யில் ஊனடை வனப்பையெல்லாம் உதறி" அம்மையார் எற்புடம்பாகப் பேய் வடிவமானார், என்று சேக்கிழார் கூறுவதும் இவண் சிந்திக்கத்தக்கது. இல்லறத்திலிருந்ததுவரை கற்புநெறி வழாது ஒழுகி இல்லறக் கடமைகளைச் செய்துவந்த கற்புக்கரசியாகிய அம்மையார் அதுவரை கணவனுக்காகத் தாங்கி நின்ற உடற்றசை வனப்பைத் தாமே உதறினார் என்று சேக்கிழார் கூறியிருப்பதால், அம்மையார் அவ்வாறு உடற்றசையை உதறும் சிவயோக சித்தி கைவரப் பெற்றவர் என்பது தெரிய வருகின்றது. இல்லறத்திலிருந்தது வரை கணவன் பாதுகாப்பு. அடுத்துத் துறவு நெறியில் ஈடுபட்டுச் செல்லுங்கால், கணவனுக்காகத் தாங்கிய உடலழகு, பிறர் கண்படுதலும் கூடாது என்று கருதிய காரைக்காலம்மையாரின் கற்புள்ளமும் இந்நிகழ்ச்சியால் புலனாகும்.

காரைக்காலம்மையார் கயிலை சென்றது, இறைவன் அவரை 'அம்மையே' என்றழைத்தது ஆகியவற்றிற்கு அவர் பாடல்களில் அகச்சான்றுகள் இல்லை. நம்பியும், சேக்கிழாரும் இந்நிகழ்ச்சிகளைக் கூறியுள்ளனர்.

அம்மையார் திருவாலங்காட்டில் இறைவனின் திருநடனங்கண்டு வியந்தமைக்கு அவர் பாடியுள்ள திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டும் சான்றுகளாகும். ஆலங்காட்டில் ஈமப்பெருங்காட்டில் இறைவன் அண்டமுற நிமிர்ந்து ஆடும் கூத்தினைப் பாடியுள்ளார் அம்மையார். இவ்வாலங்காட்டிலேயே இறைவனின் தூக்கிய திருவடியின்கீழ் என்றும் இருந்து இசைபாடிப் பரவும் பேறு பெற்றார் காரைக்காலம்மையார் என்பர் (பெரிய.காரை:65) சேக்கிழார்.

அம்மையார் இறைவனை வேண்டிப் பெற்ற வரங்களாக விளங்குவன மூன்று. ஒன்று மாங்கனி பெற்றது, இரண்டாவது பேய்வடிவம் பெற்றது; மூன்றாவது மறுபடி பிறவாமையும் பிறப்பிருப்பின் இறைவனை மறவாமையும், என்றும் அவனடிக் கீழிருத்தலும் ஆம்.

பேய் வடிவம் பெற்றதும் சிவஞானம் மேலிட அற்புதத் திருவந்தாதியும், அடுத்துத் திருவிரட்டைமணிமாலையும், பின்னர்

திருவாலங்காட்டில் சிவன் ஆடல் கண்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டையும் பாடினார் அம்மையார் என்பர் (பெரிய : காரை: 52, 53, 63, 64) சேக்கிழார்.

திருவிரட்டைமணிமாலையை அம்மையார் இல்லற வாழ்க்கை நடத்தியபோது பாடியிருக்கலாம் என்பர் இரத்தினசபாபதி.[8] அந்தாதியும், திருவிரட்டைமணி மாலையும் அம்மையார் பேய்க்கண வடிவம் வேண்டிப் பெற்றுத் திருக்கயிலை காண வழிப்பட்டுச் செல்லும் வழியில் அருளப்பட்டன என்று சி.கே.சுப்பிரமணிய முதலியார், தாம் எழுதியுள்ள பெரியபுராணத்தின் உரையில், திருவந்தாதியைப் பற்றிய சில குறிப்புகள் என்ற பகுதியில் கூறுகின்றார். உரைப்பகுதியில் கூறிய கருத்திற்கு மாறாக இக்கூற்று அமைந்திருப்பதன் காரணம் யாதெனப் புலனாகவில்லை.

மேற்கூறப் பெற்றவற்றால் காரைக்காலம்மையார் மழலை பயிலும் குழவிப் பருவத்திலிருந்தே சிவன் சேவடியைச் சிந்திக்கும் உள்ளத் திருவுற்றவர்; இல்லறத்தில் வாழ்ந்தபோதும் அரன் நினைவிலும், அடியார் தொண்டிலும் ஈடுபட்டிருந்தவர்; இல்லறத்தில் இருந்ததுவரை கற்புநெறி வழாது ஒழுகி, அதனின்றும் நீங்கும் நிலைவந்தபோது இறைவனை வேண்டிப் பேய் வடிவம் பெற்றவர்; சிவஞானம் நிறைந்த நெஞ்சினர்; சிவயோகம் அறிந்தவர்; இயற்றமிழும், இசைத் தமிழும் வல்லவர்; இறைவனாலேயே 'அம்மை' என்றழைக்கப் பெறும் பேறு எய்தியவர்; என்றென்றும் அவன் திருவடியின்கீழ் அமர்ந்து அவனது ஆடலுக்கேற்ப இசை பாடும் திருவருள் கூடப் பெற்றவர்; சிறந்த இலக்கிப் படைப்பாளர் என்னும் கருத்துக்கள் தெளிவுபடுகின்றன.

## காரைக்காலம்மையாரின் காலம்

காரைக்காலம்மையாரின் பாட்டுக்களில் வடமொழிச் சொற்கள் நிரம்பியுள்ளன. எனவே வடமொழிச் சொற்கள் தமிழில் பரவி இடம்பெற்ற ஒரு காலத்தில் இவ்வம்மையார் வாழ்ந்தவராதல் வேண்டும். இவர் வீடுபெற்ற பெருமையையும், தூய்மையையும் திருவாலங்காடு வாய்க்கப் பெற்றிருந்ததனால் அதன் மேல் அடி எடுத்து வைக்க அஞ்சித் திருஞான சம்பந்தர் நகர்ப்புறத்தே ஒதுங்கித் தங்கியிருந்தார் என்று சேக்கிழார் கூறுவர். எனவே காரைக்காலம்மையார் திருஞான சம்பந்தருக்கு முற்பட்டவர் என்பதில் ஐயமன்று. ஆகவே, கி.பி.5,6 ஆம் நூற்றாண்டுகளில் இவ்வம்மையார் வாழ்ந்தவர் எனக் கொள்ளத்தகும் என்பர் கே.கே.பிள்ளை.[9]

---

8. மேற்படி
9. கே.கே.பிள்ளை; முன் சுட்டியது ; ப.224

திருஞானசம்பந்தர் திருவாலங்காட்டு ஈசனை வழிபடச் சென்றார். அதுபோழ்து காரைக்காலம்மையார் தலையால் நடந்து வந்து வழிபட்ட சிறப்பினையுடைய திருவாலங்காட்டைக் காலால் மிதிக்க அஞ்சி அதன் அருகில் உள்ள ஓர் ஊரில் அன்றிரவு தங்கித் துயில் கொண்டார். அவ்வமயம் ஆலங்காட்டு ஈசன் அவரது கனவில் தோன்றி, 'நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ' என்று வினவினார். இஃது இறைவன் திருவருளென்று உணர்ந்து சம்பந்தர் நள்ளிரவில் உறக்கம் நீங்கி எழுந்து 'துஞ்ச வருவார்' என்னும் முதற்குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடி ஆலங்காட்டடிகளைப் போற்றினாரென்றும் சேக்கிழார் திருஞானசம்பந்தர் புராணத்திற் (1008-1010) கூறுகின்றார். இதனைத் திருஞானசம்பந்தரின் திருவாலங்காடு பற்றிய திருப்பதிகத்தில், 'துஞ்ச வருவாரும் தொழுவாரும் வழுவிப் போய் நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும்' எனவரும் முதற்பாடலும், 'ஆந்தன் பழையனூர் ஆலங்காட்டெம்மடிகளை வேந்தன் அருளாலே விரிந்த பாடல் இவை' என வரும் இதன் திருக்கடைக்காப்புப் பகுதியாலும் அறியலாம்.

மேலும் திருவாலங்காட்டு ஈசன் நாடோறும் காரைக்காலம்மையின் தோத்திரப் பாடல்களைக் கேட்டு அப்பாடல்களின் இசைக்கேற்ப அண்டமுற நிமிர்ந்தாடுகின்றான் என்னும் கருத்தை,

> வணங்கும் சிறுத்தொண்டர் வைகலேத்தும் வாழ்த்தும்கேட்டு
> அணங்கும் பழையனூர் ஆலங்காட்டெம் மடிகள் (1:45:7)

என்று சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய வரலாற்றுக் குறிப்பால் திருஞான சம்பந்தர்க்குக் காலத்தால் முற்பட்டவர் காரைக்காலம்மையாரென்பது நன்கு தெளியப்படும். சைவசமயக் குரவருளொருவராகிய திருஞானசம்பந்தர் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென்பது வரலாற்றாராய்ச்சியாளர் துணிபாதலின் அவராற் போற்றப்பெற்ற காரைக்காலம்மையார் வாழ்ந்த காலம் அவர்க்கு நெடுங்காலத்திற்கு முன் என்று கொள்ளுதல் வேண்டும். காரைக்காலம்மையார் பாடிய நூல்களின் யாப்பமைதியையும், பின்வந்த தேவார ஆசிரியர்கள் பாடிய திருமுறைகளின் சொற்பொருளமைதியையும் உற்று நோக்குங்கால் இருண்ட காலப்பகுதி எனப்படும் கி.பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளாகிய காலப்பகுதியில் வாழ்ந்தவர் காரைக்காலம்மையார் எனக் கொள்ளுதல் மிகவும் பொருந்தும்[10] என்று அறுதியிட்டுரைத்துள்ளார் வெள்ளைவாரணர்.

---

10. க.வெள்ளைவாரணன்; முன் சுட்டியது; பக். 528-529

காரைக்காலம்மையார் திருமுறை பாடிய சான்றோர்களுக்-கெல்லாம் காலத்தால் முற்பட்டவர் என்பதைப் பின்வரும் சான்றுகளாலும் உணரலாம்.

தேவாரத்திற்கு முன்னர் காரைக்காலம்மையாரின் பாடல்களைப் பதிப்பிக்கும் முறையைக் காஞ்சி நாகலிங்க முனிவர் பதிப்பிற் காணலாம். கோயில்களிலும் அம்மையாரின் பாடல்களை ஓதிவிட்டுப் பிறகு தேவாரப் பாடல்களை ஓதும் வழக்கம் அண்மைக் காலம் வரை இருந்து வந்தது.

அம்மையாரின் 'கொங்கை திரங்கி' என்று தொடங்கும் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் நட்ட பாடை பண்ணில் அமைந்தது. சம்பந்தரின் 'தோடுடைய செவியன்' என்று தொடங்கும் பதிகமும் நட்டபாடை பண்ணிலமைந்தது. அம்மையாரின் 'எட்டியிலவம்' என்று தொடங்கும் பதிகம் இந்தளப் பண்ணிலமைந்தது. சம்பந்தரின் இரண்டாம் தலைமுறையின் முதற்பதிகம் இந்தளப் பண்ணிலமைந்தது. சம்பந்தர் பாடும் பதிகத்திற்கு முன்னோடி காரைக்காலம்மையார் என்பர் இரத்தின சபாபதி.[11]

மேற்கூறப்பெற்ற சான்றுகளால் சம்பந்தருக்கு முற்பட்டவர் காரைக்காலம்மையார் எனக் கொண்டு, அவரது காலம் கி.பி.5 ஆம் நூற்றாண்டென்று கொள்ளப்படுகின்றது.

மேலும் சைவ சமயத்தின் ஒரு பிரிவாகிய லகுலீசபாசுபதம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் தமிழகத்திலும் பரவியது. இப் பாசுபதர்கள் திருவொற்றியூரிலும், நாகைப்பட்டினத்திலும் வாழ்ந்துள்ளனர். காரைக்காலம்மையாரின் கணவன் ஊர் நாகைபபட்டினம் என்பதும் இவண் குறிப்பிடத்தக்கது. அம்மையார் காரைக்காலிலேயே குடித்தனம் நடத்தியிருப்பினும் நாகைப்பட்டினத்து லகுலீச பாசுபதர் பற்றியறிந்திருக்கக்கூடும். பாசுபதர் சிவனுடன் கணங்க்ளையும், பேய்களையும் இணைத்து வழிபடும் போக்கினர். அருச்சுனன் பாசுபதம் பெற்ற கதையையும் அம்மையார் குறிப்பிடுகின்றார்.[12] இக்கருத்துக்களின் அடிப்படையில் தமிழகத்தில் லகுலீச பாசுபதம் பரவிய கி.பி.2-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.5-ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தில் காரைக்காலம்மையார் வாழ்ந்திருக்கக்கூடும் என்பது இவ்வாய்வாளர் கருத்தாகும்..

---

11. வை. இரத்தினசபாபதி, முன் சுட்டியது
12. இக்கருத்துக்கள் அடுத்துவரும் இயலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

# 3. சூழலும் படைப்புகளும்

## 1. காரைக்காலம்மையார் வாழ்ந்த காலச்சூழல்

காரைக்காலம்மையாரின் படைப்புகளை உணர்வதற்கு அவரது காலச் சூழலையும் அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். அம்மையார் ஞானசம்பந்தர் காலத்திற்கு முற்பட்டவர் என்ற அடிப்படையில் அவரது காலம் கி.பி. 2 முதல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டம் என்று துணியப்படுகின்றதென்று ஏற்கெனவே சுட்டிக் காட்டப்பெற்றது. அக்கருத்தின் அடிப்படையில் அம்மையாருக்கு முற்பட்ட, அவர் வாழ்ந்த காலச் சூழல் இவண் சுருக்கமாக விளக்கப்படுகின்றது.

### கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட சூழல்

### சமயம் - சைவ சமயம் - சிவன் வழிபாடு

சைவ சமயம் தொன்றுதொட்டுத் தமிழகத்தில் நிலவி வருஞ்சமயமாயினும், தொல்காப்பியத்தில் சிவனைப் பற்றிய வெளிப்படையான குறிப்புகள் இல்லை. திருமால், முருகன், கொற்றவை வழிபாட்டிற்கான குறிப்புகள் கிடைக்கின்றன.[1] சங்கத் தொகை நூல்களில் 'சிவன்' என்ற பெயர் காணப்படவில்லையாயினும், சிவனைக் குறிக்கும் 'முக்கட்செல்வன்', 'நீலமேனி வாரிழை பாகத்து ஒருவன்', 'கறைமிடற்று அண்ணல்', 'ஆலமர் செல்வன்' முதலிய தொடர்கள் இடம் பெற்றுள்ளன.[2] சிவனைப் பற்றிய புராணக்கதைகள் சங்ககாலத் தமிழகத்தில் பரவியிருந்தமை மேற்கண்ட தொடர்களால் புலனாகின்றது. மேலும் சிவன் ஆடிய 'கொடுகொட்டி', 'பாண்டரங்கம்', 'காபாலம்' முதலிய ஆடல் பற்றிய குறிப்புகளும், தட்சிணாமூர்த்தி வழிபாடு, திருவாதிரை விழா பற்றிய செய்திகளும் சங்க நூல்களில் காணப்படுகின்றன.[3]

இரட்டைக் காப்பியங்களாகிய சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் சிவபெருமானைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. சிலப்பதிகாரம் சிவபெருமானைப் 'பிறவாயாக்கைப் பெரியோன்' என்று குறிப்பிடுகின்றது. சிவனுக்குரிய ஐந்தெழுத்தும்,' அவன் ஆடிய ஆடல்வகைகளும் பற்றிக் கூறுகின்றது.[4] மணிமேகலையில் சைவம் என்றசொல் இடம் பெற்றுள்ளது.[5] இரு காப்பியங்களுமே காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த கோயில்களைக் கூறும்போது சிவபெருமான் கோயிலையே முதலாவதாகக் கூறுகின்றன.[6]

---

1. மா.இராசமாணிக்கனார்; சைவ சமய வளர்ச்சி; ப.15 2. மேற்படி
3. மேற்படி ப.16, 27 4. மேற்படி ப.29 5. மேற்படி ப.17 6. மேற்படி

## இலிங்க வழிபாடு

இலிங்க வழிபாடும் தொன்மை வாய்ந்ததாகும். சிவபெருமானைக் குறிக்கும் மூர்த்தமாகக் கருதப்படும் இலிங்கங்கள் சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழகத்திலும் இலிங்க வழிபாடு இருந்தது.[7] சங்க நூல்களில் 'இலிங்கம்' என்ற சொல் இல்லையெனினும், பலர் கூடும் பொது இடங்களாகிய அம்பலங்களில் கல் இலிங்கங்களைப் போன்ற மரத்தூண்கள் இருந்தன. மக்கள் இவற்றிற்கு மலர் சூட்டி நந்தாவிளக்கேற்றி வழிபட்டனர்.

## திருமந்திரங்கூறும் சைவ சமயத்தின் உட்பிரிவுகள்

சம்பந்தருக்கு முற்பட்ட சிவனடியார்களாகக் கூறப்படுபவர்களுள் திருமூலரும் ஒருவராவர். இவர் பாடியுள்ள திருமந்திரம், சைவத் திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. கி.பி.ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழகத்தில் சைவ சமயம் பரவியிருந்த தன்மையினை அறிய திருமந்திரம் உதவுகின்றது.

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களைக் கொண்டது. இவற்றுள் முதல் நான்கும் சிவஞானத்தைப் பெற விரும்புபவர் தம்மை உள்ளும் புறமும் தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொள்ளுவதற்குரிய சாதனங்களையும், நடுவிலுள்ள ஐந்தாம் தந்திரம் சைவத்தின் முடிந்த முடிபாகிய சைவ சித்தாந்த உண்மைகளையும் அடுத்த நான்கு தந்திரங்களும் ஞானம் பெறும் நிலையில் உணர்ந்து பெறத் தக்கனவாய் உள்ள நற்பயன்களையும் விளக்கிக் கூறுகின்றன.

வேதாந்தத்தின் ஆறு பிரிவுகளாகிய நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வேதாந்தம் ஆகியவற்றையும் ஆறு சித்தாந்தங்களாகப் பாசுபதம், மாவிரதம், காபாலிகம், வாமம், பைரவம், சைவம் ஆகியவற்றையும் திருமூலர் குறிப்பிடுகின்றார். காரைக்காலம்மையார் பாசுபதக் கொள்கைகளை அறிந்தவர் என்ற நோக்கில் இவண் பாசுபதம் பற்றிய விளக்கம் மட்டும் தரப்படுகின்றது.

### பாசுபதம்

உயர்ந்த பாசுபத விரதம் ஞானம் எனப்படும். சிவனே யோக ஆசிரியனாக வந்து இந்த ஞானத்தை முனிவர்களுக்கு உபதேசித்தார்.

---

7. மேற்படி ப.26

பாசுபதம், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றை வலியுறுத்துகின்றது. ஆன்மாக்களுக்கு ஆணவ மலம் இல்லை. மாயை, கன்மம் என்ற இரண்டால் பந்தமுறும் ஆன்மா, இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றது. இவற்றில் வெறுப்புற்றுச் சாத்திர முறைப்படி தீக்கை பெற்றவனிடம் ஈசனின் ஞானம் போய்ப் பற்றும். அப்பொழுது ஈசன் தன் குணங்களை அவன்பால் பற்றுவித்துத் தன் அதிகாரத்திலிருந்து ஓய்வு பெற்றிருப்பான் என்பது பாசுபதக் கொள்கையாகும்.[8]

பாசுபதர் பசுபதியை வழிபடுபவர்கள். இலிங்கத்தையும் வழிபடுவர். இவர்கள் சிவனுடன் கணங்களையும், பேய்களையும் இணைத்து வழிபட்டனர். பாசுபத சமயம் நீண்ட காலமாக நம் நாட்டில் இருந்துவந்த சமயமாகும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த லகுலீசர் என்பவர் அதனைப் புதுப்பித்ததால் அச்சமயம் லகுலீச பாசுபதம் எனப்பட்டது.[9] லகுலீச பாசுபதர் தமிழகத்தில் குறிப்பாகத் திருவொற்றியூரிலும், கடல்நாகைக் காரோணத்திலும் வாழ்ந்துள்ளனர்.[10]

இவண் காரைக்காலம்மையார் தொடர்பான ஒரு கருத்தைச் சிந்திக்க வேண்டியுள்ளது. சிவபெருமானாகிய பசுபதியை வேண்டித் தவம் செய்து பாசுபதம் பெற்றான் அருச்சுனன். அருச்சுனனுக்கு அருள் செய்ய சிவபெருமான் வேடன் வடிவில் வந்த பாரதக் கதையை அம்மையார் குறிப்பிட்டுள்ளார். மேலும் அம்மையார் சிவகணங்களுள் ஒன்றாகிய பேய் வடிவத்தை வேண்டிப் பெற்றதும் அக்கணங்களோடு அவன் ஆடிய ஆட்டத்தைக் குறிப்பிட்டிருப்பதும், இவர் பாசுபதக் கொள்கைகளில் நாட்டமுடையவராக இருந்திருப்பாரோ என்ற சிந்தனையைத் தோற்றுவிக்கின்றன. மேலும் நாகையில் லகுலீச பாசுபதர் இருந்தனர் என்ற குறிப்பால், நாகப்பட்டினத்தினைச் சேர்ந்த பரமதத்தனைக் கணவனாக அடைந்திருந்த அம்மையார் லகுலீச பாசுபதர் பற்றியும் நன்கு அறிந்திருக்க வாய்ப்பு உண்டு என்று கருத இடமுண்டு.

**வீர சைவம்**

வீரசைவர்கள் பெரிதும் மதித்த இலிங்க புராணத்தின் உட்பொருளையும் வீரம், வாதுளம் என்னும் இரண்டு ஆகமங்களையும் திருமூலர் கூறியுள்ளார். வீர சைவர்களின் சிறப்புக் கொள்கைகளில் ஒன்றாகிய சமுத்தலவிவேசனம் என்பதின் பொருளையும் தெளிவுபடுத்தியுள்ளார்.[11] இதனாஃ் வீரசைவக் கொள்கையும் அக்காலத் தமிழகத்தில் பரவியிருந்தமை புலனாகின்றது.

8. மேற்படி ப.81
9. மேற்படி பக்.66-67
10. மேற்படி ப.66
11. மேற்படி ப.83

### கோயில்கள்

தில்லைச் சிற்றம்பலம் அக்காலத்திலேயே புகழ் பெற்றிருந்தது. சிவன் கோயில்கள் சிறப்புற்றிருந்தன. கோயில்களில் இலிங்கம் இருந்தது. விழாக்கள் நடைபெற்றன.[12]

### நடராச வழிபாடு

கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குமுன்னரே தமிழகத்தில் நடராச வடிவம் பற்றிய விளக்கம் வளர்ச்சியடைந்திருந்தது என்பதையும், திருமூலரின் திருமந்திரத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

மருவுந் துடியுடன் மருவிய வீச்சு
மருவிய அப்பும் அன்றுடன் கையும்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென ஓதே (2798)

திருந்து நற் சீயென் றுதறிய கையும்
அருந்தவர் வாவென் றணைத்த மலர்க்கையும்
பொருந்தில் இமைப்பிலி யவவென்ற பொற்கையும்
திருந்தத்தீ யாகும் திருநிலை மவவே (2797)

அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கிதின்னில் அறையிற் சங்காரம்
அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி யென்னும் அனுக்கிரகம் என்னே (2800)

எனவரும் திருமந்திரப்பாடல்கள் நடராச வடிவ விளக்கமாக அமைகின்றன. இத்தகைய சூழ்நிலையில் காரைக்காலம்மையாரும் சிவனின் ஆடல் தோற்றத்தில் ஈடுபட்டது பெரிதும் வியப்பன்று. இப்பாடல் தோற்றத்திலும் சிவனின் 'அந்திநடம்' எனப்படும் சம்மார நடனமே அம்மையாரைப் பெரிதும் கவர்ந்துள்ளது என்பது அவரது பாடல்களின்மூலம் தெளிவுபடுகின்றது.

### சம்பந்தர் காலத்திற்கு முற்பட்ட நாயன்மார்கள்

கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை வாழ்ந்த நாயன்மார்களாகக் கோச்செங்கணான், சண்டீசர்,

---

12. மேற்படி பக் 66-67

கண்ணப்பர், சாக்கியர், கணம்புல்லர், அமர்நீதி, அரிவாள்தாயர், நமிநந்தி, தண்டியடிகள், புகழ்த்துணை, புகழ்ச்சோழர், எறிபத்தர், கூற்றுவ நாயனார், மூர்த்தி நாயனார், ஐயடிகள் காடவர்கோன், திருமூலர், நக்கீர தேவ நாயனார், பரணதேவ நாயனார், கல்லாடனார் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர்.[13] இவர்களுள் சிலர் காரைக்காலம்மையார் காலத்தவராகவோ அல்லது முன் பின்னாக வாழ்ந்தவர்களாகவோ இருக்கக்கூடும். ஆனால், காரைக்காலம்மையார் பாடல்களில் இவ்வடியார்களுள் ஒருவரைப் பற்றியும் கூறப்படாமலிருப்பது வியப்பாக உள்ளது. இவ்வடியார் செய்த செயற்கரும் செயல்கள், குறிப்பாகக் கண்ணப்பர் இறைவனுக்கே கண்ணை அப்பிய பக்திச் செயல் அக்காலத்தில் தமிழகமெங்கும் பரவியிருந்திருக்கக் கூடும். அம்மையாரும் இவ்வடியார்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கக்கூடும் என்று கொள்ள இடமுண்டு.

### பிற சமயங்கள்

கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலக்கட்டத்தில், பௌத்த சமணசமயங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. வேதங்களும், புராணக் கதைகளும் வைதீக பிராமணரால் தமிழ்நாட்டில் பரவின. வடநாட்டுப் பாகவத மதமும் தமிழகத்தில் பரவியது.

பௌத்தமும், சமணமும் வைதிகச் சடங்குகளையும், வேள்விகளையும் ஆரிய சமய தத்துவங்களையும் போற்றவில்லை. கொல்லாமை, புலால் உண்ணாமை, பொய்யாமை, பிறப்பில் உயர்வு தாழ்வு கருதாமை ஆகிய அறங்களை இம்மதங்கள் வலியுறுத்தின. தமிழகத்தில் புத்த விகாரங்களும், சமணப் பள்ளிகளும் அமைக்கப்பட்டன.

### குடும்பங்களில் சமய ஒற்றுமை

அக்காலத் தமிழகத்தில் ஒரு குடும்பத்திலேயே இரண்டு சமயங்களின் பிணைப்பைக் காணமுடிகின்றது. சேரன் செங்குட்டுவன் சைவ சமயத்தினன், அவன் தம்பி இளங்கோவடிகளோ சமணத்துறவி. கண்ணகியின் தோழி தேவந்தி வைதிக சமயத்தினளாகக் காணப்படுகின்றாள். கோவலன் சமண சமயத்தைச் சார்ந்தவன். அவனுடன் வாழ்ந்த மாதவியோ -தான் பௌத்த பிக்குணியான தோடன்றித் தன் மகளையும் பௌத்தத் துறவியாக்கினாள்.

---

13. மா. இராசமாணிக்கனார்; முன்சுட்டியது; பக். 55-56

பெரியபுராணத்தில் காரைக்காலம்மையாரின் கணவன் பரமதத்தன் சைவ சமயத்தினனாகக் கூறப்பட்டிருக்கக் கன்னடத்தில் அவன் சமணன் என்று கூறப்பட்டிருப்பது இவண் சிந்திக்கத்தக்கது. கணவனும் மனைவியும் வெவ்வேறு சமயத்தினராக இருப்பினும் அவர்கள் இணைந்து வாழ்ந்த நிலையை இக்கதை மாற்றம் காட்டுகின்றது.

சமயப்பூசல்

சமயவாதிகளுக்கிடையே சமயவாதங்கள் நிகழ்ந்தமையை மணிமேகலை, குண்டலகேசி, நீலகேசி ஆகிய காப்பியங்கள் காட்டுகின்றன.[14] சமண, பௌத்த சமயங்களின் சார்பில் பெண்கள் வாதம் புரிந்த சூழ்நிலையை இந்நூல்களால் அறிய இயலுகின்றது. இவ்விரு சமயங்களிலும் பெண்துறவிகள் இருந்தனர். சமண சமயப் பெண்துறவிகள் 'அடிகள்' என்றும், பௌத்த சமயப் பெண்துறவியர் 'பிட்சுணிகள்' என்றும் கூறப் பெற்றனர். ஆனால் சைவ சமயத்தில் பெண் துறவிகள் இருந்ததாகவோ, சமயவாதம் புரிந்ததாகவோ குறிப்புகள் இல்லை. சைவ சமயத்தின் சார்பில் காரைக்காலம்மையார் வாதம் நிகழ்த்தியதாகத் தெரியவில்லையெனினும், சிவபெருமானைப் பற்றிய சில கேள்விகளைக் கேட்டவர்களுக்கு விடை பகர்வதுபோல் இவரது சில பாடல்கள் விளங்குகின்றன.

> இவரைப் பொருளுணர மாட்டாதாரெல்லாம்
> இவரை யிகழ்வதே கண்டீர் இவர் தமது
> பூக்கோல மேனிப் பொடிபூசி யென்பணிந்த
> பேய்க்கோலம் கண்ட பிறர் (அற்புத : 29)

என்னும் அம்மையார் பாடலால் சிவபெருமான் தோற்றம் பற்றி இகழ்ந்தவர்களும் அவரது காலத்தில் இருந்தனர் என்பது புலனாகின்றது.

> ................................................ பிரானவனை
> எங்குற்றான் என்பீர்கள் என்போல்வார் சிந்தையிலும்
> இங்குற்றான் காண்பார்க் கெளிது . (அற்புத : 45)

எனவும்,

> ------------------------------- என்றுந்தான்
> எவ்வுருவோ நம்பிரா னென்பார்கட் கென்றுரைக்கேன்?
> எவ்வுருவோ நின்றுருவமேது? (அற்புத : 61)

---

14. கே.கே. பிள்ளை; முன் சுட்டியது; ப. 171

எனவும் வரும் அடிகளில் தம்மிடம் சிவபெருமான் எங்குள்ளான் என்றும், நும்பிரான் எவ்வுருவோ என்றும் கேட்பவர்கள் அக்காலச் சமுதாயத்தில் இருந்தமையைச் சுட்டிக் காட்டுகின்றார் காரைக்காலம்மையார்.

### அரசியல் சூழல்

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகம் களப்பிரரின் ஆட்சிக்குட்பட்டது. களப்பிரர் பிறமொழி பேசியவர்கள். "ஆரியரால் விளைக்கப்பட்ட பண்பாட்டுப்புரட்சியினாலும் களப்பிரரால் நேர்ந்த அரசியல் புரட்சியினாலும் தமிழர் வாழ்வு சீர்குலைந்தது என்பர்.[15] அரசியல் மாற்றம் ஏற்பட்டிருந்த இக்காலக் கட்டத்தில் வாழ்ந்தவராகிய காரைக்காலம்மையார் புதிய இலக்கிய வகைகளைத் தந்து, இசையால் இறைவனைப் பாடிப் பரவும் நெறியை வகுத்து, சைவ சமய எழுச்சிக்கு பக்தி இலக்கிய வளர்ச்சிக்கு அடிகோலியமை போற்றிப் பாராட்டற்குரியது.

### இலக்கியச் சூழல்

காரைக்காலம்மையார் காலத்துக்கு முற்பட்ட சங்ககாலச் சமுதாயம் சிறந்த இலக்கிய வளம் பெற்றுத் திகழ்ந்தமைக்குச் சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. சங்ககாலத்தில் மகளிரும் கவிபுனையும் ஆற்றல் கொண்டு விளங்கினர். அம்மையார் வாழ்ந்த காலக்கட்டத்தில் முத்தொள்ளாயிரம் பதினெண்கீழ்க்கணக்கில் அடங்கியுள்ள நீதி நூல்கள் சில, பெருங்கதை ஆகியவை தோன்றியுள்ளன. ஆனால் இக்காலக்கட்டத்தில் அம்மையார் தவிர வேறு பெண்பாற் புலவர்கள் இருந்ததாகத் தெரியவில்லை.

பிற சமயச் செல்வாக்கும், அரசியல் மாற்றமும் தமிழகத்தில் நிலவிய காலச்சூழலில் சைவசமய சாத்திரநூலாகத் திருமூலர் திருமந்திரத்தைத் தந்துள்ளார். பக்தி நெறியில் வழிகாட்டும் தோத்திர நூல்களை, இசைப் பாடல்களைக் காரைக்காலம்மையார் படைத்துள்ளார் என்பது இவண் பெருமையுடன் குறிப்பிடத்தக்கது.

### 2. காரைக்காலம்மையாரின் படைப்புகள்

சிவஞானமும், பக்தியும் வாய்க்கப் பெற்ற இறைவனின் ஆடலைக் காணவும், அதற்கேற்ப இசை பாடவும் இறைவனால் வரம் அருளப் பெற்றவராகிய காரைக்காலம்மையார் இலக்கியமும் படைத்துத்

15. கே.கே. பிள்ளை; முன் சுட்டியது; ப. 171

தமிழ்மொழிக்கு வளம் சேர்த்துள்ளார். அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டு ஆகியவை அவர் இயற்றிய பக்திப் பனுவல்களாகும். இப்பனுவல்கள் பதினோராம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன. அம்மையார் அறுபத்துமூன்று நாயன் மார்களுள் ஒருவராக மதிக்கப்படுகின்றார். சிவன் கோயில்களில் அம்மையாரைத் தவிர எஞ்சிய நாயன்மார்கள் உருவச் சிலைகளனைத்தும் நிற்பவை போல் அமைந்திருக்க அம்மையாரின் உருவ அமைப்பு மட்டும் அமர்ந்திருப்பதுபோல் அமைக்கப்பட்டிருப்பது அவரது பெருமையைப் புலப்படுத்துகின்றது என்பர் கிருபானந்தவாரியார்.[16]

தேவாரம் பாடிய மூவருக்கும் முற்பட்டவராக விளங்கும் அம்மையாரே சிவபெருமான் மேல் முதன்முதலாகப் பதிகம் பாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியங்கள் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்று பிரிப்பது போலப் பன்னிரு திருமுறைகளாகிய அருளியல் நூல்களையும் மேற்கணக்கு என்றும், சிவஞான போதம் முதலிய தத்துவ நூல்களைக் கீழ்க்கணக்கு என்றும் பாகுபாடு செய்யலாம் என்பர் வ. இராசகோபாலன்.[17] அருளியல் மேற்கணக்கு நூல்கள் அருளியவர்களுள் முதலாவதாக விளங்குபவர் காரைக்காலம்மையாரே.

சிறந்த கல்விப் பயிற்சியும், இலக்கியப் புலமையும், தத்துவ ஞானமும் வாய்க்கப் பெற்றவராகிய அம்மையாரின் அந்தாதி, பதிகம் முதலிய படைப்புகள் புதிய இலக்கியப் படைப்புகளாகவும், இவ்விலக்கிய வகைகளில் முதற்படைப்புகளாகவும் விளங்குகின்றன. அவரது ஞான அனுபவத்தையும் ஆழ்ந்த பக்தியையும், படைப்பாற்றல் திறனையும் காட்டுவனவாக அவரது பனுவல்கள் அமைகின்றன. பத்துப் பாடல்களால் அமைந்தவற்றைப் பதிகம் என்ற பெயரால் வழங்குதல் அம்மையார் காலத்தில் தோன்றி நிலைபெற்றது என்று கூற முடிகின்றது. இப்பதிகங்களே பின்வந்த அருளாளர்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன.

அம்மையார் வாழ்ந்த காலச்சூழலில் சமண பௌத்த மதங்களும், சைவ சமயத்தின் பல உட்பிரிவுகளும், வைணவ சமயமும் தமிழகத்தில் தழைத்திருந்தன என்பது குறிப்பிடப்பெற்றது. பட்டிமண்டபம் பாங்கறிந்தேறி ஒட்டிய சமயத்து உறு பொருள்வாதிகள் தத்தம் சமயக் கோட்பாடுகளை நிலைநாட்டும் வழக்கம் இருந்தது என்பதற்கு மணிமேகலையும், குண்டலகேசியும் சான்றுகளாகும். இத்தகைய

16. கிருபானந்தவாரியாரின் வானொலி உரை; 5.1.87

17. வ. இராசகோபாலன்; காரைக்காலம்மையாரின் சமுதாய மெய்ப்பொருளியல் கோட்பாடுகள் - சென்னைப் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடு ; ப. 7.

பின்புலத்தில் முதல் ஆழ்வார்களின் இயற்பாக்களும் காரைக்காலம்மையாரின் படைப்புகளும் முதன்முறையாக முறையே திருமாலின் பெருமையையும், சிவனின் பெருமையையும் எடுத்துக்கூறுவனவாக அமைந்தன. இறையுணர்வு பரப்பும் நாயன்மார்களுக்கும் முன்னோடிகளாக அமைந்தன.[18]

சங்கத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடல் முருகனையும், திருமாலையும் பாடுவதாகவும் இசைப்பாடல்களைக் கொண்டதாகவும் விளங்குகின்றது. சிவனைப் பாடும் இசைப்பாடல் நெறிக்கும் சைவத் திருமுறை இலக்கிய நெறிக்கும் காரைக்காலம்மையாரின் பாடல்களே அடிப்படையாக அமைகின்றன.

மூத்த திருப்பதிகங்கள் முறையே நட்டப்பாடைப்பண்ணிலும், இந்தளப் பண்ணிலும் பாடப்பெற்றுள்ளன. எனவே இவற்றைப் பாடிய அம்மையார் இயற்றமிழிலும், இசைத் தமிழிலும் வல்லவர் என்பது துணியப்பெறும். கவுணியர், நாவுக்கரசர், பேயார் இம்மூவர் கற்கும் இயல் இசை வல்லோர் என்று சுட்டுகின்றது சேக்கிழார் புராணம்.

பக்திப் பனுவலில் ஈற்றுப் பாடலில் பாடுவோர் பெயரை அமைத்துப் பாடுதல், அப்பாடல்களைப் பாடுவோர் பெறும் பயன்களைக் கூறுதல் என்ற முறைகளையும் முதன்முதலில் அமைத்துப் பாடியவர் அம்மையாரே ஆவார்.

அந்தாதி, பதிகம், இரட்டைமணிமாலை ஆகிய மூன்று புதிய அமைப்புகளை முதன்முதலில் தமிழிலக்கியத்திற்குத் தந்தவர் காரைக்காலம்மையார். ஈமப் பெருங்காட்டில் சிவபெருமான் ஆடும் நடனம் பற்றிப் பாடும் மரபில் முதன் நூல்களாக அமைபவை மூத்த திருப்பதிகங்களே என்பதும் இவண் குறிப்பிடத்தக்கது. அம்மையாருடைய திருவிரட்டை மணிமாலை இவ்விலக்கிய வகையில் முதலாவதாக விளங்குகின்றது. கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பிற்கு மூல இலக்கியமாக விளங்குபவை இம்மாலையிலமைந்துள்ள கட்டளைக் கலித்துறை செய்யுட்களே ஆகும்.

காரைக்காற் பேயாரும், பூதத்தாழ்வாரும் சேர்ந்து ஒரு அரிய வெண்பா பாடியுள்ளனர் என்பதை யாப்பருங்கலவிருத்தி ஆசிரியர் எடுத்துக் காட்டு ஒன்றினால் அறிய முடிகின்றது. ஆனால் காரைக்காலம்மையார்,

---

18. தி. லீலாவதி ; திருஞானசம்பந்தர் திருப்பாடல்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் - சைவசிந்தாந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்; ஏப். 1986; ப.4.

பூதத்தாழ்வார் காலத்திற்கு முற்பட்டவராதலால் இவ்விருவரும் சேர்ந்து பாடியுள்ளனர் என்னும் கருத்து பொருந்துவதன்று என க. வெள்ளை வாரணன் நிறுவியுள்ளார்.[19]

## அம்மையாரின் படைப்புகள்

| நூற்பெயர் | பாடல் எண்ணிக்கை | யாப்பு |
|---|---|---|
| அற்புதத் திருவந்தாதி | 101 | வெண்பா |
| திருவிரட்டைமணிமாலை | 20 | கட்டளைக்கலித்துறையும் வெண்பாவும் |
| திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் - 1 | 11 | விருத்தப்பா |
| திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் - 2 | 11 | விருத்தப்பா |
| | 143 | |

### அற்புதத் திருவந்தாதி

காரைக்காலம்மையார் இறைவனிடம் பேய் வடிவம் வேண்டிப் பெற்று மெய்யறிவு மீதூர முதன்முதலாகப் பாடியது அற்புதத் திருவந்தாதி என்பது. அவரது 'வரலாறும் காலமும்' என்ற பகுதியில் கூறப்பட்டது. அந்தாதி இலக்கியத்திற்குக் காலத்தால் முதலர்வதாகவும் இவ்வந்தாதி கொள்ளப்படுகின்றது. இவ்வந்தாதியின் சிறப்பினை நோக்கி 'அற்புதத் திருவந்தாதி' என்று போற்றி மகிழ்ந்துள்ளனர் சைவ சமயச் சான்றோர். இவ்வந்தாதி 101 வெண்பாக்களைக் கொண்டு விளங்குகின்றது.

அந்தாதி என்பது ஒரு பாட்டின் ஈற்றடி அதாவது அந்தம், அடுத்த பாட்டின் முதலடியின் முற்பகுதியாக அதாவது ஆதியாக அமையும் இலக்கிய வகையாகும். இம்முறையிலமைந்த அம்மையாரின் அந்தாதியில் முதல் வெண்பா 'பிறந்து' என்று தொடங்குகின்றது. இதன் ஈற்று.வெண்பா 'பேராத காதல் பிறந்து' என்று முடிகின்றது.

19. க. வெள்ளைவாரணன்; பன்னிரு திருமுறை வரலாறு; பக். 543-544

அற்புதத் திருவந்தாதி என்னும் தொடரில் 'அற்புதத் திரு' என்றும் சொற்களுக்குப் பல்வேறு பொருள்கள் காணப்பட்டுள்ளன. இறைவனால் ஆட்கொள்ளப்பெற்று அவனுடைய உடைமைப் பொருளாகி அவனை உணரும் திருவருட்பெருமையே அம்மையார் 'அற்புதத் திரு' என்றார் என்பர் இரத்தினசபாபதி.[20]

'அற்புதம்' என்பது பலராலும் வியந்து போற்றற்குரிய சிவ ஞானத்தைக் குறிக்கும். இறையருளால் தம் உள்ளத்தில் தோன்றிய சிவஞானத்தின் ஒருமைப்பாட்டினால் மாதொருபாகனாகிய ஈசனைப் பாடிப் போற்றிய அந்தாதி ஆதலால் இப்பனுவல் அற்புதத் திருவந்தாதி எனப்பட்டது. சேக்கிழாரும் இந்நூட்பத்தினை,

> உற்பவித்தெழுந்த ஞானத் தொருமையின் உமைகோன் றன்னை
> அற்புதத் திருவந்தாதி அப்பொழு தருளிச் செய்வார்

என்று புலப்படுத்தியுள்ளார் என்பர் வெள்ளைவாரணன்.[21]

'அற்புதம்' என்பது 'அடிமைத்திறனை வியந்தது'; 'அற்புதம்' ஞானம் என்றுமாம் என்பர் பெரியபுராணத்திற்கு உரைகண்ட சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார். 'இறைவனைப் போற்றும் பூதகண வடிவம் வேண்டிப்பெற்று, அவ்வடிவோடு இறைவனின் அருட்கோலங்களைக் கண்டு திளைத்து, வியந்து பாடியது' என்றும் இவர் மேலும் விளக்குகின்றார்.

இறைவனின் அருளை அவனருளே கூட்டுவித்தாலன்றி ஆன்மா தானே இறைவனைச் சென்றடையும் ஆற்றலற்றது. இவ்வாறு இறைவனைச் சேரும் நிலையினைத் 'திருவடிக்கட் சேருந்திரு' என்று(47) காரைக்காலம்மையாரே தம் அற்புதத் திருவந்தாதியில் குறிப்பிட்டுள்ளார். தாம் இறைவனுக்கு அடிமைப்பட்ட திறத்தினை வியந்தும், தாம் வேண்டியவாறே தமக்கு இறைவன் பேய்வடிவம் தந்த அருட்டிறத்தினை வியந்தும் அம்மையாரே அற்புதத் திருவந்தாதியில் பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் சில தொடர்கள் வருமாறு:

> யானே தவமுடையேன் .......... அம்மானுக்காளாயினேன் (7)

> எந்தையார்க் காட்செய்யப் பெற்ற விதுகொல்லோ
> சிந்தையார்க் குள்ள செருக்கு . (79)

---

20. V. Rathinasababathy; Arputhathiru of Karaikkal Ammaiyar, Indian Philo sophical Annual volume - 17-1, pp. 1-4.

21. க. வெள்ளை வாரணன்; முன் சுட்டியது ; ப. 534.

சிவபெருமானின் அற்புதச் செயல்களை வியந்து அம்மையார் பாடியுள்ள பாடல்கள் அற்புதமாக அமைந்துள்ள சிறப்பைக் கருதி, அறிஞர்கள் இந்நூலுக்கு அற்புதத் திருவந்தாதி எனப் பெயரிட்டனர் என்பர் சசிவல்லி.[22]

அற்புதத் திருவந்தாதியில், அம்மையார் தான் சிவனுக்கு ஆட்பட்ட திறம், அவன் தன்னை ஆட்கொண்ட திறம், அவனது இயல்புகள், அவனது தோற்றப் பொலிவு ஆகியவற்றை வியந்து பாடியுள்ளார். இத்திறங்களிலமைந்த பாடல்கள் சில இவண் சான்றாகக் காட்டப்படுகின்றன.

ஆட்பட்ட திறம்

அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும் அவர்க்கே
நாம் அன்பாவ தல்லாத - பளிச்சடைமேல்
பாகனப் போழ் ஆடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்
காகாப்போம் எஞ்ஞான்றும் ஆள். (3)

ஆட்கொண்ட திறம்

முடிமேற் கொடுமதியான் முக்கணான் நல்ல
அடிமேற் கொடுமதியோங் கூற்றைப் - படிமேற்
குனியவல மாமடிமை கொண்டாடப் பெற்றோம்
இனியவல முண்டோ வெமக்கு. (69)

இறையியல்பு

அறிவானும்தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளுந்தானே விரிசுடர்பார் ஆகாசம்
அப்பொருளுந் தானே அவன். (20)

தோற்றப் பொலிவு

இத்தகைய இயல்புடைய இறைவனின் தோற்றப் பொலிவினை வியந்து இவ்வந்தாதியில் அம்மையார் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

---

22. S. Sasivalli, Karaikkal Ammaiyar; p - 9.

இதுவன்றே யீசன் திருவுருவ மாமா!
யிதுவன்றே யென்றெனக்கோர் சேமம் - இதுவன்றே
மின்னும் சுடருருவாய் மாண்டரவன் சிந்தனைக்கே
யின்னும் சுழல்கின்ற தீங்கு! (24)

என்னும் பாடலில் வியப்புணர்ச்சி அற்புதமாய் அமைந்துள்ளது.

அடிபேரிற் பாதாளம் பேரு மடிகள்
முடிபேரின் மாமுகடு மேரும் - கடக
மறிந்தாடு கைபேரின் வான்றிசைகள் பேரு
மறிந்தாடு மாற்றா தரங்கு. (77)

என எங்கும் நிறைந்த இறைவனின் ஆடலழகையும்,

காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்
தாங்குருவே போலும் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு. (65)

என வரும் பாடலால், பகல், இரவு முதலிய பொழுது மாற்றங்களில் கூட இறைவனின் தோற்றமே பொலியும் எழிலையும் அம்மையார் நயமுறப் பாடியுள்ளார்.

சிவனின் தோற்ற வருணனையாக அமைந்துள்ள பாடல்கள் குறித்த இரு கருத்துக்கள் மட்டும் இவண் சிந்திக்கத்தக்கன. ஒன்று அம்மையார் நெஞ்சைக் கவர்ந்த சிவனின் தோற்றம், அவனது பாம்பணிந்த தோற்றமே என்று கூற முடிகின்றது. இத்தோற்றத்தினைச் சற்றொப்ப இருபத்தொன்று பாடல்களில் வியந்து பாடியுள்ளார் அம்மையார். மற்றொன்று, மாதொரு பாகனாகிய சிவபெருமானை மாலொரு பாகனாக அவர் காட்டும் காட்சியாகும். இக்காட்சி புதுமையாகவும், வியப்பாகவும் உள்ளது.

ஒருபால் உலகளந்த மாலவளாம் மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால் இருபாலும்
நின்னுருவம் ஆக நிறந்தெரிய மாட்டேமால்
நின்னுருமோ மின்னுருவோ நேர்ந்து. (41)

என "ஒருபால் உலகளந்த திருமாலும், ஒருபால் உமையம்மையுமாக விளங்கும் உன்னுருவம் எது? மின்னுருவோ?" என வியந்து கேட்கின்றார் அம்மையார்.

**தாயன்பு**

இறைவனாலேயே 'அம்மை' என்று அழைக்கப்பட்ட பேறு பெற்றவராகிய காரைக்காலம்மையாரின் பாடல்களில், அவர் தாயன்போடு சிவபிரானை நோக்கிப் பாடும் இயல்பினைக் காண முடிகின்றது. அற்புதத் திருவந்தாதியில்,

நீ உலகம் எல்லாம் இரப்பினும் நின்னுடைய
தீய அரவொழியச் சொக்கண்டாய் - தூய
மடவரலாக வந்து பலியிட்டார் அஞ்சி
விட அரவம் மேலாட மிக்கு. (57)

என்று அன்போடு உரைக்கின்றார் அம்மையார்.

**திருவிரட்டை மணிமாலை**

இந்நூல் இருபது பாடல்களைக் கொண்டது. கட்டளைக் கலித்துறை முன்பும், வெண்பா பின்புமாக அந்தாதித் தொடையிலமைந்துள்ளது. அற்புதத் திருவந்தாதி போன்றே, இந்நூலிலும் அம்மையார் இறைவனின் பெருமைகளைக் கூறியுள்ளார். தம் நெஞ்சுக்கு உரைப்பதுபோல், உலகத்தவருக்கு இறைவனை வணங்குமாறு அறிவுரை புகன்றுள்ளார். ஐந்தெழுத்தின் பெருமைகளையும் விளக்கியுள்ளார்.

**இறைவனின் பெருமை**

சிவபெருமான் வேதியன், வேதப் பொருளானவன், வேதத்துக்கு ஆதியாய் நின்றவன், ஆதிரை நன்னாளான், மாலுக்கும் நான்முகனுக்கும் அரியவன் என்ற பெருமையினை,

வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்
காதியனை ஆதிரைநன் னாளானை - சோதிப்பான்
வல்லேன மாய்ப்புக்கு மாலவனும் மாட்டாது
கில்லேன மாஎன்றான் கீழ் (8)

என விளக்குகின்றார் அம்மையார்.

**நெஞ்சுக்குரைத்தல்**

சிவானுபவம் பெற்ற செல்வர்கள், தாம் பெற்ற இன்பத்தைத் தாம் மட்டுமே அனுபவியாது, வையத்திற்கும் வாரி வழங்கும்

இயல்புடையோராக விளங்குகின்றனர். தம் நெஞ்சுக்குரைப்பதுபோல், உலகத்தவரை அழைத்து இறைவனை வணங்குமாறு வேண்டுகின்றனர். அம்மையாரும் இவ்வாறே:

சங்கரனைத் தாழ்ந்த சடையானை அச்சடைமேற்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை - அங்கொருநாள்
ஆவாவென் றாழாமற் காப்பானை எப்பொழுதும்
ஓவாது நெஞ்சே உரை (6)

என்று தம் நெஞ்சுட்குரைப்பதுபோல், உலகத்தவர்க்கு உணர்த்துகின்றார்.

### ஐந்தெழுத்தின் பெருமை

காரைக்காலம்மையார், திருவிரட்டை மணிமாலையில் ஐந்தெழுத்தின் பெருமையைப் பின்வருமாறு எடுத்தோதியுள்ளார்.

தலையாய ஐந்தினையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையாயின உணர்ந்தோர் காண்பர் - தலையாய
அண்டத்தான் ஆதிரையான் ஆலாலம் உண்டிகொண்ட
கண்டத்தான் செம்பொற் கழல் (10)

தலைமைபெற்ற ஐந்தெழுத்தை இடைவிடாது சிந்தித்து ஓதினால், ஈசனின் செம்பொற்கழலடி சேரலாம் என்பதை இப்பாடலால் உணர்த்தியுள்ளார் அம்மையார்.

### திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்

கயிலை சென்ற காரைக்காலம்மையார் இறைவனிடம் இறவா அன்பும், பிறவாமையும், பிறப்புண்டேல் அவனை மறவாமையும் வேண்டினார். மேலும், ஈசன் ஆடும்போது, அம்மையார் மகிழ்ந்து பாடி அவனடிக்கீழ் இருக்க வேண்டும் என்றும் வேண்டினார். சிவபிரானும் திருவாலங்காட்டில் 'நாம் ஆடும் ஆடல் கண்டு ஆனந்தங்கொண்டு எம்மைப் பாடுவாய்' என்று அருளிச் செய்தான். அம்மையாரும் அவ்வாறே திருவாலங்காடு சென்று, இறையாடலைக் கண்டு திருப்பதிகங்கள் இரண்டையும்பாடி மகிழ்ந்தார். இப்பதிகங்கள் காலத்தால் தொன்மையும், இறைவனின் ஊழி நடனத்தைப் பாடிய பெருமையும் கொண்டனவாதனால் மூத்த திருப்பதிகங்கள் என்று போற்றப்படுகின்றன.

பதிகத்தின் ஈற்றுப்பாடல் திருக்கடைகாப்பு என்று கூறப்பெறும். இத்திருக்கடைகாப்பில் பதிகத்தைப் பாடுபவர் பெயரும், அப்பதிகத்தைப்

பாடுவதால் வரும் நலன்களையும் கூறி முடித்தல் மரபாகும். திருவாலங்காட்டுத் திருப்பதிகத்தின் மூலம் அம்மையாரே இம்மரபைத் தொடங்கி வைத்தவராவார். இதனால், பதிகப் பெருவழி வளர்த்த சம்பந்தருக்கு முன்னோடியாக விளங்குகின்றார். இரட்டைமணிமாலையில் அம்மையார் இம்மரபைப் பின்பற்றவில்லை. ஆனால், மூத்த திருப்பதிகங்களிலும் (1:11), அற்புதத் திருவந்தாதியிலும் (2:11) பின்பற்றியுள்ளனர்.

அம்மையார் திருவாலங்காட்டுத் திருப்பதிகங்களில், தாம் கண்ட இறைவனின் திருக்கூத்தை, 'அந்திநடம்' (1:10), 'அந்தி நிருத்தம்' (2:7) என்று குறிப்பிடுகின்றார். இறைவியும் அமரரும் இவ்வாடலைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் எடுத்துரைக்கின்றார். முயலகன் பற்றிய குறிப்பு காணப்படவில்லை. சிவபெருமான் திருவாலங்காட்டில் ஆடிய ஊழிக்கூத்தே, இத்திருப்பதிகங்களில் உட்பொருளாக அமைந்துள்ளது.

### திருவாலங்காடு

தொன்மையும், தலப்பெருமையும் வாய்ந்தது திருவாலங்காடு. இத்தலத்து இறைவன் 'தேவர்சிங்கம்' எனவும், இறைவி 'வண்டார்குழலி' என்றும் அழைக்கப்படுகின்றனர். அம்மையார் இத்தலத்தினை, 'அண்டமுற நிமிர்ந்தாடும் எங்கள் அப்பனிடம்' என்று புகழ்ந்துள்ளார்.

திருவாலங்காட்டுத் திருக்கோயிலில் கி.பி. 5 ஆம் நூற்றாண்டு முதல், கி.பி.14 ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுக்கள் உள. 3ஆம் குலோத்துங்க சோழனின் (கி.பி.1178-1218) கல்வெட்டு ஒன்றில் அம்மையார் போற்றிய தொடரை அடிப்படையாகக் கொண்டு 'அண்டமுற நிமிர்ந்தாடும் இலிங்கநாயனார் கோயில்' என்று இக்கோயில் குறிப்பிடப்பட்டுள்ளது.[23] பங்குனித் திங்களில் இக்கோவிலில் காரைக்காலம்மையார் விழா கொண்டாடப்படும்.

### திருவாலங்காட்டுத் திருநடனம்

சிவபிரான், நடராசனாகத் திருவாலங்காட்டில் ஆடிய நடனம் ஊர்த்துவ நடனம் எனப்படும். ஒரு காலை உயரத்தூக்கி ஆடும் நிலையில் இவ்வாடல் தோற்றம் அமைந்துள்ளது. இன்றும் இத்தோற்றமமைந்த, பேரழகு வாய்ந்த உருவச்சிலையைத் திருவாலங்காட்டிற் காணலாம்.

---

23. Ibid

நடராசர் ஆடும் இவ்வூழிக்கூத்து பரத முனிவரால் 'லலாட திலகம்' என்று விளக்கப்படுகின்றது. இவ்வாடல் 'காளிதாண்டவம்' என்றும் 'சண்ட தாண்டகம்' என்றும் 'அருள் நட்டம் அல்லது அனுக்கிரக தாண்டவம்' என்றும் 'சம்ஹார தாண்டவம்' என்றும் கூறப்பெறுகின்றது. இறைவனின் ஐந்தொழிலைக் குறிக்கும் உருவகமாகத் திகழ்கின்றது இவ்வாடல்.

தமிழிலக்கியங்களில் இவ்வாடல் கொடுகொட்டி, பாண்டரங்கம் என்று கூறப்படுகின்றது. பேய்கள் புடைசூழ ஈமப்பெருங்காட்டில் நடைபெறும் இவ்வாடலைக் காண்போர் அஞ்சுவர். ஆனால் அம்மையாரோ, தாம் பெற்ற ஆன்ம பரிபக்குவ நிலையின் காரணமாக இவ்வாடலை இனிய பாடல்களால் நயமுறப் பாடியுள்ளார்.

இறைவன் ஆடிய ஊழிக்கூத்தின் உட்பொருளாக அவன் முப்புரம் எரித்ததையும், முப்புரம் எரித்ததின் உட்பொருளாக மும்மலங்களை அழித்ததையும் திருமந்திரமும், மனவாசுகம் கடந்தாரின் உண்மை விளக்கமும் இயம்புகின்றன.[24]

'ஈமப்பெருங்காடு என்பது மனித மனத்தைக் குறிக்கும். அந்நெஞ்சத்தில் மும்மலங்கள் எரிந்துபட வேண்டும் என்பதை அப்பெருங்காட்டுத் தீ உருவகமாகச் சுட்டிக் காட்டுகின்றது. மனித மனம் மும்மலங்களை எரித்துத் தூய்மையுற்று விளங்கும் போது, இறைவன் அம்மனதையே அரங்காகக் கொண்டு ஆடுகின்றான்' என்று தம் 'சிவானந்த நடனம்' என்ற நூலில் விளக்குகின்றார் ஆனந்தகுமாரசுவாமி.[25]

பேய்கள் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் உண்டு. பேயார் என்பது ஓர் ஆழ்வாரின் பெயராகவும் உள்ளது. கலிங்கத்துப்பரணி, போர்க்களத்தில் வீழ்ந்துபட்ட வீரர்களின் உடல்களைக் கொண்டு கூழ்அட்டு மகிழ்ந்துண்ணும் பேய்களை வருணிக்கின்றது. ஆனால், சிவபெருமானையே பேய்களின் தலைவர் என்று பாடி பேய்க்கணங்களுள் ஒரு பேயாகத் தாமும் வடிவம் பெற்று, பேய்க்கோலம் பூண்டு அவன் ஆடும் ஊழிக்கூத்தை அம்மையார் பாடியிருப்பது சிந்தனைக்குரிய ஓர் அரிய கருத்தாக, ஆன்ம அனுபவமாக, புத்திலக்கியப் படைப்பாக உள்ளது. இவ்வகையில் இஃது ஒரே ஒரு படைப்பாக இன்றுவரை இலங்கி வருகின்றது.

இடுகாட்டு வருணனையும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது. உலகத்தவர் செல்ல அஞ்சும் இடுகாட்டில் ஆடும்

---

24. க. வெள்ளை வாரணன், முன் சுட்டியது; ப.503

25. ஆனந்த குமாரசுவாமி; சிவானந்த நடனம்; பக். 71-75.

இறைவனை வருணித்து அம்மையார் உயிர்களுக்கு அஞ்சாமையையும், நம்பிக்கையையும், ஆன்ம பரிபக்குவத்தையும் ஊட்டியுள்ளார். இத்தகைய வியத்தகு இலக்கியப் படைப்பாகிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டிலும் திருவாலங்காட்டு ஈமப் பெருங்காட்டரங்கில் வருணனை, அங்குத் தங்கியிருக்கும் பேய்களின் வருணனை, அங்கு ஆடும் சிவபெருமானின் ஆடல் வருணனை ஆகிய மூவகை வருணனைகள் இடம் பெற்றுள்ளன.

முதலாம் மூத்த திருப்பதிகம், 'அப்பனிடந் திருவாலங்காடே' என்றும் ஈற்றடியைக் கொண்டு முடிகின்றது. இரண்டாம் பதிகம், 'குழகன் ஆடுமே' (2:1) 'அழகன் ஆடுமே' (2-2) 'பெருமான் ஆடுமே' (2:4) 'பரமன் ஆடுமே' (2:5) 'விமலன் ஆடுமே' என்றும் இறைவன் பெயரும் பெருங்காடே (2:3) என்றும் முடியும் ஈற்றடிகளைக் கொண்டு முடிகின்றது.

**ஈமப்பெருங்காட்டரங்கின் வருணனை**

ஈமப்பெருங்காட்டின் அச்சந்தரத்தக்க சூழலை இவ்விரு பதிகங்களிலும் பல வகையாக விளக்கியுள்ளார் காரைக்காலம்மையார். எட்டி, ஈகை, சூரை, காரை முதலிய பாலை நில மரங்கள் நிறைந்திருக்க கூகையும் நரியும் கேட்போர் அஞ்சுமாறு குரல்கொடுக்க, எங்கும் ஈமப்புகை நிறைந்து ஈமச்சடங்கு செய்வோர் இட்ட செந்தீ விளக்காக ஒளிர ஈமப்பெருங்காடு இறைவன் ஊழியாடலுக்கு அரங்காக அமைகின்றது. (2:10)

**பேய்கள் வருணனை**

மூத்த திருப்பதிகம் ஒன்றின் முதற்பாடலே, அம்மையார் பெற்ற பேய் வடிவத்தின் வருணனையாக விளங்குகின்றது.

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பாடுயர் நீங்கணைக் காலோர் பெண்பேய்
தங்கிஅலறி உலறுகாட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும்வீசி
அங்கங்குளிர்ந்தனல் ஆடும்எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே (1:1)

என்றும் இப்பாடலில், 'கொங்கை வற்றி நரம்பெழுந்த தோற்றத்துடன் கண்கள் ஆழ்ந்து குழிந்த வயிறும் சிவந்த மயிரும் இரு நீண்ட பற்களும் உயர்த்திய குதிகாலும் நீண்ட கணைக்காலும் கொண்ட ஒரு பெண் பேய் என்று தம்மையே அறிமுகம் செய்கிறார் அம்மையார். பேய்களின் தோற்றமும், செயல்களும் இவ்விரு திருப்பதிகங்களிலும் விளக்கப்பட்டுள்ளன. பேய்க்குடும்பமும் இப்பதிகங்களில் கூறப்பட்டிருப்பது வியப்பாக உள்ளது.

கள்ளியின் கிளையில் காலை நீட்டி, கொள்ளிக்கட்டையை எடுத்து அதன் கரியை மசித்து மையாகத் தீட்டி, வெடுவெடு என்று நகைத்து மருண்ட விலங்குகளைப் பார்த்துத் துள்ளிச் சுடலையில் பிணத்தினைச் சுடும் தீச்சுட்டிடச் சினம் கொண்டு மணலை அள்ளி அதனை அணைக்கின்றனவாம் பேய்கள். (1:2)

விழுதாக உள்ள நிலத்தை விழுங்கி, வெண்ணிய தலைமாலையணிந்து பேய் தன் பிள்ளைக்குக்காளி என்று பெயரிட்டுச் சிறப்பாக வளர்த்து அதன் புழுதியைத் துடைத்துப் பால்கொடுத்துச் சென்றது. அக்காளிப்பேய் தாயின் வரவைக் காணாமல் அழுது உறங்கிற்று. (1:5) என வருணிக்கின்றார் அம்மையார். இறைவனிடமே தாயன்போடு உரையாடிப் பாடிய அம்மையார் பேய்களிடமும் தாய்மை அன்பைக் காட்டுவது வியப்பன்று.

**ஈமப்பெருங்காட்டில் இறைவன் ஆடல்**

நினைப்பினும் அச்சந்தரத்தக்க, பேய்கள் சூழ்ந்த ஈமப்பெருங்காட்டில் அனல்கை ஏந்தி, பித்த வேடங் கொண்டு, மான்தோலும் புலித்தோலும் உடுத்து, அமரர் முழவோசை முறைமை தவறாது, ஊழிக்கூத்தினை ஆடுகின்றான் சிவபெருமான். துடியும் இணைந்த பாட்டுக்கேற்ப, செஞ்சடைகள் தாழ, வெண்டலை மாலையுடன் ஆடுகின்றான். இவ்வாடலைக் கண்டு மலையரசன் மகளாகிய உமையம்மையும் மருண்டு நோக்குகின்றாள் (2:8).

இவ்வாறு இடுகாடு அரங்காக மண்டலம் நின்று குளாளமிட்டு (வளைந்து சுற்றி வந்து) வீசி எடுத்த பாதம் அண்டமுற, கழலும் சிலம்பும் ஒலிக்க, அந்திப்போதில் மாநடம் ஆடும் அழகனின் ஆடல் எழிலை இத்திருப்பதிகங்களில் சொல்லோவியமாகப் படைத்துள்ளார் அம்மையார்.

**சிவஞானக் கருவூலம்**

சிவஞானச் செல்வமாக விளங்கும் காரைக்காலம்மையார் படைப்புகளில் பக்திச் சிறப்பு, தத்துவ ஆழம், சமுதாய நோக்கு, கற்பனையழகு, உணர்ச்சித் திறம், நடைநலம், புராணக் கதைகளைப் பயன்படுத்தும்வளம், இசைப்புலமை ஆகிய பல்வேறு மாண்புகளைக் காணமுடிகின்றது.

அம்மையார் பாடல்கள் அனுபவ இலக்கியமாக மிளிர்கின்றன. அற்புதத் திருவந்தாதி அவரது ஞான அனுபவ இலட்சியமாகவும், திருவிரட்டைமணிமாலை இறைவனின் திருவடியைப் பற்றிக் கொண்டு அடியார்கள் பிறவிப்பணி நீக்கி வேண்டும் என்றுரைக்கும் அன்பு இலக்கியமாகவும் விளங்குகின்றன. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களோ, பரிபக்குவமுற்ற ஆன்மாவின் அஞ்சாமையை, நம்பிக்கையை, புதிய அனுபவத்தை, ஆடல் தரிசனத்தால் விளைந்த உள்ளொளியை எடுத்துக்காட்டும் புதுமை இலக்கியமாக ஒளிர்கின்றன. சிவானுபவச் செல்வமாகிய அம்மையாரின் பாடல்கள் இலக்கியத் தரத்தால், பதினோராம் திருமுறையில் திருவாலவாயுடையார் திருப்பாசுரத்திற்கு அடுத்ததாக வைக்கப்பட்டுள்ளன. திருவாலவாயுடையார் இறைவன் என்று கொண்டால் இத்திருமுறையில் முதலிடம் பெற்றிருப்பது அம்மையார் பாடல்களே என்பது சிந்தித்துப் போற்றத்தக்கது.

## 4. கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு

காரைக்காலம்மையாரின் வரலாறு கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது என்பதை விரிவாக ஆராய்ந்துள்ளார் எம்.எஸ். லட்டே.[1] பிரெஞ்சுமொழியிலும், காரைக்காலம்மையாரின் இலக்கியத் தாக்கத்தைக் காண வாய்ப்புண்டு என்பர் ஜே.சி. கமலையா.[2] கன்னட மொழியில் கூறப்படும் அம்மையாரின் வரலாற்றினைக் காணுமுன், கருநாடகத்தில் அறுபத்துமூன்று நாயன்மாரின் வரலாறுகள் பரவியிருந்த நிலையினை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது.

### கன்னடத்தில் அறுபத்துமூன்று நாயன்மார் வரலாறுகள்

பிரமாண்டம், பவிஷ்யத் என்னும் புராண நூல்கள் பக்தி என்பதனை ஒரு பெண் குழந்தையாக உருவகப்படுத்துகின்றன. இக்குழந்தை திராவிடம் அல்லது தமிழ்நாட்டில் பிறந்து (இப்புராணங்களின் சில பாட முறைகள் குறிப்பாகக் காவிரியிலும் தாம்பிரபரணியிலும் இக்குழந்தை பிறந்ததாகக் கூறும்) தென்னகம் எங்கும் சென்று வளர்ந்து குஜராத்தினை அடையும் போது முதியவளாக மாறுகிறாள் என விவரிக்கின்றன. தமிழ்நாட்டு ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் உலகுக்களிக்கப்பெற்ற பக்திநெறியினையே இவ்வுருவகம் உறுதியாகச் சுட்டி நிற்கிறது எனலாம் என்பர் தெ.பொ. மீனாட்சிசுந்தரம்.[3]

தமிழகத்துப் பக்திநெறியும், அந்நெறியைப் பரப்பிய அடியார்களின் வரலாறுகளும் தமிழகத்திற்கு அருகிலுள்ள நாடுகளான கருநாடகம், ஆந்திரம் ஆகிய இடங்களுக்கும் பரவின. கருநாடகத்தில் தமிழகத்து அறுபத்து மூன்று நாயன்மார்கள் 'திரிசஷ்டி புராதனர்' என்றழைக்கப்பட்டனர். கன்னட நாட்டில் பசவண்ணரின் பிறப்பிற்கு முன்பே இச்சிவபக்தர்களின் கதைகள் வீடுதோறும் பேசப்படும் அளவிற்குப் பரவியிருந்தன[4] என்பர் எம். சிதானந்தமூர்த்தி.

பொன் செருப்பணிந்தவன் பாம்பு கடித்த செஞ்சடையன்
உடலில் விபூதியணிந்தவன் கரத்தில் கபாலம் பிடித்தவன்

---

1. எம்.எஸ். லட்டே ; மகாதேவி அக்காவும் காரிகாலம்மையும் (கன்னட நூல்) பக். 63, 106.
2. 2.9.86 நாளில் நூலாசிரியருக்கு எழுதிய மடல்.
3. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்; தமிழும் பிறபண்பாடும்; ப.18.
4. எம்.சிதானந்தமூர்த்தி, பசவண்ணர் வாழ்க்கை வரலாறு, ப.35

அர்த்தநாரியானவன் பாணனின் வாயில் காத்தவன்
சுந்தரருக்குத் தூது நடந்தவன்
சோழனுக்குப் பொன்மழை பெய்வித்தவன்
என் மனதிற் குவந்தவன் மெய்யன்பர்களின்
இதயத்திலிருப்பவன்
செய்யும் பூஜையை ஒப்புக் கொள்பவன்
கூடல சங்கையன் என்பவன்[5]

என்று நாயன்மார்களைக் குறிப்பிடுகின்றார் பசவண்ணர். இவரே,

நாராயணன் பிராம்மண வடிவில் வந்து
பலியிடம் பூமியைத் தானம் கேட்டான்
கொடுத்த பலி அழிந்தான்
ஈசன் ஜங்கமனாகி வந்து தாசனை வஸ்திரம் கேட்டான்
கொடுத்த தாசன் சிவநிதியைப் பெற்றான்
நாராயணன் உருமாறி வந்து கர்ணனிடம் கவசத்தைக் கேட்டான்
கொடுத்த கர்ணன் களத்தில் மடிந்தான்
சிவபெருமான் ஜங்கமனாகி வந்து சிரியாளனின் மகனைக் கேட்டான்
கொடுத்த சிரியாளன் காஞ்சிபுரத்திலிருந்து கைலாசம் எய்தினான்
இதனால்
எதுஉயர்ந்தது கூறாய் கூடலசங்கமரின் சரணருக்கே![6]

என்னும் தம் வசனத்தில் திருக்குறிப்புத் தொண்டநாயனாரையும், சிறுத்தொண்டரையும் குறிப்பிடுகின்றார்.

கன்னட நூல்களில் அறுபத்துமூன்று நாயன்மார் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. மஹாதேவியக்காவும், காரிகாலம்மையும் என்ற பி.எச்.டி. பட்ட ஆய்வு நூலைக் கன்னடத்தில் தந்துள்ள எம்.எஸ். லட்டே அவர்களின் கருத்துக்கள் இவண் தரப்படுகின்றன.

புகழ்பெற்ற கன்னடக் கவிஞனான ஹரிஹரன் பதினமூன்றாம் நூற்றாண்டில் தமிழகம் வந்து, சிவனுக்காகவும், சிவனடியார்களுக்காகவும் வாழ்ந்த இந்நாயன்மார்களின் பிறந்த தலங்களுக்குச் சென்று, அவ்வடியார்களின் கதைகளைக் கேட்டு, சேக்கிழாரின் பெரிய புராணத்தையும் படித்து இவ்வடியார்களைப் பற்றிய இலக்கியங்களை 'ரகளை' என்னும் இலக்கியவடிவில் கன்னட மொழியில் படைத்தான்.

நம்பியண்ணன் ரகளை
திருநீலகண்டன் ரகளை

---

5. மேற்படி ப.112

6. எம்.எஸ். லட்டே; முன்சுட்டியது ; ப.135.

பேடர கண்ணப்பன் ரகளை (வேடர் கண்ணப்பர்)
காரிகாலம்மே ரகளை (காரைக்காலம்மையார்)

ஆகியவை ஹரிஹரன் பாடியவையாகும்.

சேக்கிழாரின் பெரியபுராணத்தை ஒட்டி வடமொழியின் உபமன்யு முனிவர் 'பக்தவிலாசம்' எழுதியுள்ளார். அதனை அடிப்படையாகக் கொண்டு 16-ஆம் நூற்றாண்டில் கவிச்சக்கரவர்த்தி சுரங்கமர் 'திரிசஷ்டி புராதன சரித்ரம்' என்னும் காவியத்தை எழுதியுள்ளார். அது கன்னடமொழியில் அறுபத்து மூவரைப் பற்றிய மகாகாவியமாகும், இஃது.

நிஜகுண சிவயோகி என்பவரும் இந்நாயன்மார்களைப் பற்றிப் 'புராதனர் திரிவிதி' என்னும் நூலை இயற்றியுள்ளார்.

சரணர் அறுபத்துமூவர் மகிமைகளை
உணர்ந்து ஓதிக்கேட்டு உரைப்பவருக்கே
மெய்ச்சுகம் கிட்டும்

என்பது நிஜகுண சிவயோகி கூறும் கருத்தாகும்.

பின்வரும் கன்னட நூல்களும் அறுபத்துமூன்று நாயன்மார் பற்றியனவே.

| கவிஞர் | நூற்பெயர் | செய்யுள் வடிவம் |
|---|---|---|
| வீரபத்திர சிவயோகி | அறுவத்து மூவரு புராதன சரித்ர | வார்திக ஷட்பதி |
| சோமேஸ்வர | அறுவத்து மூவர் சாங்கத்ய | சாங்கத்ய |
| களரி நம்பிராஜ | அறுவத்து மூவர் திரிவிதி | திரிவிதி |
| ஆசிரியர் பெயர் தெரியவில்லை | புராதன தேவியர திரிவிதி | திரிவிதி |
| ஆசிரியர் பெயர் தெரியவில்லை | அறுவத்து மூவரு புராதனா சரித்ர | கத்யம் |
| ஆசிரியர் பெயர் தெரியவில்லை | பிராக்தந கண கதாவளி | |
| ஆசிரியர் பெயர் தெரியவில்லை | புராதனர ப்ரகரணகளு | |
| குமார சென்னபசவ | புராதனர சரித்ர | |
| பத்ரவீர சுத | புராதனர புராண சங்கேய விலாச | |
| ஆசிரியர் பெயர் தெரியவில்லை | சர்வ புராதனர புராண | |
| லக்கண்ணதண்டேச | சிவதத்வ சிந்தாமணி (சில பகுதிகள்) | ஷட்பதி |
| விருபாக்ஷபண்டித | சென்னபசவ புராண(சில பகுதிகள்) | ஷட்பதி |

கீழ்க்கண்ட கன்னட நூல்கள் பிற செய்திகளை விளக்கும்போது அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றன.

| நாயன்மார் | நூல் | கவிஞர் |
|---|---|---|
| நம்பியண்ண (சுந்தரர்) | சௌந்தர புராண | பொம்மரச |
| நம்பியண்ண (சுந்தரர்) | சௌந்தர. விலாச | அண்ணாஜி |
| சேரம (சேரமான்பெருமாள்) | சேரம காவ்ய | சேரமாங்க |
| சிரியாள (சிறுத்தொண்டர்) | சிரியாள செட்டிய சாங்கத்ய | மஹாதேவ |
| சிரியாள (சிறுத்தொண்டர்) | சிரியாள சத்வபரீக்ஷ | சாந்தகவி |
| சிரியாள (சிறுத்தொண்டர்) | சிரியாள சரித்ர | மஹாந்ததேசிக |
| சிரியாள (சிறுத்தொண்டர்) | சிரியாள ராஜ | ஜெயராமாசார்ய |
| பகள்சோள (புகழ்ச்சோழர்) | சோளராஜ சாங்கத்ய | லிங்க |
| கண்ணப்ப (கண்ணப்பர்) | கண்ணப்பனவரகதே | ? |

19ஆம் நூற்றாண்டில் பெரியபுராணத்தை ஆதாரமாகக் கொண்டு சென்னையில் எஸ்.சி. சென்னவீரப்பர் 'புராதன பக்திவிலாசம்' என்ற இலக்கியத்தைப் படைத்தார். இவ்வாறே மீர்ஜி மகாருத்ரப்பர், சுரங்க கவியின் படைப்பை ஆதாரமாகக் கொண்டு 'அறுவத்து மூவரு புராதனரு' என்னும் நூலை இயற்றினார். வீரசைவ புராணங்களிலும் நாயன்மார்களைப் பற்றிய குறிப்புக்களைக் காணலாம். வீரசைவ மகாபுராணம், பசவபுராணம், ப்ரௌடராயன காவ்யம், பாலுகுரிசி சோமநாதபுராணம் முதலிய வீரசைவ நெறி கூறும் நூல்களிலும் நாயன்மார் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

தமிழகத்தில் சைவத் திருக்கோயில்களில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் உருவச்சிலைகள் இடம் பெற்றுள்ளன. அவ்வடியார்கள் வழிபாட்டிற்கும், விழாவிற்கும் உரியவர்களாகத் திகழ்கின்றனர். வீரசைவர்களுக்கு இவர்கள் இலட்சிய புருஷர்கள். வழிபாட்டிற்கும், வணக்கத்திற்கும் மதிப்பிற்கும், அன்பிற்கும், அபிமானத்திற்கும் உரியவர்கள்[7] என்பர் எம்.எஸ். லட்டே. இந்நாயன்மார் பெயர்கள் கன்னடத்தில் எவ்வாறு வழங்குகின்றன என்பதைப் பின்வரும் அட்டவணையிற் காணலாம்.

7. மேற்படி ப.41

## நாயன்மார்களின் பெயர்கள்

| தமிழ் | கன்னடம் |
| --- | --- |
| சுந்தரமூர்த்தி | சௌந்தர நம்பி |
| திருநீல கண்டர் | திருநீலகண்ட |
| இயற்பகை | இஉறப்பகையாண்ட |
| இளையான்குடிமாறர் | எளியாண்ட குடிமார |
| மெய்ப்பொருள் | சேதிராஜய்ய |
| விறன்மிண்டர் | மரமிண்டதேவ |
| அமர்நீதி | அமரநீதி |
| எறிபத்தர் | இரிபக்தரு |
| ஏனாதி | ஏனாதிநாத |
| கண்ணப்பர் | கண்ணப்ப தேவரு |
| குங்கிலியக் கலயர் | குங்கிலி மக்கலய |
| மானக்கஞ்சாறர் | மான கஞ்சர |
| அரிவாட்டாயர் | அரிவாள் தாண்டரு |
| ஆனாயர் | ஆனைநாரரு |
| மூர்த்தி நாயனார் | வலகண்ட மூர்த்திகளு |
| முருகர் | முருக |
| ருத்ரபசுபதி | ருத்ர பசுபதிகளு |
| திருநாளைப் போவார் | திருநாள் போவரு |
| திருக்குறிப்புத் தொண்டர் | திருக்குறிப்புத் தொண்டரு |
| சண்டேஸ்வரர் | தண்டீச |
| திருநாவுக்கரசர் (வாகீசர்) | வாகீஸ்வரரு |
| குலச்சிறை | குலச்சரியரு |
| பெருமிழலைக் குறும்பர் | பிருமளல குரும்பரு |
| காரைக்காலம்மை | காரிகாலம்மை |
| அப்பூதியடிகள் | அப்பூதியடிகளு |
| திருநீலநக்கர் | திருநீலநக்கரு |
| நமிநந்தியடிகள் | நமிநம்பி |
| திருஞானசம்பந்தர் | பிள்ளே நாயனார் (திருஞானசம்பந்தரு) |
| ஏயர்கோன் கலிக்காமர் | கலிகாம தேவரு |
| திருமூலர் | திருமூல தேவரு |
| தண்டியடிகள் | நாட்யமஉற தண்டி |
| மூர்க்க நாயனார் | அச்யுத |
| சோமாசி மாறர் | சோமாசி மாரரு |
| சாக்கிய நாயனார் | சாங்கிய நாரரு |
| சிறப்புலி | சிறுபுலியாண்டரு |

| தமிழ் | கன்னடம் |
|---|---|
| சிறுத்தொண்டர் | சிறுதுண்ட பக்தரு (சிரியாளர்) |
| சேரமான் பெருமாள் | சோமராஜரு |
| கணநாதர் | கணநாத |
| கூற்றுவநாயனார் | வேள்கொதரு |
| புகழ்ச்சோழர் | பகள்சோள |
| நரசிங்க முனையரையர் | நரசிங்க முனையரு |
| அதிபக்தர் | அதிபக்த |
| கலிக்கம்பர் | கலிகம்பரு |
| கலிய நாயனார் | கலிய நாயனாரரு |
| சக்தி நாயனார் | களசித்தியாண்டரு |
| ஐயடிகள் | ஐயடிகள் |
| கணம்புல்லர் | கணம்புல் நம்பிகளு |
| காரிநாயனார் | கடவூரகாரிகளு |
| (நின்றசீர்) நெடுமாறன் | சௌந்தர பாண்ட்ய |
| வாயிலார் | வாஉறில்யரு |
| முனையடுவார் | முனயாண்டரு |
| கழற்சிங்கர் | குலசங்க |
| இடங்கழி நாயனார் | அடவகைய பருமாளரு |
| செருத்துணை | சிறுதுணெயாண்டரு |
| புகழ்த்துணை | பகல்த்துணையாண்டரு |
| கோட்புலி | கொல்புலியாண்டரு |
| பூசலார் | ஊர்வசிலியண்டர் (வாஹில்யரு) |
| மங்கையர்க்கரசி | மாங்காய்க்க |
| நேசநாயனார் | நைசபக்தரு |
| கோச்செங்கட் சோழன் | களசிங்கு பருமாளி |
| திருநீலகண்ட யாழ்ப்பாணர் | திருநீலகண்ட பாணரு |
| சடைய நாயனார் | ஜடைய நைனாரரு |
| இசைஞானியார் | யஸ்ய ஞானி |

மேற்கூறப்பெற்ற பெயர்களுள் திருநாளைப்போவார் என்று சிறப்பிக்கப்பெற்ற நந்தனாரின் பெயர் திருநாளைப்போவரு என்றே கன்னடத்தில் கூறப்பட்டுள்ளது. வாகீசர் என்ற பெயரைவிடத் திருநாவுக்கரசர் என்ற பெயரே தமிழில் அதிகம் வழங்குகின்றது. ஆனால் கன்னடத்தில் வாகீஸ்வரரு என்றே இடம் பெற்றுள்ளது. ஆளுடைய பிள்ளையார் என்று சிறப்பிக்கப் பெற்ற திருஞானசம்பந்தர் பிள்ளே நாயனார் என்றே கன்னடத்தில் குறிக்கப்பட்டுள்ளார். நாட்டமிகு தண்டி

என்று சுந்தரரால் திருத்தொண்டத் தொகையில் பாடப் பெற்றவர் தண்டி நாயனார். பிறவிக் குருடராக இருந்த இவர் பின்னர் இறைவனருளால் கண்களைப் பெற்றார். இதனை உணர்த்த நாட்டமிகு தண்டி என்று சுந்தரர் கூறியதை, நாட்யஅுஹ தண்டி என்று கன்னடத்தில் கூறியுள்ளனர். எனவே சுந்தரர் பாடல்களையும் கன்னட நாட்டினர் அக்காலத்தில் அறிந்திருந்தனர் என்று கூறலாம். வேள்குடியைச் சேர்ந்தவராகிய கூற்றுவ நாயனாரை வேள்கொதரு என்று குறிப்பிட்டிருப்பதும் இவண் கவனிக்கத்தக்கது. இளையான்குடி மாற நாயனாரைக் குறிக்கும் போது இளையான்குடி என்பர் சுந்தரர். இதனைக் கன்னடத்தில் எளயாண்டகுடி என்று ஒலித்திருக்கின்றனர். தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோவலூரைச் சுற்றிய பகுதிகள் அக்காலத்தில் சேதிநாடு எனப்பட்டன. மெய்ப்பொருள் நாயனார் சேதிநாட்டை ஆண்டனர். இதனை அடிப்படையாகக் கொண்டு மெய்ப்பொருள் நாயனார் கன்னடத்தில் சேதிராஜ என்று அழைக்கப்பட்டுள்ளார்.[8] பெரியபுராணத்தை அடிப்படையாகக் கொண்டும், சுந்தரர் பாட்டை உணர்ந்தும் பேச்சுவழக்கின் துணையுடனும் நாயன்மார் பெயர்களைக் கன்னடத்தில் வழங்கியுள்ளனர் என்பதை மேற்கூறிய சான்றுகளால் உய்த்துணரலாம்.

சாதி வேறுபாடுகளைக் கடந்து, பக்திநெறியினை மக்களிடம் பரப்பிச் சைவ சமயத்தை வளர்த்த இவ்வடியார்கள் வரலாறு அக்காலத்தில் கருநாடகத்தில் பெரிதும் பரவியிருந்தது. அங்குப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் சமயச் சீர்கேடுகளை எதிர்த்து வீரசைவ நெறிக்குப் புத்துயிர் தந்து, சாதி குல வேறுபாடுகளை ஒழிக்க முயன்ற சிறந்தபக்தரும், ஞானியும், சமூகச் சீர்திருத்தவாதியுமான பசவரின் புரட்சி மனப்பான்மைக்கு இந்நாயன்மார் வரலாறுகளும் வித்தாயமைந்தன என்று கூறலாம்.

**கன்னட மொழியில் காரைக்காலம்மையார் வரலாறு - ஹரிஹர கவியின் 'காரிகாலம்மை ரகளே'**

சோழ தேசத்தில் காரைக்கால் என்ற ஊர் சிவபக்திக்குத் தாயகமாக விளங்கியது. அங்குச் சிவஞான செல்வமும், உண்மையான பக்திச் சிறப்பும் வாய்ந்த காரிகாலம்மை என்பவள் வாழ்ந்து வந்தாள். சமண சமயத்தைச் சேர்ந்தவனும் பெருஞ்செல்வனுமாகிய மாணிக்கம் செட்டி என்பவன் அவளது கணவனாவான். சிவபக்தையாகிய காரிகாலம்மையின் கணவன் 'பவி'யாதலால் (பவி என்றால் சைவ சமயத்தைச் சாராதவன் என்பது வீரசைவவழக்கு) பூசை செய்வதற்கு

8. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்; மேற்படி; பக்-36-38.

அவர்கள் இல்லத்தில் இடமில்லை. எனவே யாரும் அறியாமல் மனப்பூசை மூலமே காரிகாலம்மை சிவத்தியானம் செய்து வந்தாள். இவள் அந்தரங்க சிவபக்தியினள். அருங்கணவனைச் சார்ந்த பதிபக்தியினள். கணவன் சமண சமயத்தினன். எனவே யாரும் அறியாத அந்தரங்க சிவ பக்தியுடனிருந்தாள்.

காரிகாலம்மை சிவபக்தை; சிவனை நாடோறும் அருச்சிப்பவள்; அந்தரங்க பக்தியுடையவள் என்பதை அவளது இல்லத்தில் மாமனார், மாமியார், கணவன் ஆகிய எவரும் அறிந்திலர். மாமியார் தனக்குக் கொடுத்த வீட்டு வேலைகளையெல்லாம் முடித்துவிட்டுச் சமையலறையையே சிவபூசைக்குரிய தலமாகக் கொண்டாள். அவளது அங்கையே சிவனின் சிங்காதனமாக, நெஞ்சில் நிறைந்த நினைவுகளும், எண்ணங்களுமே தோத்திரங்களாயின. மனதின் தூய்மையே சிவனுக்கு மஞ்சன நீராயிற்று. கையிலிருந்த கீரையும் சிவனுக்குகந்த மலர்களாயிற்று. மூச்சே தூபப் புகையாகி, நோக்கே ஆரத்தி ஒளியாகி அவளது அகப்பூசை இவ்வாறு நாடோறும் நடைபெற்றுவந்தது.

உண்டி சமைக்குமிடமே உயர் இறை பூசைத்தலம்
அருஞ்சிவனுக்கு அரியணை அங்கையே
நெஞ்சில் நின்ற சிந்தையே தோத்திரம்
மனத்தூய்மையே மஞ்சன நீராம் மகிமையினள்
கையிற்கீரையும் மணம் நிறை மலர்களாம்
தூய மூச்சே தூபமாம் பெருமையினள்
நோக்கே தீப ஆரத்தி ஒளியாம் சங்கரனுக்கு

இவ்வாறு காரைக்காலம்மையின் அகப்பூசை நடந்து வந்தது. சிவனே தனக்கு அனைத்தும் என்ற சிந்தனையுடன் தன் சுக துக்கங்கள் அனைத்தையும் சிவனுக்கே சமர்ப்பித்து வந்தாள். தான் செய்யும் செயல்கள் அனைத்தும் சர்வேசனாகிய சிவனுக்குகந்தவை என்ற தூய நினைவுடன் நாடோறும் செய்து வந்தாள். அந்த மகிழ்ச்சியே அவளுக்குச் சிவானந்தமாயிற்று. ஆனால் சிவனைத் தவிர வேறு யாரும் அவளது பெருமையை அறியார். ஆனால் சிவனின் நலத்தைத் தாயெனப் பேணுவாள். அத்துணை நெருங்கிய பக்தியும் அன்பும் அவ்விருவரிடையும் நிலவின.

செய்யும் பணிகளெல்லாம் சிவனுக்கே பூசையாம்
நோக்குவதும் பேசுவதும் சிவனுக்கே அர்ப்பணமாம்
அவளறிவள் அவனறிவன் ஆரறிவார்?

இத்தகைய மிகவுயர்ந்த பக்தியினை உலகிற்கு உணர்த்துவதற்காகச் சிவன் ஓர் அடியார் வடிவில் காரிகால் பட்டணத்திற்கு வந்தான்.

> வெளிப்படுத்துவேன் இதனை என வந்தனன் சந்திரசேகரன்
> உலகுக்கு உணர்த்துவேன் என்று சர்வேசுவரன்
> அடியார் வேடமிட்டு ஆங்கு வந்தனன்.

காரிகாலம்மையின் அந்தரங்க பக்தியினை வெளிப்படுத்தும் கருத்துடன், மாணிக்கம் செட்டியின் மனையை நோக்கி அடியார் வேடந்தரித்து வந்தான் சிவன். இனிய மாங்கனிகள் இரண்டினை மாணிக்கம்செட்டியிடம் 'காணிக்கை' யென்று கூறித் தந்தான். மாணிக்கம் செட்டி மகிழ்ச்சியடைந்த அக்கனிகளை 'வைத்திரு' என்று சொல்லி காரிகாலம்மையிடம் தந்துவிட்டுத் தன் அன்றாடத் தொழிலான வணிகத்தைக் கவனிக்கத் தன் கடைக்குச் சென்றான். காரிகாலம்மை அக்கனிகளைக் கண்டு,

> ஆகா! சிவனுக்கே சிவபக்தருக்கே ஏற்றவை இவை!
> ஆகா! மகாதேவனுக்கே ஏற்றவை இவை!

என்று மகிழ்ந்தாள். கணவன் கூறியதுபோலக் கனிகளை வைத்துவிட்டுத் தன் வீட்டு வேலைகளைத் தொடங்கினாள். சோற்றைச் சித்தப்படுத்தியபோது, 'பிட்சாந்தேகி' என்ற குரலுடன் சங்கரன் பிச்சை கேட்டு அடியார் வடிவில் அவளது வீட்டிற்கு வந்தான். காரிகாலம்மை அச்சங்கொண்டு "பவிகள் இல்லத்திற்கு ஏன் வந்தீர்?" என வினவினாள்.

> இந்த இடத்திற்குவந்த காரணம் என்னய்யா?
> ஏனிந்த பவிகளின் மனைக்கு வந்தீர்?
> ஏன் வந்தீர் இவ்வில்லத்தார் மிகவும் பொல்லாதவர்
> ஏன் வந்தீர் பக்தரிங்குண்டோ?

என்று கூறினாள். அதற்கு,

"பக்தரோ அல்லவோ நானறியேன் அம்மையே" என்று சிவன் பதிலுரைத்தார். அம்மை,

"ஆரும் காண்பதற்கு முன்பே உண்பீர். ஆரும் அறியாதுண்டு கருணை காட்டுவீர் மனையவர் காணின் கொல்லுவர்" என்று கூறிச் சோற்றை இட்டு அதனுடன் உண்ண ஒரு மாங்கனியையும் தந்தாள்.

மகிழ்ந்த சிவன் உணவை உண்டு கனியைத் தின்று கொண்டிருக்கும்போது பகல் உணவிற்காக மாணிக்கம்செட்டி, தன் இல்லம் நோக்கி வந்தான். ஐயங்கொண்ட மாணிக்கம்செட்டி, உணவு உண்ணும்போது மாங்கனியைத் தின்பதற்குக் கேட்டான். ஒன்றைத் தின்றதும் அதன் சுவையில் ஈடுபட்டு மற்றொரு கனியையும் தருமாறு மனைவியிடம் கேட்டான். அஞ்சிய காரிகாலம்மை பதறிப் பொய்யாக முதலில் கனியை வைத்த இடத்திலிருந்து இன்னொன்றைக் கொண்டு வருவதுபோல் சென்று சிவத் தியானத்துடன் கை வைத்தாள். அமுதம் போன்ற கனியொன்று கைக்குக் கிடைக்க, மகிழ்ந்து சிவனின் கருணையை நினைந்து தலை வணங்கினாள். 'பக்தர்களின் சுற்றம் நீயே' என்று மனதில் நினைத்துக் கொண்டே அவ்விரண்டாம் கனியைக் கணவன் புசிப்பதற்குத் தந்தாள். அதைத் தின்ற மாணிக்கம்செட்டிக்கு அற்புதமானதோர் அனுபவமேற்பட்டது. மெய்ம்மயிர் சிலிர்த்தது.

இதனால் ஐயங்கொண்ட மாணிக்கம்செட்டி இதன் உண்மை நிலையை அறிய வேண்டுமென்று பணிவோடு கேட்கும் ஆசை கொண்டான்.

எங்கிருந்து பெற்றது இக்கனி? கூறு எனக்கு!
எங்கிருந்து பெற்றது மாதாவே இக்கனி கூறு எனக்கு!

என்று கேட்டான். அதற்குக் காரிகாலம்மை, சிவனடியார் ஒருவர் வந்ததையும், தான் கனியை அவனுக்குத் தந்ததையும் கணவன் இன்னொரு மாங்கனி வேண்டுமெனக் கேட்க, சிவனருளால் ஒரு கனி பெற்றதையும் உண்மையாக உரைத்தாள். அற்புதமான இவ்வுண்மை நிகழ்ச்சியைக் கேட்டதும் மாணிக்கம்செட்டியின் உடல் சிலிர்த்தது. உயர்ந்ததைப் போற்றும் அறிவு அவன் உள்ளத்தில் மலர்ந்தது. அவள் தன் மனைவியென்ற பாவமழிந்து தன்னைத் தெளிவிக்க வந்த குரு, பெருமைமிகு தாய் என்று கருதினான். மனைவிக்குத் தானிழைத்த அபராதங்களை மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டான். பிறவிப் பிணியிலிருந்து முத்தியாகிய கரையேற்ற வேண்டுமென்ற கேட்டுக் கொண்டான்.

முன்வரே ஐயங்கொண்டேனே தாயே
இனிமேல் என் மனைவியென்றுரைப்பது மகாமாயையே
இன்று கருணைகொண்டு அரன் காட்சிதந்தான் எனின்
இத்தகைய மனைவியருண்டோ? சிவம் வருவானோ?

..............................................................................

இத்துணை நாள் உன்னைஎன் மனைவியென்று உரைந்ததற்கே
இத்துணை காலம் உதாசினம் செய்ததற்கே

கருணைகொண்டு காப்பாய் காரிகாலம்மையே
பவபந்த மாயையினின்றும் கை தூக்கிவிடு அம்மையே
இனிமேல் நீயே என் குருவானாய் தாயே
இன்றே என் பிறவிப்பிணி போக்குவாய் தாயே

என்று வணங்கி வேண்டிக் கொண்டான். சிவதீட்சை வேண்டி பயபக்தியுடன் அவளது பாதங்களில் விழுந்து வணங்கினான்.

காரிகாலம்மையின் அந்தரங்க பக்தி பொங்கிப் பெருக. அவள்

இறைவா! என் பக்தியை இன்று அறியச்செய்த தந்தையே!
இறைவா! மோகத்தை அழித்திட்ட தந்தையே!
பக்தி எல்லை மீறியது எனக்கின்று தந்தையே
பக்தி பெருக்கெடுத்தோடுகின்றது இன்றெனவாழ்வில்!

என்று பாடினாள். தானிருந்த பட்டினத்தை விட்டு எங்கோ புறப்பட்டுச் சென்ற காரிகாலம்மையைக் கண்ட உறவினரும் துன்புற்று அவளைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டனர்; போக வேண்டாமென்று தடுத்தனர். இதனையறிந்து காரிகாலம்மை மனம் நொந்து, மாமிச பிண்டத்தைக் கண்டு மயங்கும் மூடமக்களுக்காக மனம் மறுகினாள்.

"மாமிசப் பிண்டத்திற்கு மயங்குகின்றனரே ஐயோ!"

இதனை மாற்றுவாய் என்று சிவனிடம் முறையிட்டாள். தேகத்தைத் தியாகம் செய்யவும் சித்தமானாள். வைராக்கிய வாளினால் அழிக்குமாறு சிவனை வேண்டிக் கொண்டாள். தூய உடலைவிட்டு சூக்கும உடல் கொண்டாள். உடல் அங்கங்களை விரைவாகக் களைந்து சிதறினாள். இதனைக் கண்ட மூட மக்கள் பைத்தியமோ என்று ஓடிப் போயினர்.

காமம் குரோதம் உலோபம் களைந்திட
மோகம் மதமாற்கரியம் வீசி யெறிந்திட
சாயை யழிந்திட சிந்தை பிதிர்ந்திட
அவயவங்கள் அனைத்தையும் உதிர்த்தினர் உறுதியுடன்
சிதறி ஓடினர் மூடமக்கள் அச்சத்தால்

இதற்குப் பிறகு காஞ்சிபுரத்தின் வடக்கிலுள்ள திருவாலங்காட்டிற்கு வந்தாள். அங்குச் சிவனைக் கண்டு "ஆஹா! சிவனே! உனது நாட்டியத்தைக் காட்டு எனக்கு" என்று வேண்டி விண்ணப்பித்துக் கொண்டாள். அவளது பக்தியின் விருப்பம் பலித்தது. சிவன் அங்கு நடனமாடினான். நாட்டியம் கண்ட பிரம்மன், விஷ்ணு முதலியோர்

“ஜயஜய” என்று போற்றினர். சிவனின் பல்வகைப்பட்ட மனங்கவர் ஆடலைக் கண்ணாரக் கண்டு ஒன்றிப் போன காரிகாலம்மை சிவனிடம் “சரண்” என்று மனநிறைவுடன் கூறினாள்.

அரி முதலானோர் காண்பரே நும் அற்புத நாட்டியம்?
உயர்வேதங்கள் அறியுமோ நும் திருவடியசைவு?
இறைவா! என் பாக்கியத்திற்கு இணை வேறு உண்டோ?
இறைவா! புண்ணியத்தின்பலத்திற்கு அளவு உண்டோ?

என்று பெருமகிழ்ச்சியுடன் குதித்தாடிய அவளது பேரார்வத்தைக் கண்ட சிவபெருமான், “நட தாயே கைலாயத்திற்கு” என்றான். சிவன் ஆணைப்படி காரிகாலம்மை கைலாயம் நோக்கி நடந்தாள். வழியில் சரணர்களின் (சிவனடியார்களைச் சரணர்கள் என்பது வீரசைவ வழக்கு) அடிச்சுவடுகளைக் கண்டு

ஆகா! என்னை உடைய ஈசனின் பக்தர்களின் அற்புத்அடிச்சுவடு
இன்று என் சிரமேற் கொள்வேன் என்று கூறி
என் தலை யடியாக நடந்து செல்வேன்
எலே! சரணரின் அடிகளே! சிவனிடம் கொண்டு செல்விரே!
எலே! அடிச்சுவடுகளே! கைலாசத்திற்கே ......... சேர்ப்பிரே!

என்றும் கூறிச் சரணர்கள் நடந்து சென்ற அடிச்சுவடுகளின் மீது தனது தலையை வைத்து ஒவ்வொரு சுவட்டிலும் ஒவ்வோர் அடியாக வைத்துச் சென்றாள். அதே வழியில் கைலாயத்திற்குப் புறப்பட்டுச் சென்ற நம்பி (சுந்தரர்), சேரமான் (சேரமான் பெருமாள்) ஆகிய இருவரும் இவளைப் பின்னால் விடுத்து இவளுக்கு முன் சென்றனர். சிவனின் அருளால் அவர்களுக்கு முன்பே காரிகாலம்மை சிவனின் திருமுன் சென்றடைந்தாள். சிவனிடம் காரிகாலம்மைக்கு அத்துணை பக்தியும், ஆன்ம நம்பிக்கையும் இருந்தன. உடலெல்லாம் என்பாகித் தலைகீழாக நின்ற காரிகாலம்மையைக் கண்ட பார்வதி, இஃது ஒரு பைத்தியமோ என்று அஞ்சிச் சிவனின் பின்புறம் மறைந்து நின்றாள். அப்போது சிவன் “அவள் உன் அத்தை (மாமியார்) என் தாய்” என்று கூறினான்.

அல்ல எலே கௌரி! உன் அத்தை நம் அம்மையார்
என்னைப் பெற்றவள் எனக்குக் கனிதந்த அன்பு நல்லார்
என்னம்மை உன் மாமி காரிகாலம்மையார்

என்று கூறினான். ‘என் தாய்க்கு’ உன் மாமிக்கு மருளன்று என்று கூறி அவளை வணங்கும்படிக் கூறினான். அருகில் வந்து நின்ற காரிகாலம்மை,

இச்சொற்களைக் கேட்டு 'உலக மக்களுக்கெல்லாம் தந்தை தாயாகிய உங்களுக்கு என் வணக்கங்கள்' என்று கூறிக் கீழே விழுந்து வணங்கினாள். அவளைத் தூக்கி நிறுத்திய சிவன்

நன்று உலகத் தாயாகி உதவுவாய் என் அம்மையே
நன்று மிகமிக நன்று காரிகாலம்மே!

என்று கூறி அருளாசி வழங்கி அவளுக்குச் சிவகணப்பதவி வழங்கினான்.[9]

**கவிச்சக்கிரவர்த்தி சுரங்க கவியின் "திரிசஷ்டி புராதன சரித்திரம்" (அறுபத்து மூவர் வரலாறு)**

அக்காலத்தில் சோழ நாட்டில் எங்கு நோக்கினாலும் பக்தர்களின் இல்லங்கள்; சிவனின் கோவில்கள் நிறைந்திருந்தன. சிவபக்திக்குப் பிறப்பிடம் எனத்தகும் காரிகால் (காரைக்கால்) என்ற பட்டினம் சிவபக்தர்களின் நல்லிருப்பிடமாக விளங்கியது. இப்பட்டினத்தில் திருமகளின் செல்வத்தையும் இரதியின் அழகையும் கலைமகளின் வித்தையையும் மிஞ்சிய குண, வடிவ, செல்வ நலம் வாய்ந்த காரிகாலம்மை பிறந்தாள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருத்தொண்டராகிய காரிகாலம்மையின் கணவன் 'பவி'யாக இருந்தாலும், தான் மிகுந்த பக்தி கொண்டு, உடல் பொருள் மனதில் வஞ்சமின்றித் தன் இல்லத்தின் வாயில்நாடி வந்த சிவபக்தர்களை வரவேற்று உபசரித்தாள். இவ்வாறிருக்கையில் ஒருநாள் கணவன் இரண்டு மாங்கனிகளைக் கொண்டு வந்து காரிகாலம்மையிடம் கொடுத்தான். அப்போது சிவன் ஜங்கம வேடம் தரித்து (ஜங்கமர் - வீரசைவ அடியார்) காரிகாலம்மை இல்லத்திற்குப் பிச்சை கேட்டு வந்தான். பிச்சை கேட்டுவந்த அந்த ஜங்கமனைக் காரிகாலம்மை அன்போடு வரவேற்றாள். பாதோதகம் படைத்து, (கால் கழுவ நீர் தந்து), கணவன் தந்திருந்த மாங்கனியைப் பக்தியுடன் சமர்ப்பித்தாள். கனியைப் புசித்துக் கொண்டிருந்த ஜங்கமனைத் தொலைவிலிருந்தே கண்ட கணவன் கோபங் கொண்டான். உண்ண மனமின்றி, உணவு உண்ண வந்தான். உண்ணும்போது மாங்கனியைத் தரும்படி கேட்டான். சிவபக்திச் செல்வம் வாய்ந்தவளாகிய காரிகாலம்மை சிவத்தியானம் செய்து மாங்கனி கொண்டு வந்து கொடுத்தாள்.

---

9. எம்.எஸ். லட்டே; முன் சுட்டியது; பக். 121 - 125

தான் தந்த கனியை ஜங்கமனுக்குத் தந்துவிட்டாள், தன் மனைவு என்று ஐயங்கொண்டிருந்த கணவனுக்குத் தன் மனைவி கனியைத் தந்தது ஆச்சரியத்தை விளைவித்தது. உண்மையாகத் தன் மனைவி பெருஞ்சிறப்பு உடையவள் என்று உணர்ந்து போற்றிப் புகழ்ந்தான். பக்திப் பரவசமாகி, அவளே தனக்கு குரு என்று கருதி அவளது பாதங்களில் விழுந்து வணங்கினான். காரிகாலம்மை தன்னுடைய பக்தி வெளிப்பட்டு விட்டதே என்று நினைத்துக் குடும்ப உறவு இனித் தனக்கு ஏற்றதன்று எனக் கருதினாள். அனைத்தையும் துறந்து, பதியையும், பட்டினத்தையும் விட்டு நீங்கிப் புறப்பட்டுச் சென்றாள். உறவினரும் ஊராரும் அவ்வாறு செல்ல வேண்டாமென்று அவளிடம் வருந்தி வேண்டிக் கொண்டனர். வேறுசிலர் அவளது உருவ அழகைக் கண்டு காமம்கொண்டு நெருங்கினர். உடல் வனப்பிற்கு மூலகாரணமாகிய மாமிச பிண்டங்களை 'இதோ உங்கள் சொத்து எடுத்துக் கொள்ளுங்கள்' என்று உதிர்த்து வீசினாள்.

அங்குக் கூடியிருந்த சுற்றத்தினரும், ஊர் மக்களும், காரிகாலம்மையின் இந்த வைராக்கியத்தினைக் கண்டு 'ஐயோ மருள் கொண்டனள்' என்று திக்பிரமையடைந்து அஞ்சினர். வடிவ அழகிற்கும் மயங்கும் காமுகரின் கீழ்த்தரமான எண்ணத்திற்கு உள்ளம் வருந்திக் காரிகாலம்மை சிவனின் திருப்பெயர்களை ஓதிக் கொண்டே, பூகைலாசமெனத்தக்க திருவாலங்காடு வந்து சேர்ந்தாள். அங்குள்ள சிவன் கோயிலுக்குச் சென்றாள். எலும்புக்கூடே உடலாக வருவது போல் வந்த காரிகாலம்மையைக் கண்டு, சிவனின் ஒரு பாதியினளாகிய பார்வதி, 'இதென்ன பைத்தியம் வருகின்றதோ' என்று சிவனிடம் வினவினாள். அதற்குச் சிவன் 'அது பைத்தியமல்ல எனக்குக் கனி தந்த தாய்' என்று மகிழ்ச்சியுடன் பதிலுரைத்தார். சிவலிங்கத்தின் அருகில் வந்த காரிகாலம்மை பக்தியுடன் கீழே விழுந்து வணங்கினாள். அவளது பக்தியை மெச்சிய 'சிவன் அவளுக்கு அருளாசி வழங்கினான். ஆசியுடன் இரு தாளங்களையும் வழங்கினான். பரவசம் அடைந்து, தாளத்தினை இசைத்துக் காரிகாலம்மை பாடினாா். தாள ஓசைக்கேற்பச் சிவனும் தாண்டவமாடினான். காரிகாலம்மை கயிலாயம் சேர அருள் செய்தான். சிறந்த பெரியோர்கள் நடந்த வழியில் நடந்து அவற்றை மாசுபடுத்தக் கூடாதென்று கருதிய அம்மை தலையால் நடக்க நினைத்து அவ்வாறே நடந்தாள்.[10]

சுரங்ககவி இயற்றிய இத் 'திரிசஷ்டி புராதனர் சரித்திர'த்திற்கு உபமன்யு முனிவர் படைத்த பக்தி விலாசம் என்ற நூல் அடிப்படைச் சான்றாகும்.[11]

---

10. மேற்படி பக். 127-129 11. மேற்படி ப.129 (புராதன பக்தவிலாச முன்னுரை)

**தொண்டத சித்த லிங்க கவியோகீந்திரரின் "பால்குரிக சோடோசுவா புராணம்"**

காரிகால் பட்டினத்தில் 'அம்மை' என்னும் சரணி சமணனின் மனைவியாகவிருந்தாள். சிவபக்தையாகிய 'அம்மை' மனதிற்குள்ளேயே சிவபூசை செய்து வந்தார். இவ்வாறிருக்கையில் ஒரு நாள் கணவன் மனைவியாகிய காரிகாலம்மையின் கையில் மாங்கனிகளைத் தந்து வைத்திருக்குமாறு கூறினான். அவ்வமயம் சிவன் துறவிவேடம் பூண்டு அம்மையின் வீட்டு வாயிலில் பிச்சை கேட்டு நின்றார். அம்மை மாங்கனியை உண்ணுமாறு அன்புடன் தந்தாள். கணவன் தான் உண்ண மாங்கனி கேட்டபோது, அக்கனியை வைத்த இடத்தில் எடுப்பதுபோலக் கைவைத்தாள். அங்குமற்றொரு கனி கைக்குக் கிட்டியது. அக்கனியைக் கணவனுக்குத் தர அதனை உண்ட அவன் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தான். மனைவியின்மீது கொண்ட ஐயம் நீங்கியது. அவள் சாதாரணப் பெண் அல்ல. மிகமிக உயர்ந்தவள் என்றறிந்து நெடுஞ்சாண்கிடையாக நிலமிசை விழுந்து அவளது அடிகளை வணங்கினான்.

வணங்கியது மட்டுமன்றி, இனிமேல் அம்மையை மனைவியெனக் கருதுவது தகுதியன்று. அவள் தாய்க்குச் சமமானவள், என்று கருதி வாழத் தொடங்கினான். இதனையறிந்த அம்மை தனது சிவபக்தி வெளிப்படுத்தப்பட்டுவிட்டதே என்று நினைத்துக் கணவனை விட்டு நீங்கிச் சென்றாள். அவளது அழகினைக் கண்டு காமுகர் கூட்டம் வியக்கத் துறவியாகத் தன் உடலின் சப்த தாதுக்களையும் உடலிலிருந்து புறத்தே நீக்கினாள்.[12]

**பிற கன்னட காவியங்களில் காரைக்காலம்மையார் பற்றிய குறிப்புகள்**

அரபக்தயினால் உருத்திரகணம் தேவகணம்
பூதகணமாகிய அறுபத்துமூவர்
திருவடிக்கே சரணமென்பேன்[13]
(அத்ருஷ்யகவிய ப்ரௌடை தேவராயன காவ்ய)

கணவன்தந்த கனிதன்னை
முனிவனுக்கு உண்ண அளித்த
உள்ளத்தினள் காரிகாலம்மை[14]
(நஞ்சுண்டகாவிய பைரரேசுவர காவிய)

12. மேற்படி பக். 129-30 13 - 18. மேற்படி ப.138

அடியார் நடந்த வழிதனில்
தலையால் நடந்த காரிகாலம்மை[15]
(நிஜகுணசிவயோகிகள் புராதன திரிவீதி)

சரணர் நடந்தவழிதனிலே
அடியிடுதல் சரியன்றென
தலையால் நடந்து காரிகாலம்மை
கயிலாயம் சென்று சிவனைச் சார்ந்தனள்[16]
(ஹரிஹரன ரகளை கதாஜக்பத கத்ய)

கணவன் சமணனாகியிருக்க
நற்பக்தியும் நிட்டையும் கொண்டு
காரைக்காலில் வாழ்ந்து.
சரணர் நடந்தவழி நடக்கலாகாதெனத்
தலையால் நடந்த காரிகாலம்மையின்
திருவடித் தாமரைக்கே சரணம்[17]
(லக்கண்ண தண்டீசரின் சிவதத்துவ சிந்தாமணி)

காரிகாலம்மை பதியை பக்தனாக்கி
தீரதண்டீசர் தந்தை தலையரிந்து
கண்ணப்பர் கண்ணீந்து
வாயிலார் அகப்பூசைசெய்து
கயிலாயமடைந்தனர்[18]
(விருபாட்ச பண்டிதரின் சென்னபசவ புராண)

தமிழ், கன்னடம் ஆகிய இருமொழிகளிலும் வழங்கும் காரைக்காலம்மையார் வரலாற்றைப் பின்வருமாறு ஒப்பிட்டுக் காணமுடிகின்றது.

| | தமிழ் | கன்னடம் |
|---|---|---|
| 1. | இளமைப்பெயர் - 'புனிதவதி' இறைவன் அழைத்த பெயர் 'அம்மை' தாமே கூறிக் கொள்ளும் பெயர் 'பேய்' மக்கள் மதிப்புடன் வழங்கும் பெயர் 'காரைக்காலம்மையார்' | காரிகாலம்மை - ஹரிஹரன் சுரங்கமர்<br>அம்மை - தொண்டீத சிவலிங்க சிவயோகீந்தார் |

| தமிழ் | கன்னடம் |
|---|---|
| 2. பெற்றோர் குறிப்பிடப்படுகின்றனர். தந்தை பெயர் மட்டும் தனதத்தன் என்ற குறிப்பு உள்ளது. | பெற்றோர் குறிப்பிடப்படவில்லை. திருமணம் ஆனவள் என்றே வரலாறு தொடங்குகிறது. |
| 3. மாமனார் மாமியார் பற்றிய குறிப்பில்லை. | மாமனார், மாமியார் குறிப்பிடப்படுகின்றனர். (ஹரிஹரன் படைப்பில்) பெயர் கூறப்படவில்லை. |
| 4. பிறந்த ஊரின் பெயர் காரைக்கால். | மாற்றமில்லை. மொழியின் ஒலி மாற்றத்திற்கேற்பக் காரிகால் எனப்படுகின்றது. |
| 5. கணவன்பெயர் பரமதத்தன். சமணனல்லன். எல்லோரும் சிவ பக்தர்கள். ஒரு குடிக்கு ஒரே மகள் என்று மகளைத் திருமணத்திற்குப் பின்னர் தன் ஊரான காரைக்காலிலேயே குடித்தனம் வைத்தான் தனதத்தன். | கணவன் சமணன். பவி. கணவன் வீட்டில் மற்றவரும் அவ்வாறே. கணவன் பெயர் மாணிக்கம் செட்டி என்று குறிப்பிடுகிறார் ஹரிஹரன். |
| 6. அம்மையார் தம் விருப்பப்படி தொண்டர்வரின் தொழுது, அவர் வேண்டுவன கொடுத்து திருத்தொண்டாற்றி வந்ததைச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். கணவன் தடுத்ததாகக் கூறவில்லை. | அம்மையார் அகப்பூசை புரிந்து வந்தார். அவரது அந்தரங்க பக்தி யாருக்கும் தெரியாது. கணவனும் அவன் வீட்டாரும் தம் சிவபக்தியையும், அடியார் தொண்டையும் தடுப்பார்கள் என்று அஞ்சி வாழ்ந்ததாகவே கூறப்படுகின்றது. |
| 7. மாங்கனிகளைப் பரமதத்தனிடம் எத்தகையவர் கொடுத்தார் என்ற குறிப்பில்லை. கடைக்கு வந்து அங்குப் பரமதத்தனிடம் கனியைத் தருகின்றனர். அதனை இல்லத்திற்கு 'வைக்க' என்று சொல்லிக் கொடுத்தனுப்புகின்றான். | சிவனே சிவபக்தர் வடிவில் வந்து மாணிக்கம் செட்டியிடம் தருகின்றார். |

| தமிழ் | கன்னடம் |
|---|---|
| 8. சிவனடியாராகச் சிவபெருமானே வந்ததாகக் குறிப்பில்லை. | சிவனே ஜங்கம வடிவில் பிச்சை கேட்டு வருகின்றார். |
| 9. சிவனடியார் உண்பதையோ, அம்மையார் அவருக்கு ஒரு மாங்கனியை இட்டதையோ பரமதத்தன் காண்பதில்லை. | மாங்கனியை உண்டு விட்டுச் செல்லும் அடியாரைக் கணவன் காண்கின்றான். சினமும் ஐயமும் கொள்கின்றான். |
| 10. கற்புக் கடப்பாட்டினால் உணவிடுகின்றார் அம்மையார். ஒரு கனியைக் கலத்தில் இட்டதும் அதனை உண்ட பரமதத்தன் மற்றொரு கனியைக் கேட்கின்றான். அம்மையார் கொண்டு வரப்போவதுபோல் சென்று சிவனருளால் ஒரு கனி பெற்று அதனைக் கொண்டுவந்து இடுகின்றார். அதனை உண்ட பரமதத்தன் அதன் சுவை மிகுதியையும், வேறுபாட்டினையும் உணர்ந்து 'யார் தந்தது?' என்று வினவினான். அம்மையார் உண்மையை உரைத்ததும் மற்றொரு கனி அழைத்துத் தருமாறு கூறினான். அம்மையார் சிவனருளால் பெற்ற கனியை அவன் கையில் வாங்கியதும் அது மறைந்தது. அவன் அம்மையாரின் பெருமையை உணர்ந்தான். ஆக, பெரியபுராணத்தில் மூன்று கனிகள் பேசப்படுகின்றன. | முதலிலேயே அஞ்சி உணவிடுகின்றாள் அம்மை. செட்டி 'கனியைத் தா' என்றதும் கொண்டுவந்து இடுகின்றாள். இன்னொரு கனியைத் தா என்றதும் முன்னர் கனி வைத்திருந்த இடத்தில் கை வைத்ததும் சிவனருளால் மற்றொரு கனி கிடைக்கின்றது. அதைக் கணவனிடம் தருகின்றாள். அதைத் தொட்டதுமே செட்டிக்கு உரோமாஞ்சனம் உண்டாகின்றது. கனியைப் பற்றிக் கேட்டறிந்து, உண்மையுணர்ந்து, வியந்து, மனைவியல்ல, தாய், தேவி என்றுரைக்கின்றான். 'அம்மை' என்று உடனே முதலில் நேருக்கு நேர் அழைப்பவன் கணவனே. சமணனாக இருந்தவன் சைவனாகிறான். சிவ பக்தனாகிறான். இங்கு இரண்டே மாங்கனிகள் கூறப்படுகின்றன. மாங்கனிகள் எண்ணிக்கை பற்றிய குழப்பம் காணப்படுகின்றது. இரண்டாவது கனி என்ன ஆயிற்று என்பது பற்றிய விளக்கமுமில்லை. மனைவியின் பெருமையுணர்ந்த கணவன் உடனே நிலமிசை விழுந்து அவளை வணங்குகின்றான். |

| தமிழ் | கன்னடம் |
|---|---|
| 11. பரமதத்தன் அம்மையாரை தெய்வமென்றே கொண்டு மனதிற்குள் அவ்வெண்ணத்தைக் கொண்டு வாழ்ந்து வந்தான். பின்னர் வாணிகம் செய்யப் புறப்பட்டு வேறு பட்டினம் சென்று சேர்ந்தான். பெரும்பொருள் ஈட்டினான். மற்றொரு பெண்ணை மணந்தான். ஒரு பெண் குழந்தைக்கும் தந்தை ஆனான். அதற்குப் புனிதவதி என்று பெயரிட்டான். பரமதத்தன் நிலையறிந்த உறவினர் அம்மையாரை அவனிருந்த இடம் நோக்கி அழைத்துச் சென்றனர். ஊரில் ஒரு புறம் தங்கித் தங்கள் வருகையை அவனுக்கு அறிவித்தனர். அவனோ மனைவியுடனும், மகளுடனும் வந்து அம்மையார் அடி பணிந்தான். காரணம் கேட்ட உறவினருக்கு உண்மை உரைத்தான். இதனால் கணவனுக்காகத் தாங்கி நின்ற தசை பொதி வனப்பு நீத்துப் பேய் வடிவாக வேண்டுமென்று சிவபெருமானிடம் வேண்டி அவ்வாறே பேய் வடிவம் பெற்றார் அம்மையார். அதனைக் கண்ட அனைவரும் அஞ்சி ஓடினர். அம்மையார் அற்புதத் திருவந்தாதி பாடினார். திருவிரட்டைமணிமாலை பாடினார். அம்மையாரைக் காமுகர் கண்டனர். அதனால் உடலழகிற்குக் காரணமான தசைப் பிண்டத்தை நீத்தார் என்ற குறிப்பில்லை. | கணவன் தன் பக்தியை உணர்ந்து போற்றிய போது, தன் அந்தரங்க பக்தி வெளிப்பட்டு விட்டதே என்று அவனை விட்டு நீங்கிப் புறப்பட்டார் காரிகாலம்மை. உறவினரும், ஊராரும், வருந்தித் தடுத்தனர். காமுகர் பார்வை கண்டு தசைப் பகுதியை நீத்து வீசினாள். பார்த்தவர் அஞ்சி ஓடினர். பேய் வடிவம் பெற்றதாகக் கூறாமல், தூல வடிவிலிருந்து சூக்கும வடிவம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. கணவன் வேற்றூர் செல்லல், மறுமணம் செய்து கொள்ளல், பெண் குழந்தைக்குத் தந்தையாதல் முதலிய குறிப்புகள் இல்லை. அம்மையாரின் படைப்பாற்றல் பற்றிய செய்திகள் இல்லை. கணவனின் மறுமணம் பற்றியே குறிப்பிடாமல், முதலிலேயே அவன் மனமாற்றம் எய்திச் சைவனாகி தாய், அம்மை என்று போற்றி வணங்குவதாக மட்டுமே கூறப்படுகின்றது. |

| | தமிழ் | கன்னடம் |
|---|---|---|
| 12. | கயிலாயம் சென்றார் காரைக்காலம்மையார். அடியார் நடந்த வழியைக் காலால் மிதிக்க அஞ்சித் தலையால் நடந்தார். அவரைக்கண்டு 'யாரிந்த எலும்பு வடிவம்' என்ற உமைக்கு 'என் அம்மை' என்றான் சிவபெருமான். 'அம்மையே' என்றழைக்க, அம்மையார் 'அய்யா' என்றார். பிறவாமை, அரனை மறவாமை, அவன் அடியின் கீழிருத்தல் ஆகிய பேறுகளை வேண்டினர். சிவபெருமான் அவ்வரமீந்து 'திருவாலங்காட்டில் எம்மாடல் கண்டு மகிழ்ந்து எம்மைப் பாடுவாய்' என்றதும் திருவாலங்காட்டிற்குத் தலையால் நடந்து சென்றார். அங்குச் சிவனின் ஆடலைக் கண்டு திருவாலங்காட்டுத் திருப்பதிகங்கள் இரண்டு பாடினாள். | முதலில் காஞ்சிக்கு வடக்கில் உள்ள திருவாலங்காட்டிற்குச் சென்றார். அங்குச் சிவனின் ஆடலைக் கண்டு மகிழ்ந்து, அவர் ஆணைப்படி தலையால் நடந்து கயிலாயம் சென்றார். நம்பி (சுந்தரர்), சோமர் (சேரமான் பெருமாள்) ஆகியோர் முறையே குதிரை, யானை, மீதேறிச் சென்றனர். அம்மையாரைக் கண்டு, 'எசற்கு வந்தீர் கயிலாயத்திற்கு?' என்றனர். கேட்ட அம்மை கண்ணீர் விடச் சிவன் தம் கரத்தால் அவரை முதலில் கயிலாயத்தில் சேர்த்தான். அம்மையைக் கண்ட பார்வதி 'இவள் பைத்தியமோ?' என்று அஞ்சி வினவ, 'இவள் என்னம்மை நின்னத்தை' என்று கூறி 'உலகிற்கே தாய்' என்ற நிலையும் தந்தார். தாளமும் தந்தார். |
| 13. | முதலில் கயிலாயம், பிறகு திருவாலங்காடு செல்லுதல். | முதலில் திருவாலங்காடு, பிறகு கயிலை செல்லுதலும் கூறப்படுகின்றது. |
| 14. | தலையால் நடத்தல். | உண்டு. |
| 15. | திருவாலங்காட்டில் இறைவனின் திருவடியின்கீழ் கீதமிசைத்து இருக்கும் பேறு. | கயிலையில் சிவகணப்பதவி |
| 16. | சுந்தரர், சேரமான் பெருமாளுடன் அம்மையார் கயிலை சென்றதாகக் குறிப்பில்லை. இக்கதை | இந்நிகழ்ச்சி கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாற்றுடன் சேர்ந்து வழங்கப்படுகின்றது. |

| தமிழ் | கன்னடம் |
| --- | --- |
| தமிழில் இடைக்கால ஔவையாருடன் சேர்த்து வழங்கப்படுகின்றது. | |
| 17. காரைக்காலம்மையார் வரலாறு தமிழில் சைவ சமயஞ்சார்ந்த கதை. | கன்னடத்தில் வீரசைவ சமயஞ்சார்ந்த கதை. காரைக்காலம்மையே அங்கையையே சிவனின் அரியாசனமாகக் கொண்டார். சிவன் ஜங்கமர் (வீரசைவ அடியார்) வடிவில் வந்தார். கணவன் சமணன். பவி (வீரசைவவல்லாதவன்). காரிகாலம்மையின் பக்தியுணர்ந்து தானும் சிவபக்தனானான் என்னும் குறிப்புகள் வீரசைவத் தாக்கத்தைக் காட்டுகின்றன. 'அருஞ்சிவனுக்கு அங்கை அரியணையாகக் காரைக்காலம்மையார் சிவபூசை செய்தார்' என்ற குறிப்பு. வீர சைவர்கள் அங்கையில் இலிங்கம் வைத்துப் பூசிக்கும் வழக்கத்தினைச் சார்ந்ததாக விளங்குகின்றது. |

------

# 5. அற்புதத்திரு

பெண்மையைத் தெய்வமாகப் போற்றிப் பெருமை செய்யும் புகழுடையது தமிழகம். எனினும் பெண்ணை மாயை என்று இகழும் நோக்கும், அவளுக்குரிய உரிமைகளைக் கொடுக்காது இழிவாக நடத்தும் போக்கும் சமுதாயத்தில் எவ்வாறோ வேர்கொண்டு விழுதுவிட்டு நிலைபெற்று விட்டது. பெரும்பாலும் பெண்ணின் வாழ்க்கை ஆணைச் சார்ந்ததாகவே அமைந்துள்ளது. ஆன்மநாட்டம், ஆன்மஉரிமை, ஆன்மவிடுதலை ஆகிய இயல்புகளுடன் தனித்துவம் கொண்டு பெண்கள் விளங்குவது, கல்வி வளர்ச்சியுற்ற இக்காலத்திலும் அரிதாகவே உள்ளது.

சங்ககாலத் தமிழகத்தில் அரசியலறிவு வாய்ந்த படைப்பாற்றல் மிக்க ஔவையாரைப் போன்ற கவிபாடும் ஆற்றல்பெற்ற ஆதிமந்தி போன்ற, கல்விப் புலமை வாய்ந்த காக்கைபாடினியாரைப் போன்ற மகளிர் வாழ்ந்தனர். ஆடலும் பாடலும் அழகும் கற்ற மாதவி போன்ற கலையரசிகளும், அறம் செய்து, சமய அறிவும் பெற்றுத் திகழ்ந்த மணிமேகலை போன்ற துறவரசியும் வாழ்ந்துள்ளனர். படைப்பாற்றலும், இசைப் புலமையும், கல்வியாழமும், சமய ஞானமும், அஞ்சாமையும், ஆன்ம வேட்கையும் ஒருங்கிணைந்த அற்புதத்திருவா விளங்குகின்றார் காரைக்காலம்மையார். மகேசன் பக்தி, மாதேசன் தொண்டு இரண்டிலும் ஈடுபட்டு, முத்தியை நாடுதலே வாழ்க்கையின் இறுதிக் குறிக்கோள்; பெண்ணுக்கும் இதில் உரிமை உண்டு என்று உலகுக்கு எடுத்துக்காட்டுவதாய் இவ்வம்மையாரின் வாழ்க்கை அமைகின்றது.

அடியாருக்கு உணவிட்டுத் தொண்டாற்றியதால் கணவனுக்குத் தெய்வமாகவும், இறைவனுக்கே தாயாகவும் ஆகும் பேறு பெற்றவர் காரைக்காலம்மையார். அம்மையார் கனி தந்து, கனிபெற்ற நிகழ்ச்சி இன்றும் காரைக்காலில் பெருவிழாவாக நடத்தப்படுகின்றது. நஞ்சுண்டகண்டனுக்கு அமுதமனைய கனி தந்த பேறுபெற்றவர் அம்மையார்.

அம்மையாரின் வாழ்க்கையே வியத்தகு சிறப்புடையதாக விளங்குகின்றது. தமிழக வரலாற்றில் இருண்டகாலம் என்று சொல்லப்படுகின்ற களப்பிரர் ஆட்சிக் காலத்தில், அம்மையார் தந்துள்ள பக்தி இலக்கியப் படைப்புகள் பலவகையில் புதுமைகளாக அமைந்து முன்னோடிகளாகத் திகழ்வது சிந்தனைக்குரிய அற்புதமாகவே இயங்குகின்றது. அவர் ஆக்கும உடல் பெற்றுப் பேய் வடிவம் பெற்றமை, தலையால் நடந்தமை, சிவனின் ஊழி ஆடலைக் கண்டமை, என்றும்

தேம் பாடி இறைவன் திருவடிக் கீழிருக்கும் பேறு பெற்றமை ஆகியவை ஆச்சரியமிகு அற்புதச் செயல்களாக மிளிர்கின்றன. இடுகாட்டரங்கில் அவர் கண்ட சம்மார நடனமும், அதனைப் பற்றி அவர் படைத்துள்ள மூத்த திருப்பதிகங்களும், அவருக்குப் பிறகு இன்றுவரை வேறு எவரும் உணராத, பாடாத ஆன்ம அனுபவமாக, அனுபவ இலக்கியமாக மிளிர்கின்றன.

அம்மையார் வழிபாடு தென்கிழக்காசிய நாடுகளில் பரவியதும் அவரது வரலாறு கன்னடம், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய இந்திய மொழிகளில் பரவியுள்ளமை ஏற்கெனவே சுட்டிக்காட்டப்பெற்றது. இவற்றுள் கன்னட மொழியில் பரவியுள்ள வரலாற்றில் வீர சைவ தாக்கமும் சேர்ந்திருப்பது தெளிவாகின்றது. பெரியபுராணம் கூறும் காரைக்காலம்மையார் வரலாற்றினின்றும் கன்னடமொழியிலுள்ள வரலாறுகள் ஒரோ வகையில் வேறுபட்டிருப்பினும், அம்மையாரின் பக்தியையும், அடியாருக்கு அவர் கனி தந்த சிறப்பையும், இறையருள் பெற்ற மாண்பையும், இவற்றால் அவருடைய கணவனும் மாறிய உயர்வையும் மையமாகக் கொண்டுள்ளன. அம்மையார் வரலாற்றுடன் சுந்தரர், சோமான் பெருமாள் கயிலை சென்ற நிகழ்ச்சியும் சேர்த்துரைக்கப்படுவதும் இவண் குறிப்பிடத்தக்கது. செய்திகள் இடம் மாறிக் காலப்போக்கில் வழங்கப்படும்போது இத்தகைய மாற்றங்கள் சேர்க்கப்படுவது இயல்பே.

அம்மையாரின் இலக்கியப் படைப்புகளையும் நுட்பமாகக் கருத்துறகொண்டு சேக்கிழார் படைத்தது போன்று கன்னட மொழியில் காரைக்காலம்மையார் வரலாறு சொல்லப்படவில்லையெனினும் அவரது வாழ்வில நடந்த உயிர்த் துடிப்பான, அற்புதமான செயல்கள் இலக்கியச் சுவையுடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மக்களைக் கவரும் எளிமையும் அற்புதச் சுவையும், பக்திச் சிறப்பும் இவ்வரலாறுகளில் சுடர்விட்டு பொலிகின்றன.

-------------

# பின்னிணைப்புகள்

## தமிழ் - கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாற்று வேறுபாடுகள்

| சேக்கிழாரின் **பெரிய புராணம்** | ஹரிஹரனின் **காரிகாலம்மே ரகளே** | சுராபக கவியின் **புராதன சாரித்ரம்** |
|---|---|---|
| காரைக்காலம்மையாரைக் காரைக்காலிலேயே குடித்தனம் வைக்கின்றனர் அவரது பெற்றோர் | கணவர் வீட்டிற்குச் செல்கிறார். பெற்றோர் காரைக்காலிலேயே குடித்தனம் அமைத்துத் தந்ததாகச் செய்தி சொல்லப்படவில்லை. | ஹரிஹரன் கூறுவது. |
| கணவன் வீட்டார் சிவபக்தர்கள் | கணவர் வீட்டார் 'பவி' (சமண சமயத்தவர்) | கணவர் வீட்டார் 'பவி'. |
| அடியார்கட்குத் திருத்தொண்டு செய்வதோ சிவபக்தியோ மறைக்கப்பட்டதாகக் கூறவில்லை | அந்தரங்க பக்தி, கணவன் வீட்டில் யாருக்கும் தெரியாது. | ஹரிஹரன் கூறுவது. |
| இருவர் வந்து இரு மாங்கனிகளைக் காரைக்காலம்மையார் கணவனிடம் கடையில் தருகின்றனர். அவன் அதனை வைத்திருக்குமாறு ஏவலர் மூலம் கொடுத்தனுப்புகின்றான். | சிவனடியார் வடிவில் சிவபெருமானே வந்து கனிகளைத் தருகின்றார். | கனிகளை யார் தந்தது; எதற்காக என்பன கூறப்படவில்லை. |

| சேக்கிழாரின் **பெரிய புராணம்** | ஹரிஹரனின் **காரிகாலம்மே ரகளே** | சுரங்க கவியின் **புராதன சாரித்ரம்** |
|---|---|---|
| தம் இல்லத்திற்கு வந்த சிவனடி-யாருக்கு ஒரு கனியைத் தந்தார் | சிவனே சிவனடியார் வடிவில் வர, அவ்வடியாருக்கு ஒரு கனியை இட்டார். | ஹரிஹரன் கூறுவது. |
| அடியார் கனியை உண்டு செல்வதக் கனாவன் பார்க்கவே இல்லை. | கணவன் காண்கிறான். ஐயம் கொள்கிறான். கோபம் கொள்கிறான். | ஹரிஹரன் கூறுவது. |
| கணவன் உணவு உண்ண வந்தான். அம்மையார் உணவு படைத்து ஒரு கனியை இட்டார். கணவன் மற்றொரு கனியையும் கேட்க அதனைக் கொண்டு வரச் செல்பவர் போல் உள்ளே சென்று மனந்தளர்ந்து நிற்க, இறையருளால் மற்றொரு கனி கிடைத்தது. அதனைத் தின்ற பரமதத்தன் அதன் சுவையுணர்ந்து அது தான் தின்ற கனி போன்றதன்று என்றுணர்ந்து அதனைப் பற்றி வினவினான். நடந்த உண்மையினை அம்மையார் உரைத்தார். அவ்வாறாயின் மற்றொரு கனி | மற்ற நாள்களை விட விரைவில் அன்று வீட்டுக்கு வந்த கணவனுக்கு அஞ்சியஞ்சி உணவிடத் தொடங்கினார் அம்மையார். கணவன் ‘கனி தா’ என்று கேட்டதும் இருந்த ஒரு கனியைக் கொண்டு வந்து கொடுத்தார். ‘இன்னொரு கனியையும் தா’ என்று கூறச் சமையலறைக்கு அச்சத்துடன் சென்று கைவைக்க சிவனருளால் கனி கிடைத்தது. அதனைக் கணவனிடம் கொடுக்க அதைத் தின்றதுமே அவனுக்கு உரோமாஞ்சனம் உண்டாயிற்று. | சிவபக்தன் கனியைத் தின்று விட்டுச் செல்வதைக் கண்-கூடாகக் கண்ட கணவன் கோபங்கொண்டு தான் தந்த கனியைக் கொடு என்று கேட்டான். அவள் கொண்டு வந்து கொடுக்க, மனைவி பெரிதும் சிறப்புடையவர் என்பதை உணர்ந்து வணங்கினான். |

| சேக்கிழாரின் **பெரிய புராணம்** | ஹரிஹரனின் **காரிகாலம்மே ரகளே** | சுரங்க கவியின் **புராதன சாரித்ரம்** |
| --- | --- | --- |
| அழைத்துத்தா என்று கணவன் கூற, அம்மையார் இறைவனை வேண்ட மற்றொரு கனி இறையருளால் கிடைத்தது. அதனைக் கணவனிடம் தந்தாள். அதனை அவன் தொட்டதுமே அக்கனி மாயமாக மறைந்தது. தன் மனைவியைத் தெய்வமென்று கருதித் தன் மனதிற்குள்ளேயே அவளை விட்டு நீங்கும் எண்ணத்தை மறைத்து வைத்து வாழ்ந்து வந்தான். | அதன் சுவையை மெச்சி, அக்கனியின் இரகசியம் யாதென்று வினவினான். மனம் நடுங்கிய காரைக்காலம்மை உண்மையை உரைத்தாள். கணவன் நடுங்கி, அவரைத் தன் மனைவியென்ற பாவத்தை விடுத்து, தாய், மகாமாயை, தேவி என்று பாவிக்கத் தொடங்கினான். | |
| கணவன் வணிக நிமித்தம் அயலூர் சென்று அங்கேயே தங்கி வேறு ஒருத்தியை மணந்து கொண்டு அவளுக்குப் பிறந்த பெண் குழந்தையுடன் (அதற்குப் புனிதவதி என்று பெயரிட்டு) சுகமாக வாழ்ந்து வந்தான். காரைக்காலம்மையாரின் உறவினர்க்கு இது தெரிந்து | தன் அந்தரங்க பக்தி வெளிப்பட்டுவிட்டது என்று கூறித்தன் இல்லம் துறந்து கயிலை நோக்கிப் புறப்பட்டார். காமுகர் வழியில் அவரைச் சூழ்ந்துவர அவர்களுக்கு எவ்வளவு உபதேசம் கூறியும் அவர்கள் கேட்கவில்லை உடலின் வடிவ அழகு இருக்கும் வரை அவர்கள் | தன் அந்தரங்க பக்தி வெளிப்பட்டுவிட்டது. இவ்வாழ்க்கை போதும் என்று அனைத்தையும் துறந்து புறப்பட்டுச் சென்றாள். கணவன் பைத்தியம் பிடித்து மனைவியை இவ்வாறு வீட்டை விட்டு அனுப்பிவிட்டாரென்று பரிசனங்களும் ஊர் மக்களும் அவளைத் தடுத்துச் சூழ அவள் |

| சேக்கிழாரின் **பெரிய புராணம்** | ஹரிஹரனின் **காரிகாலம்மே ரகளே** | சுரங்க கவியின் **புராதன சாரித்ரம்** |
|---|---|---|
| அவரை அழைத்துச் சென்று அவனுக்குச் சொல்லியனுப்பினர். அவன் மனைவியுடனும் மகவுடனும் வந்து வணங்கி அவர் தெய்வமென்று கூறினான். கணவனுக்காகத் தாங்கி நின்ற வடிவ அழகு இனித் தேவையில்லையென்று தசை பொதி மாமிசத்தினை உதிர்த்து எலும்பு வடிவாயினார். | அவ்வாறுதான் செய்வார்களென்று உணர்ந்து தன் உடலின் மாமிச பிண்டத்தை உதிர்த்து விட்டுச் சென்றார். | வைராக்கிய பாவனையுடன் உடலின் மாமிசத்தைச் சிதறி 'உங்கள் சொத்தை நீங்களோ எடுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறிப் புறப்பட்டுச் சென்றாள். |
| கயிலை சென்ற காரைக்காலம்மையார், அங்குக் காலால் நடந்து செல்வது சரியல்ல என்று கருதித் தலையால் நடந்து சென்றார். அவரைக் கண்ட உமையம்மை பேராச்சரியமடைந்து, அவரது பெருமையைச் சிவன் மூலம் தெரிந்து கொண்டான். அம்மையைத் தன் தாயென்று சிவன் கூற அம்மையார் 'என் தந்தையே' என்று கூறி, | வீடடை விட்டுப் புறப்பட்ட அம்மையார் முதலில் காஞ்சிக்கு வடக்கில் உள்ள திருவாலங்காட்டிற்குச் சென்று அங்குச் சிவனின் ஆடல் கண்டு மகிழ்ந்து அவன் கூறியதன் படிக் கயிலைக்குச் சென்றார். கயிலை செல்லும் வழியில் சரணர்களின் அடிச்சுவடுகளைக் கண்டு, அவற்றைத் தம் காலால் மிதிக்கக் கூடாதென்று கருதித் தலையால் | இல்லம் நீங்கிப் புறப்பட்ட அம்மையார் திருவாலங்காடு வந்தார். அங்குச் சிவலிங்கமிருந்த கோவிலில் நுழைந்தார். அந்த லிங்கத்தின் அருகிருந்த பார்வதி 'இதென்ன பைத்தியம் வருகிறதோ' என்று கேட்க, 'இவள் நம் தாய்' என்று கூறிக் காரிக்காலம்மையின் கையில் சிவன் தாளங்களைக் கொடுத்தான். தான் நடனமாட, தன் வடிவைக் காட்டி, |

### சேக்கிழாரின்
## பெரிய புராணம்

சிவனின் திருவடிகளில் விழுந்து வணங்கினார். அவன் ஆணைப்படித் தலையால் நடந்தே திருவாலங்காடு சென்றார். அங்குச் சிவனின் ஆடல்கண்டு, அவனது ஆடலுக்குக் கீதமிசைத்து என்றும் அவனது திருவடியின் கீழ் இருக்கின்றார்.

### ஹரிஹரனின்
## காரிகாலம்மே ரகளே

நடந்து சென்றார். வழியில் மிக விரைவாக, யானை, குதிரை மீது ஏறிக் கொண்டு வந்த நம்பியும், சேரமானும் இவரைக் கண்டு 'எதற்குக் கயிலாயத்திற்கு வருகிறீர் அம்மையே' என்று கேட்டனர். அம்மையார் இதனால் மனம் நொந்து கண்ணீர் விட சிவனின் அவையே நனைந்தது. சிவன் அவளை அப்பொழுது மேலே தூக்கிக் கொண்டான். அக்கணமே அம்மை கயிலை வாயிலில் இருந்தார். பார்வதி பிரேதமே வருகிறதென்று அஞ்சிச் சிவனின் பின்புறம் மறைந்து நின்றாள். 'இவள் உன் அத்தை என்னம்மை' என்று கூறிய சிவன் காரைக்காலம்மைக்குச் சிவகணப் பதவியளித்தான்.

### சுரங்க கவியின்
## புராதன சாரித்ரம்

'கயிலாயத்திற்குச் செல்' என்று உத்தரவு கொடுத்தான். சரணர் நடந்த வழியில் காலால் நடக்கக் கூடாதென்று தலையால் நடந்து சென்றார் காரைக்காலம்மையார்.

---

## ஹரிஹரனின் வரலாறு

ஹரிஹரன் ஹம்பேயின் ஹரிஹரதேவன் என்று அழைக்கப் படுகின்றான். பம்பா விருபாட்சனின் மகன் தான் என்று பக்தி மிகுதியுடன் அவன் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்கிறான். ("பம்பா விருபாட்ச சாட்சாத் கவுத்ர") அவனது வரலாற்றை, பத்மராஜபுராண, சென்ன பசவ புராண, பைரவேஸ்வர காவ்ய ஆகிய நூல்களின் மூலம் அறியமுடிகின்றது. ராகவாங்க கவி 'ஹரிஹர மகத்வ' என்ற நூலும் எழுதியுள்ளான்.

ஹரிஹரன் கயிலாயத்தின் கனபுருஷன், இம் மண்ணுலகில் சிவபெருமான், பார்வதி அருளால் பிறந்தவன். ஹம்பேயின் மாதரசன் அவனுக்குத் தீட்சை தந்து ஹரிஹரன் என்று பெயர் தந்தான். அவன் பம்பா விருபாட்சனைப் பக்தியுடன் பூசித்து வந்தான்.

ஹரிஹரனுக்கு ருத்ரானி என்ற அக்கா இருந்தாள். கவி ராகவாங்கன், இவருடைய மகன் ஆவான். ஹம்பேயில் அருள்கான மூர்த்தியாக விளங்கிய சங்கராசார்ய சிவாகம பண்டிதரிடம் தீட்சை பெற்றவன் மாதிராஜன். அவரின் அருள்பெற்றவன் மாயிதேவன். அம்மாயிதேவனின் சீடன் ஹரிஹரன்.

இளமைப் பருவத்தில் பம்பா தலத்தில் கல்வி பயின்று முடித்த ஹரிஹரன் சிறிதுகாலம் நரசிம்ம பல்லவனின் அவையில் பணியாற்றினான். அவ்வாறு பணியாற்றிக் கொண்டிருந்தபோது, பம்பாவிருபாட்சனின் திருமுன் தொங்கிய திரையில் நெருப்புப் பற்றிக் கொள்ளத் தான் அவையிலிருந்தபடியே, தன் கரங்களால் அந்த நெருப்பினை அணைத்தான். இத்தகைய பெருமையுடையவனைத் தான் பணியாளனாகக் கொண்டிருப்பது சரியன்று என்று கருதிய மன்னர் அவனை வணங்கிப் பொன் தந்து பம்பா விருபாட்சனின் ஆலயத்திலிருக்குமாறு வேண்டிக் கொண்டான். இவ்வரலாற்றினை ராகவாங்க சரிதம் கூறுகின்றது. அப்பொன்னைப் பம்பாவிருபாட்சன் கோயிலுக்கே தந்தான் ஹரிஹரன். இவ்வாலயத்திலேயே தங்கி இலக்கியம் இயற்றத் தொடங்கினான்.

ஹம்பேய்க்கு வரும் வழியில் ஹரிஹரன் சிவபுரத்தின் சோமநாத தேவாலயத்தில் ஓரிரவு தங்கினான். அப்போது பம்பாவிலிருந்து பக்தர்கள் பல்லக்குடன் வந்து அவனை வரவேற்றனர். அப்பல்லக்கினை விடுத்து, பம்பா சதகத்தினைச் சிந்தித்துக் கொண்டே விருபாட்சனின் சந்நிதியை வந்தடைந்தான். ஆலய அதிகாரிகள் அவனுக்கு இருப்பிடம் அமைத்துக் கொடுக்க அங்கேயே தங்கியிருந்தான். இங்கே தங்கியிருந்தபொழுதுதான்,

அடியார் வரலாற்றினை ரகளே வடிவத்தில் இயற்றினான். இக்கதைகளின் புகழ் தமிழகம் வரை அவன் காலத்திலேயே பரவியிருந்தது.

ஹரிஹரன் பசவாசனைக் குறித்து 25 தலங்களில் ரகளே எழுதியதற்காக அவன் கவிச்சக்கரவர்த்தி என்று போற்றப்பெற்றான். பம்பா சதகம், ரட்சாசதகம், கிரிஜா, கல்யாணம் முடிகே அஷ்டக, சிவகணங்களின் 'ரகளே' ஆகியவற்றை ஹரிஹரன் எழுதினான் என்பர்.

சிவபெருமான் புகழைப்பாடுவதே தன் குறிக்கோள் என்று வாழ்ந்தவன் ஹரிஹரன். சிறந்த சிவபக்தனாக, மகா கவியாக வாழ்ந்த ஹரிஹரன் கன்னட இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றான். அவனது காலம் கி.பி. 1200 முதல் 1260 வரை என்று துணியப்படுகின்றது.

**ஹரிஹரன் படைத்த பிற (55) 'ரகளே' நூல்கள்**

ஓஉறில, உத்பட, உறலாயுத, சாமவேதி, மளியராஜ, போகண்ண, கும்பரகுண்டய்ய, ப்ரபுதேவரு, ப்ருங்கி, வீரபத்ர, முசுடிய சௌடய்ய, சுரகிய சௌடய்ய, சங்கர தாசிமய்ய, மலுஉறன, வைஜக்கவ்வே, ஏகாந்தராமிதந்தே, ஆதய்ய, தெலுகு சொம்மய்ய, கேசிராஜ, ரேவண சித்தேஸ்வர, மகாதேவி அக்க, பாஹுர பொம்மய்ய, கோவூர பொம்மய்ய, பசவராஜதேவரு, நம்பியக்க, ஹாவினஹாளி கல்லி தேவரு, பிண்டோத்வத்தய்ய, ஹம்பெயரச, விபூதி, ருத்ராட்ச, நமசிவாய, புஷ்ய, லிங்கார்ச்சனை, குணஸ்தோத்ர, பம்பாஷேத்ர, ஜெய, பாண, கலியநாயனார், ஐயடியர், கணம்புல்லர், கடவூரகாரியர், வாஉறிய்யர், மொனெயடுவர், ஓடகளியர், புகழ்த்தொணெயாண்டர், கொல்புலியாண்டர், பூசலார், பாண்டிய மகாதேவி, களசிங்கபருமாள், நேசநைனார், களசிங்கசோளன், களநாதன், சாங்கீய தொண்டர், ஜடெயநாயனார், திருநீலகண்டபாணர்.

ஹரிஹரன் கன்னட இலக்கியத்தில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திய மகாகவி. இலக்கியத்தில் பொருள், நோக்கு, அமைப்பு ஆகியவற்றால் இலக்கியத்தை மக்கள் இலக்கியமாக்கியவன் இக்கவிஞன். இராமாயணம் மகாபாரதம் போன்ற பேரிலக்கியங்களை இயற்றுவதுதான் கவியாற்றலின் அடையாளம் என்று கருதியிருந்த காலத்தில், சமகாலத்தில் வாழ்ந்த, அடியார்கள் சிறந்த சான்றோர்கள் பற்றி இலக்கிய நயத்துடன் படைத்தவன் ஹரிஹரன்.

**ஹரிஹரன் படைத்த நாயன்மார் பற்றிய ரகளே இலக்கியங்களாக, டாக்டர் ஆர். சி. உறிரேமத் வெளியிட்டுள்ள நூலில் தரப்பட்டுள்ளது (30)**

திருநீலகண்டரு, இஉறப்பகேயாண்டரு, இளயாண்ட குடி மாரரு, சேத்ராஜ மெறெமிண்டதேவரு, அமர நீதிகள், நம்பியண்ண, இறைபக்தய்யன், ஏனாதிநாதன், கண்ணப்ப, கொங்குலிய கலிமார, மானகஞ்சர, அரிவாள்தாண்டர், ஆனாயநாரரு, ஒலகாண்ட மூர்த்தி, நமசிவாய முருகரு, ருத்ரபகபதி, திருநாள்போவர், திருக்குறும்பெ தொண்டர், தண்டீசப்பிள்ளே, வாகீஸ்வரதேவர், குலச்சிரையர், காரிகாலம்மே, கலிகாமதேவர், தண்டீசபக்தர், சோமாசிமாரர், சிறதொணெயாண்டர், நரசிங்கமொணெயரு, அதிபக்தர், கலிகம்பர்.

---------

## சுரங்ககவியின் வாழ்க்கை வரலாறு

திரிசஷ்டி புராதன சாரித்ரம் எழுதிய சுரங்க கவி, சுரங்க, சுரங்க வரத, கவி சுரங்க என்று அழைக்கப்படுகின்றான். இவன் தந்தை சங்கமவிபு. தாய் மகாதேவி. பிரம்மன், சித்திரை மாதத்தையும், சந்திரனையும், சுரங்கனையும் படைத்து அடிப்படையில் மிக மகிழ்ச்சியுற்றான் எனப் புலவர்கள் இவனைப் போற்றுகின்றனர். இலக்கிய ரசனையும், படைப்பாற்றலும், புலமைத்திறனும் வாய்ந்தவன் சுரங்க கவி. இவனது காலம் கி.பி.15 அல்லது 16 ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுகின்றது.

கவிச்சக்கரவர்த்தி என்று போற்றப்படும் சுரங்ககவி, புலிகெரெ சோமேசுவரனைத் தன் காவியத்தில் பாடியிருப்பதால், புலிகெரெ நாட்டைச் சேர்ந்தவன் என்பதும் சிறந்த சிவபக்தன் என்பதும் புலனாகின்றன. உபமன்யுவின் பக்திவிலாசமே தனது திரிசஷ்டி புராதன சாரித்ரத்திற்கு மூலநூல் என்று சுரங்க கவி உரைக்கின்றான். எனினும், ஹரிஹரனின் தாக்கத்தை இவனது நூலில் காணமுடிகின்றது. கன்னட இலக்கியத்தில் 'திரிசஷ்டி புராதன சாரித்ரம்' இறவாப் புகழ் பெற்று விளங்குகின்றது.

ஹரிஹரனின் 'காரிகாலம்மே ரகளே' - 374 அடிகளைக் கொண்டது. சில படிகளில் கடவுள் வணக்கமாக நான்கடிப் பாடல் ஒன்றும் தொடக்கத்தில் உள்ளது. உறம்பே விருபாட்சனைப் பற்றிய துதியாக இப்பாடல் அமைந்துள்ளது.

ரகளே இலக்கிய வகையில் இரண்டிரண்டு அடிகள் ஓசை ஒத்து வரும் அமைப்பு காணப்படுகின்றது. 'காரிகாலம்மே ரகளே'யில் வரும் பின் வரும் பாடல் இவ்வமைப்பிற்குச் சான்றாக எடுத்துக்காட்டப்படுகின்றது.

அத்தை மாமன் கணவன் அறியா பக்தியினள்
மற்றும் மனையிலுளார் எவரும் அறியா பக்தியினள்
உண்டி சமைக்குமிடமே உயர் இறை பூசைத்தலம்
அருஞ்சிவனுக்கு அரியணையாம் அங்கைத்தலம்
நெஞ்சில் நிறைந்த சிந்தனையே தோத்திரம் அவனுக்கு
மனிதன் தூய்மையே மஞ்சன நீராட்டு மகாதேவனுக்கு

கவிச்சக்கரவர்த்தி சுரங்கனின் 'திரிசஷ்டி புராதன சாரித்ரத்தில்' வரும் (திரிசஷ்டி புராதனர் - அறுபத்து மூன்று நாயன்மார்) 'காரிகாலம்மெகள கதே', 'சம்பு' வடிவில் அமைந்தன. இஃது தமிழில் வரும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் போன்றுள்ளது. 12 நான்கடிப்பாட்டுக்களையும் ஒவ்வொரு பாட்டிற்கும் இடையே உரைநடைப் பகுதியையும் கொண்டுள்ளது. இதனைப் பின் வரும் சான்றால் உணரலாம்.

சிவபக்திக்கு இருப்பிடமாகும்
சிவபக்தரின் ஜன்மபூமி சிவபக்தரின்
சத்பவனம் எனத் தக்கதாய்
உள்ளது காரைக்கால் என்றோர் ஊர் இப்புவியில் (செய்யுட்பகுதி)

அந்த ஊரில் (உரைநடைப்பகுதி)

நிறைந்திடும் செல்வத்தில்
திருமகளாய் உருவ எழிலில் இரதியாய்க் கல்வியில்
கலைமகள் எனத்தக்களாய்
இருந்தனள் காரிகால்தாய் என்பவள். (செய்யுட்பகுதி)

## கன்னடத்தில் காரைக்கால் அம்மையார் பெயர் வழங்கும் விதம்

| | |
|---|---|
| ஹரிஹரன் (புராதன ரகளேகளு) | காரிகால் அம்மை |
| சுரங்க கவி (திரிசஷ்டி புராதன சாரித்ர) | காரிகால் அம்மை |
| லக்கண்ண தண்டீச (சிவதத்துவ சிந்தாமணி) | காரிகால் அம்மை |
| நிஜகுண சிவயோகி (புராதன திரிவிதி) | காரிகால் அம்மை |
| விருபாட்ச பண்டிதர் (சென்னபசவ புராண) | காரிகால் அம்மை |
| உபமன்யு (பக்த விலாச) | புனிதவதி |
| பீமகவி (பசவ புராண) | காரிகால் அம்மை |
| ஷட்சரி தேவ (பசவராஜ விஜய) | ------ |
| குப்பி மல்லனார்ய (வீர சைவாப்ருத புராண) | காரிகால் அம்மை |
| சிக்க நஞ்சீச (ராகவாங்க சரித்ர) | காரிகால் அம்மை |
| சிக்க நஞ்சீச (குருராஜ சரித்ர) | ------ |
| அத்ருஷ்ய கவி காவ்ய (ப்ரெளடராயன காவ்ய) | ------ |
| தொண்டத சிவயோகி (பால்குரிக சோமநாத புராண) | காரிகால் அம்மை |
| சாந்தலிங்க தேசிக (பிருகத் கதா ருத்ரரத்னாகர) | ------ |
| பசவ கவி (மகாலிங்க லீலே) | காரிகால் அவ்வே |
| பண்டிதராக்ய (கனசஉறஸ்ர நாமாவளி) | காரிகால் அம்பா |
| சோமநாத (கனசஉறலரே நாமாவணி) | காரிகால் அம்பா |

## 63 நாயன்மார் பற்றிய கன்னட நூல்கள்

| கவிஞன் | நூல் | யாப்பு |
|---|---|---|
| ஹரிஹரன் | புராதன ரகளே | ரகளே |
| சுரங்க கவி | திரிசஷ்டி புராதன சாரித்ரம் | சம்பு |
| வீரபத்ர சிவயோகி | அறுவத்து மூவரு புராதன சரித்ர | வார்த்திக ஷட்பதி |
| சோமேஸ்வர | அறுபத்து மூவரசாங்கத்ய | சாங்கத்ய |
| நிஜகுணசிவயோகி | புராதன திரிவிதி | திரிவிதி |
| களலி நம்பிராஜ | அறுபத்து மூவரதிரிவிதி | திரிவிதி |
| ------------ | புராதன தேவியாதிரிவிதி | திரிவிதி |
| ------------ | அறுபத்துமூவரு புராதனர சரித்ரே | கத்ய |
| ------------ | பிராக்தனகண சுதாவளி | -------- |
| ------------ | புராதனர ப்ரகரணக்ன | -------- |
| குமாரசன்னபசவ | புராதனர சரிதே | -------- |
| பத்ரவீரசுர | புராதனர புராண | -------- |
| ------------ | சம்க்ஷேப பக்த விலாச | -------- |
| ------------ | சர்வ புராதனர புராண | -------- |
| லக்கண்ண தண்டீச | சிவதத்துவ சிந்தாமணி (ஒரு பகுதி) | ஷட்பதி |
| விருபாக்ஷருபண்டித | சன்னபசவ புராண (ஒரு பகுதி) | ஷட்பதி |

2. இந்நூலுக்கு மிகவும் முற்பட்ட, பால்குரிசி சோமநாதரின் பசவ புராணம் மூன்றாம் பகுதியில், காளவ்வா, கரிகாலவ்வா பூதவதி என்று காரைக்காலம்மையாரின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. கணவன் தந்த இரண்டு மாங்கனிகளைப் பல கூடைகள் நிறையக் கனிகளாக்கிவிட்டார் கரிகாலவ்வா. அக்கூடைகளில் மறைந்து உட்கார்ந்து கொண்டு மாங்கனியைத் தின்றார், அடியாராக வந்த சிவபெருமான் என்ற ஒரு புதிய கருத்து கூறப்பட்டுள்ளது.

| கவிஞன் | பிறகன்னடநூல்கள் | 63 நாயன்மார்கள் பற்றிய குறிப்புகள் கொண்டவை |
|---|---|---|
| பீமகவி | ப்சவபுராண | ஷட்பதி |
| சித்தநஞ்சீஸ | குருராஜ சரித்ர | ஷட்பதி |
| ஷட்சரதேவ | பசவராஜ விஜய | சம்பு |
| பசவகவி | மஹலிங்க லீலே | ஷட்பதி |
| நரசார்ய (பிராஹ்மண) | பத்யகனசஹஸ்ர நாம | --------- |
| குப்பி மல்லணார்ய | புராதன ரகளே | --------- |
| குமார சன்னபசவ | பசவபுராதன சரித்ர | --------- |
| ------------ | பசவேஸ்வர புராணத | --------- |
| ------------ | அறுபத்துமூவரு பிரமத கணாதீஸ்வர ஸ்துதி | ஷட்பதி |
| ------------ | அறுவத்து மூவரு புராதனர சரிதே | --------- |
| ------------ | புராதன பக்தவிலாச | --------- |
| மல்லிகார்ஜுன | புராதன ரகளே | --------- |
| ------------ | அறுபத்துமூவரு பிரமத கணாதீஸ்வர திரிபதி | --------- |
| மும்மடி கிருஷ்ண ராஜ | பக்த விலாச தர்பண | --------- |
| ------------ | சஹஸ்ரகணநாமாவளி | ஹாகு |

ஒவ்வொரு நாயன்மார் பற்றியவை

| நாயன்மார் | நூல்கள் | கவி | காலம் |
|---|---|---|---|
| நம்பியண்ண | சௌந்தர புராண | பொம்மாச | 1450 |
| நம்பியண்ண | சௌந்தர விலாச | அண்ணாஜி | 1600 |
| நம்பியண்ண | சௌந்தரேசன அறுபத்து நால்குல்லெ | ------------- | ------ |
| நம்பியண்ண | சௌந்தரேசன யட்சகான | ------------- | ------ |
| சேரம | சேரம காவ்ய | சேரமாங்க | 1563 |
| சிரியான | சிரியான செட்டிய சாங்கத்ய ரகளே | மகாதேவ | 1450 |
| சிரியான | சிரியான செட்டிய சாங்கத்ய ரகளே | ------------- | ------ |
| சிரியான | சிரியான செட்டிய சாங்கத்ய வார்தக | ------------- | ------ |
| சிரியான | சிரியான சத்வபரிஷ | சாந்த கவி | ------ |
| சிரியான | சிரியான ராஜ | ஜயாராமாசார்ய | ------ |
| பகள்ச் சோள | சோளராஜ சாங்கத்ய | லிங்க - | 1550 |
| கண்ணப்ப | கண்ணப்பனவர கதே | ------------- | ------ |
| நக்கநைனார | நக்க நய்னாரு ஷிலேயர சர்த்ர | -------- | ------ |
| பகள்சோளன ரகளே (அறுபந்த 11) | த்ரிபுவனநாத | ------------- | ------ |

## கன்னடமொழியிலுள்ள காவணகெரெ கல்வெட்டில் கூறப்படும் காரிகாலம்மே

இக்கல்வெட்டு கப்பூரு கிராமத்தில் கல்மேசுவர தேவாலயத்தில் உள்ளது. இக்கல்வெட்டின் காலம் கி.பி.1145.

கப்பூரு இன்று சிறியதொரு கிராமம். முற்காலத்தில் வேதம் ஓதிய அந்தணர்கள் வாழிடமாகச் சிறப்புற்று விளங்கியது. இன்றும் அங்குக் கல்மேசுவரர் ஆலயம் உள்ளது. அவிமுக்தேசுவர ஆலயம் பாழான நிலையில் உள்ளது. இவ்வாலயங்கட்குச் சாணக்கிய ஆட்சிக்குட்பட்ட மஹாமண்டலேசுவரன் மாயா கொண்ட தேவன் செய்த தானங்களைப் பற்றி இக்கல்வெட்டு கூறுகின்றது. இக்கல்வெட்டில் பின்வரும் செய்திபொன்று கூறப்படுகின்றது.

மலையாள நாட்டினின்று வந்த காரிகல்ல அம்மே என்ற ஒரு சிவபிராமணி, சிவபக்தியினன், நற்குணத்தினால் கலிதேவ, கஷரேஸ்வர குந்த முதலிய சிவதேவாலயங்கள் உருவாக்க காரணமானவன். முப்பொழுதும் சிவனைப் பூசித்தான். அவன் அவளுக்குக் `குந்த' என்ற மகன் பிறந்ததால் தேவஸ்தானத்தில் முக்கால பூசை நடந்தது.

இக்கல்வெட்டில் கூறப்படும் காரிகல்ல அம்மே வேறு. தமிழ் நாட்டுக் காரைக்காலம்மையார் வேறு என்று ஸ்ரீனிவாச ஜோயிச நிறுவியுள்ளார். இக்குறிப்பு டாக்டர் எம்.எஸ். லட்டே அவர்களின் 'அக்கமாதேவியும காரிகாலம்மையும்' என்ற நூலில் தரப்பட்டுள்ளது.

---

குறிப்பு :-

கவிச்சக்கரவர்த்தி சுரங்கனின் திரிசஷ்டி புராதன சரித்ரம் என்ற நூலின் டாக்டர். ஆர்.சி. ஹிரேமத் அவர்களின் ஆய்வு முன்னுரையில் இப்பட்டியல்கள் தரப்பட்டுள்ளன (பக். 50-52).

## தெலுங்கில் ஸ்ரீசிவபக்த சரிதமு என்ற நூலில் கூறப்பட்டுள்ள காரைக்காலம்மையார் வரலாறு

அம்மையார் பிறந்த ஊர் காரிகால். இவ்வூர் சோழநாட்டில் உள்ளது. தந்தை தனதத்தன். அம்மையாரின் பெயர் புனிதவதி. இவ்வம்மை நாடோறும் சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்பவள், பேரழகு வாய்ந்தவள். வணிக குலத்திற் பிறந்தவள். ஒரே மகளாதலால் புனிதவதிக்கு ஆபரணங்கட்குக் குறைவில்லை. ஆனால் ஆடல்பாடல்களில் கூடநாட்டமின்றிச் சிவதியானத்திலேயே ஈடுபட்டாள். சிவனின் பாடலே அவள் பாடும் பாடல். சிவபூசையிலும், சிவனடியார்களை ஆதரிப்பதிலுமே அவளுக்கு நாட்டம் மிகுதி.

நாகப்பட்டினம் நிதிபத்தன் மகன் பரமதத்தனுக்குப் புனிதவதியைத் திருமணம் செய்தனர். பெற்றோரும், சான்றோரும் ஒரே மகளாதலால், மகளையும் மருமகனையும் தன் வீட்டிலேயே வைத்திருந்தனர். பிறகு அழகிய வீடு கட்டிக் கொடுத்துத் தனிக் குடித்தனம் வைத்தான் தனதத்தன். அவர்களுக்குப் பெருஞ்செல்வமும் தந்தான். பரமதத்தனும் வணிகத்தில் பெரும்பொருள் ஈட்டினான். கணவனே தெய்வமென்று கருதிய புனிதவதி கணவனிடம் பேரன்பு கொண்டிருந்தாள். தாமரை இலைத் தண்ணீர் போல இல்லற வாழ்க்கை நடத்தினாள். உலகில் வாழ்ந்தாலும் இறைஉணர்வுடன் வாழ்ந்து வந்தாள்.

இவ்வாறிருக்கையில் பரமதத்தன் புனிதவதியிடம் வைத்திருக்கச் சொல்லி இரு மாங்கனிகளைத் தந்தான். பசித்து வந்த சிவபக்தன் ஒருவன் அன்று இல்லத்திற்கு வர அவனுக்குப் பாதம் கழுவநீர் தந்து மனைமேல் அமர வைத்து, காய்கறி சித்தமாகாததால் கணவன் தந்த மாங்கனிகளில் ஒன்றை அச்சிவபக்தனுக்குத் தந்தாள் புனிதவதி. அதைத் தின்ற அவன் மகிழ்ந்து அவளை வாழ்த்திச் சென்றான்.

உணவு உண்ணும் நேரத்திற்கு வீட்டிற்கு வந்தான் பரமதத்தன். நீராடி உணவு உண்ண அமர்ந்தான். புனிதவதி மாங்கனியைக் கணவன் உண்ண இட்டாள். அதன் சுவையால் மகிழ்ந்த பரமதத்தன் மற்றொரு கனியையும் கேட்டான். புனிதவதி செயலற்று ஆபத்பாந்தவனாகிய சிவபெருமானை நினைத்தாள். "தேவா காப்பாற்று கருணை காட்டு" என்று பிரார்த்தனை செய்தாள். சிவன் கருணை கொண்டு அவளைக் காப்பாற்ற அவள் கையில் ஒரு மாங்கனியைத் தந்தான். மானத்தைக் காப்பாற்றினாய் சிவனே என்று கொண்டாடிக் கனியைக் கணவனுக்குத் தந்தாள். அதைத் தின்ற பரமதத்தன் அதன் சுவை வேறுபாட்டினை

உணர்ந்தான். "இதை எங்கிருந்து கொணர்ந்து தந்தாய்?" என்று வினவினான். கேட்ட புனிதவதிக்குச் சிவபக்தனுக்குக் கனியினைத் தந்ததைச் சொல்லவும் அச்சம், சொல்லாவிட்டால் கணவன் சொல்லைக் கேட்கவில்லையே என்றும் அச்சம் எழ இருதலைக் கொள்ளி எறும்பு போலாயிற்று அவளது நிலை. சத்தியத்தைக் கடைப்பிடிப்பவளாக அவள் அவனிடம் நடந்ததைக் கூறினாள். சிவன் தந்தானென்று அவள் கூறியதைக் கேட்ட பரமதத்தன் நம்பாமல் ஐயங்கொண்டு மற்றொரு கனியை அழைப்பித்துத் தருமாறு கேட்க, அவ்வாறே சிவனை வேண்டி மற்றொரு கனி பெற்றுக் கணவனிடம் தந்தாள் புனிதவதி. அதனைப் பரமதத்தன் கையில் வாங்கியதும் அது மாயமாக மறைந்தது. அச்சங்கொண்ட பரமதத்தன் அவளை மரியாதைக்குரிய குருவாகக் கருதினான். அவள் சாதாரணப் பெண் அல்லள். தெய்வப் பெண், மனைவியல்ல தாய் என்று நினைத்துக் கொண்டு காலங்கழித்து வந்தான்.

வணிகம் நிமித்தம் வேறோரிடம் சென்ற பரமதத்தன் அங்கேயே தங்கி வணிகத்தில் சிறப்புற்றுச் செல்வம் ஈட்டி ஒரு பெண்ணை மணந்து கொண்டான். தனக்குப் பெண் மகவு பிறந்தபோது, அதுவரை புனிதவதிக்குத் தானிழைத்த துரோகத்திற்காக மனம் வருந்திக் கொண்டிருந்தவன், அம்மகவிற்குப் புனிதவதி என்றே பெயரிட்டான். தன் கணவன் திரும்பி வரவில்லையேயென்று நாடோறும் வருந்திக் கொண்டிருந்த புனிதவதி சிவதியானத்தில் காலங்கழித்து வந்தாள்.பாண்டிய நாட்டில் பரமதத்தன் வாழ்ந்து வரும் செய்தியறிந்த உற்றார் உறவினர், மனைவி கணவனுடன் இருப்பதே அவளது தர்மம் என்று, புனிதவதியை அவளது கணவன் ஊருக்கு அழைத்துச் சென்றனர். இதனையறிந்த பரமதத்தன் மனந்தடுமாறினான். பிறகு அச்சம் நீங்கி, உலகியல் பாவனையின்றி, வழிபடும் உணர்வுடன் அவளை எதிர்கொள்ளும்போதே அவள் பாதங்களில் விழுந்து வணங்கினான். வியப்பும் நாணமும் கொண்டு புனிதவதி நிற்க, அவளுடன் வந்தவர்கள் ஏனென்று கேட்க, நடந்ததைக் கூறிய பரமதத்தன் 'அவள் தெய்வம். மனைவியென்ற தொடர்பு கூடாது. குருவென்று கருதி குருவின் பெயரை ஜபிப்பதற்காகக் குழந்தைக்கு அப்பெயரிட்டேன்' என்றான்.

இதைக் கேட்ட புனிதவதி 'இறைவா எனக்கு ஏனிந்த நிலை தந்தாய்? இவ்வுடலழகு இனி யாருக்கு? இனியெதற்கு எனக்கு இவ்வழகு?' என்று தன் உடல் தசையினை உதறி எலும்பு வடிவமானாள். தேவர்கள் பூ மழை பொழிந்தனர். பூத கணங்களுடன் தானும் ஒருத்தி என்று மகிழ்ந்து திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் பாடினாள்.

கவியாற்றலுடையவளும் இறைஞானியுமாகிய காரிகால அம்மை கயிலை செல்ல விரும்பிச் சென்றாள். அவளைக் கண்டவர் அஞ்சி ஓடினர். வழியில் அவளைக் கண்டவர் மெல்லப் பேசும் ஒலி அவளது செவியில் விழுந்தது. அதைக் கேட்டு மனம் நொந்தாள் அவள். 'நான் எப்படியிருந்தால் இவர்களுக்கென்ன? என்னைச் சிவன் அறிந்து கொண்டால் போதும்' என்று கூறி அடியார் நடந்தவழியில் காலிடக் கூடாதென்று கருதித் தலையால் நடந்து சென்றார்.

தலையால் நடந்து வந்த புனிதவதியைக் கண்ட பார்வதி இவள் யார்? என்று கேட்க இவள் என்னைக் காப்பாற்றிய தாய் என்றான் சிவன். இதனைக் கேட்ட புனிதவதி 'அப்பா' என்று கூறி நிலமிசை விழுந்து வணங்கினாள். சிவன் அவளது சிவபக்திக்கு மெச்சி, வரங்கேள் என்றார். 'என்றைக்கும் உன்னிடம் பக்தி வேண்டும். பிறவாமை வேண்டும். நீ நடனம் ஆடும்போது நான் பாடல் பாட வேண்டும். இதற்குக் கருணை செய்' என்று வேண்டினாள். சிவன் மனமிசைந்து 'திருவாலங்காடு செல்' என்றான். அவ்வாறே காரிகாலம்மே அங்கு நடந்து சென்று சிவலாயத்தைக் கண்டு சிவனது ஆடலைப் பார்த்து, 'கொங்கை திரங்கி' முதலிய பாடல்களைப் பாடினாள். பாடிப் பாடிச் சிவனோடு ஒன்றாயினாள்.

தெலுங்கில் உள்ள இக்காரைக்காலம்மையார் வரலாறு, பெரிய புராணம் கூறும் வரலாற்றையே பெரிதும் சார்ந்திருப்பது தெளிவுபடுகின்றது.

---

3. மேற்கூறப்பெற்ற கருத்துக்களை எனக்குத் தெலுங்கு நூல்களிலிருந்து எடுத்துக் கூறிய டாக்டர் சி. மோகனா (தெலுங்குத் துறைப் பேராசிரியர், இராணிமேரி கல்லூரி) அவர்களுக்கு என் நன்றி.

# துணைநூற் பட்டியல்

**தமிழ் நூல்கள்**


ஆனந்த குமாரசுவாமி. **சிவானந்த நடனம்** (தமிழாக்கம் வித்தியாரத்தினம் நவாலியூர் கோ. நடராசன்) தமிழ்நாட்டு அரசின் சிறப்பிலக்கிய மொழி பெயர்ப்பு வெளியீடு - 2, 1990.

இராசமாணிக்கனார், மா., **சைவ சமய வளர்ச்சி**, பாரி நிலையம், சென்னை 1, 1972.

------------------------------ **பெரியபுராண ஆராய்ச்சி**, பாரி நிலையம், மு.ப.1948.

இராமலிங்கம், சி.,(தொகு) **சைவ சமயச் சொற்பொழிவுகள்**, சைவ சிந்தாந்த மகாசமாசம், 1979.

சபாபதி தேசிகர், தி.மு., **திருவாலங்காட்டுத் தல புராணம்**, 1975.

சிதானந்தமூர்த்தி, எம். **பசவண்ணர் வாழ்க்கை வரலாறு**, (கன்னட

சிவசண்முகம், சி. மூலத்திலிருந்து தமிழாக்கம்), காவ்யா வெளியீடு, 1984.

சுப்புலட்சுமி, ந., **பெரியபுராணத்தில் பெண்மை**, பாரி நிலையம், சென்னை, 1966.

மீனாட்சிசுந்தரனார், தெ.பொ. **தமிழும் பிற பண்பாடும்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 974.

முகளி, ரம்.ஸ்ரீ., **கன்னட இலக்கிய வரலாறு**, சாகித்திய அகாதமி, புது தில்லி.

வெள்ளைவாரணன், க. **பன்னிரு திருமுறை வரலாறு**, இரண்டாம் பகுதி, 8-12, திருமுறைகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1969.


**பஞ்சாங்கம்**


வாசன், எஸ்., **திருக்கணிதீ**

**இலக்கியங்கள்**

சேக்கிழார் — பெரியபுராணம் (சி.கே.எஸ். உரையுடன்) திருமலைச் சருக்கம், திருஞானசம்பந்தர் புராணம், காரைக்காலம்மையார் புராணம்.

**கழக வெளியீடு**

சிலப்பதிகாரம், 1973.
திருக்குறள், 1973.
பதினோராம் திருமுறை - காரைக்காலம்மையார் பாடல்கள்
பட்டினப்பாலை, 1972
மதுரைக்காஞ்சி, 1970.
மணிமேகலை, 1971.

**கன்னட நூல்கள்**

Latte, M.S. — Mahadevi Akka Mathu Karikalamma - ondu Doulamika Abyasa, Karnataka Viswa Vidyalaya, Dharwar, 1982.

Altekai, A.S. — The Position of women in Hindu Civilization from Pre-historic times to the present day, Motilal Banarasi Das, 1973.

Balasubramaniyam, C., — The Status of women in Tamil Nadu during the Sangam Age, University of Madras, 1976.

Rathinasababathy, V., — Arputhathiru of Karaikkal Ammaiyar, Reprinted from Indian Philosophical Annual volume - Seventeen, Radhakrishnan Institute for advanced study in Philosophy, University of Madras, 1984-85.

Sasivalli, S., — Karaikkal Ammaiyar, International Institute of Tamil Studies, Chennai, March 1984.

Great women of India, — Advaita Ashram, Himalayas, 1953.

Women Saints of East & West, Ramakrishna Vedanta Centre, London, 1955

ஆய்வேடு

இராசகோபாலன், வ., காரைக்காலம்மையாரின் சமுதாய மெய்ப்பொருளியற்கருத்துக்கள், பி.எச்.டி. பட்ட ஆய்வேடு, டாக்டர் எஸ். ஆர். மெய்யுணர்வு மேல்நிலைக்கல்வி நிலையம், சென்னைப் பல்கலைக்கழகம்.

சொற்பொழிவு

லீலாவதி, தி., திருஞானசம்பந்தர் திருப்பாடல்கள், அடூர் திரு. எம். இரத்தினசபாபதிப் பிள்ளை, பன்னிரு திருமுறை சைவ சித்தாந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1986.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

| | ரூ. பை. |
|---|---|
| சங்கத் தமிழர் வாழ்வியல் | 75.00 |
| தமிழக மேடைநாடகப் பெண் கலைஞர்கள் -குறிப்பேடு | 25.00 |
| A Grammar of Contemporary Literary Tamil | 80.00 |
| Cilappatikaram | 100.00 |
| காதம்பரி மூலமும் வசனமும் | 125.00 |
| Tani Pacura Togai | 30.00 |
| Dedication | 25.00 |
| Temple Chimes | 20.00 |
| Nala Venba | 45.00 |
| Tamil Heroic Poems | 40.00 |
| Six Long Poems from Sangam Tamil | 30.00 |
| Kurinci-P-Pattu-Muttollayiram | 40.00 |
| Kuruntokai | 110.00 |
| Landscape and Poetry | 50.00 |
| Tamil Culture and Civilization | 60.00 |
| Tolkappiyam and Astadhyayi | 110.00 |
| தமிழக மகளிர் தொடக்க காலமுதல் ஆறாம் நூற்றாண்டு வரை | 50.00 |
| தமிழில் நவீன நாடகம் | 70.00 |
| இலக்கியத்தில் சோதிடம் | 65.00 |
| சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | 80.00 |
| தொல்காப்பியம்-பொருள்-புறத்திணையியல் பகுதி - 1 | 50.00 |
| தொல்காப்பியம்-பொருள்-புறத்திணையியல் பகுதி - 2 | 65.00 |
| சோதிடவியல் | 70.00 |
| மூலிகைக் கற்பங்கள் | 80.00 |
| அமிர்த மதன கூத்து நாடகம் | 90.00 |
| சித்த மருத்துவ மணிகள் | 75.00 |
| கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவனை (முதல் தொகுதி) | 85.00 |
| Tamil Scripts - Work Book | 50.00 |
| Work Book Written Tamil | 50.00 |
| விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள் | 30.00 |
| திருக்கோயில்களில் தொழில் சமுதாய உறவுகள் | 25.00 |
| தமிழ்க் காட்சி நெறியியல் | 46.00 |
| இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள் | 30.00 |
| ஒப்பிலக்கியம்:கொள்கைகளும் செயல்முறைகளும் | 15.00 |
| கருணையம்மன் அந்தாதி | 22.00 |